Vol.7, Issue 2 | Annual Subscription ₹ 480
Rotary News, July 2024, Chennai

ஜூலை 2024

@NewsRotary /RotaryNewsIndia

# ரோட்டரி நியூஸ்

இந்தியா

www.rotarynewsonline.org



Rotary

Rotary Club of VIRUDHUNAGAR Dist- 3212



THE MAGIC OF ROTARY

# Congratulations



## Rtn Prof. R. Raja Govindasamy

District Governor, RID - 3000 (24-25)

**You will be a great District Governor**

A great deed of hosting the program '**Yadhumanaval**' during the first three days of your Governorship.

**Yadhumanaval Program - 1st, 2nd, 3rd July 2024**

**"Empowerment of women leads to development of a good family, good society and Ultimately, a good nation". - A.P.J Abdul Kalam.**

## *Yadhumanaval* • She is Everything

*Transforming shy caterpillars into beautiful butterflies*

Rotary strongly encourages partnership with like-minded Institutions and Corporates which support Rotary's Programmes. Empowering girls has been a major focus of Rotary in the recent years. Therefore the coming together of Rotary District 3212 and IDHAYAM, to empower young adults through a confidence and energy building Programme specially designed by an illustrious life skills facilitator, **Dr. Jayanthasri Balakrishnan**, titled "**Yadhumanaval**", is a great blessing indeed.

**Dr. Jayanthasri Balakrishnan** has touched the lives of 100,000 girls in India and Srilanka.

### Yadhumanaval Dates

R.C.of Madurai West | The Madura College, Madurai | 1st July 2024 - **80.0**

R.C.of Kodaikanal | Mother Teresa Women's University, Kodaikanal | 2nd July 2024 - **81.0**

R.C.of Dindigul Queencity | M.V.Muthiah Govt Arts College for Women, Dindigul | 3rd July 2024 - **82.0**



*Jayanthasri Balakrishnan*

" SHE PAVES A PATH FOR GIRL CHILDREN TO BECOME STRONGER VERSIONS OF THEMSELVES THROUGH HER MESMERIZING TALK. "

**IDHAYAM**

PROMISE OF HEALTH AND HAPPINESS

Get in Touch

Yadhumanaval Project Chairman
Rtn D.Vijayakumari
+91 94887 66388

LEKHA ads/July 24/Rotary-1

ADVT.

# உள்ளே


**12** ஸ்டெஃப்னி ஒரு விளையாட்டு ஆர்வலர்!

**20** ரோட்டரியின் 4வது ப்ரோக்ராம்ஸ் ஆஃப் ஸ்கேல்: இந்திய விவசாயத்திற்கான மானியம்

**34** ரோட்டரியை தவிர்க்க முடியாததாக மாற்றுங்கள்

**36** அமைதி, மகளிர்க்கு அதிகாரம், மனநலத்தில் கவனம் ஈர்த்த RI மாநாடு

**40** பிரெய்லில் சாகசம்

**50** உலகளாவிய மானியங்கள் உலகை எவ்வாறு பாதிக்கின்றன

**52** தொடர்ச்சி மற்றும் உறுப்பினர் சேர்க்கையில் டீ கமார்கோவின் கவனம்!

**54** RYLA-ல் வேடிக்கை, விளையாட்டு மகிழ்ச்சி, துள்ளல் இன்னும் பல

**58** பெண் தொழில்முனைவோரை மேம்படுத்துதல்

**64** விவசாயிகளின் வாழ்க்கைகளை மாற்றியமைக்கும் ரோட்டரி

**68** உங்கள் செல்லப்பிராணிகளை மாசுபாட்டிலிருந்து பாதுகாக்கவும்

**72** தசைகளை காப்பாற்ற பலப்படுத்தும் உடற்பயிற்சி

**74** சூரத்தில் பார்கின்சன் சிகிச்சை மையம்





Rotary

A publication of Rotary Global Media Network

## தலைவர் ஸ்டெஃபனியின் சுவாரஸ்யமான கட்டுரை

*RI தலைவர் ஸ்டெஃபனி அர்ச்சிக்கின் இந்தியா வருகை மற்றும் அவரை பற்றிய சுவாரஸ்யமான மற்றும் ஆழமான தகவல்களுக்கு நன்றி.*

*கட்டுரையில், ஒரு பார்வையில் என்ற துணைத்தலைப்பின் கீழ் அவருடைய அனைத்து ஆர்வங்களும் அழகாக விவரிக்கப்பட்டுள்ளன. அதிர்ஷ்டவசமாக, வரவிருக்கும் தலைவர் ரோட்டரி உறுப்பினர்களின் தரம் குறித்து தெளிவான யோசனையைக் கொண்டுள்ளார்; ரோட்டரிக்கு புதிய உறுப்பினர்கள் தேவை என்பதை அவர் ஒப்புக்கொள்ளும் அதே வேளையில், ரோட்டரியின் முக்கிய மதிப்புகள் மற்றும் சேவையில் அதன் அர்ப்பணிப்பு ஆகியவற்றைப் புரிந்து கொள்ளக் கூடிய சரியான நபர்களை சங்கங்கள் தேர்ந்தெடுக்க வேண்டும் என்பதை அவர் தெளிவுபடுத்துகிறார்.*

*அவர் சமீபத்தில் பெங்களூருவுக்குச் சென்று சங்க கூட்டங்களில் உரையாற்றியபோது, நன்றாகப் பேசி ரோட்டேரியர்களின் கேள்விகளுக்குப் பொருத்தமான முறையில் பதிலளித்தார். அவருடன் சிறிது நேரம் உரையாட எனக்கு ஒரு வாய்ப்பு கிடைத்தது, சங்கங்கள் தங்கள் இலக்குகளை அடைய 12 மாதங்களுக்கு மேல்*




*எடுத்தாலும், அவர்களின் சமூகங்களின் அவசரத் தேவைகளை நிவர்த்தி செய்ய ஊக்குவிப்பது தான் தனது விருப்பம் என்று அவர் என்னிடம் கூறினார். இந்தியாவில் உள்ள ரோட்டேரியர்களின் நம்பிக்கை நிலை மற்றும் உள்ளூர் சமூகங்களுக்கான சரியான சேவைத் திட்டங்களைத் தேர்ந்தெடுப்பதில் அவர்களின் புத்திசாலித்தனம் குறித்து அவர் தனது மகிழ்ச்சியை வெளிப்படுத்தினார்.*

R *சீனிவாசன்,* RC *பெங்களூர்*
J P *நகர்* — D 3191

*ஜூன் மாத இதழின் அட்டைப்படத்தில் நமது* RI *தலைவர் ஸ்டெஃபனியின் அழகிய புகைப்படத்தைப் பார்த்தது மகிழ்ச்சியாக இருந்தது. வெளியேறும்* RI *தலைவர் கார்டன் மெக்கினலி தனது கடைசிச் செய்தியில் போலியோவை முழுவதுமாக ஒழித்து, மனநலம், உலகளாவிய அமைதி முயற்சிகள் போன்றவற்றில் அதிக விழிப்புணர்வை ஏற்படுத்துவதன் மூலம் சமூகத்திற்கு நல்லது செய்வதில் கவனம் செலுத்தியுள்ளார்.* 17 *வயது சிறுவன் குடிபோதையில் கவனக்குறைவாக வாகனம் ஓட்டியதால் புனேவில் கார் விபத்துக்குள்ளானது குறித்த ஆசிரியரின் குறிப்பு நம் நாட்டில் அதிகாரமும் செல்வமும் எவ்வாறு ஆதிக்கம் செலுத்துகிறது என்பதை நன்கு விவரிக்கிறது.*

TRF *தலைவர் பேரி ரசின், எதிர்காலத்திற்காக பெரிய கனவு காண வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளார், அதே நேரத்தில்* RID *ராஜு சுப்பிரமணியன் உறுப்பினர் தக்கவைப்புக்கு அழைப்பு விடுத்துள்ளார். தலைவர் ஸ்டெஃபனியுடனான ஆசிரியரின் நேர்காணலும் அவரைப் பற்றிய பிற கட்டுரைகளும் மிகவும் சுவாரஸ்யமாக இருந்தன.*

*புகைப்படங்களும் வண்ணமயமாக இருந்தன.*

*பிலிப் முலப்போன்* M T, RC
*திருவனந்தபுரம் சப் அர்பன்* — D 3211

## நீதியின் கேலிக்கூத்து

குடிபோதையில் 17 வயது சிறுவன் அஜாக்கிரதையாக வாகனம் ஓட்டி இரண்டு இளைஞர்களைக் கொன்ற நெஞ்சை உருக்கும் சம்பவம் கண்டிக்கத்தக்கது. ஆனால் முதலில் குற்றவாளிகளுக்கு வழங்கப்பட்ட தண்டனை நமது நீதி அமைப்பை கேலிக்கூத்தாக்கியது. செல்வாக்கு மிக்க நபர்களை சட்டத்தின் நீண்ட கையிலிருந்து தப்பிக்க அனுமதிப்பது, சட்டத்தை அடிக்கடி மீறுவதற்கு அவர்களை தூண்டுகிறது. குற்றவாளிகள் விரைவில் தண்டிக்கப்பட வேண்டும்.

ராஜ் குமார் கபூர்
RC ரூப் நகர் — D 3080

செல்வாக்கு மிக்க நபர்களின் ஆதிக்கம் குறித்த ஆசிரியரின் குறிப்பான அழிவை ஏற்படுத்தும் செல்வாக்கு என் மீது பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியது. பதவி, பணம், செல்வாக்கு உள்ளவர்களின் ஒழுக்கக்கேடான செயல்கள் சாமானியனுக்கு தீங்கானது. செல்வாக்கைப் பயன்படுத்தி தண்டனையிலிருந்து தப்பிப்பது ஏற்றுக்கொள்ள முடியாதது.

R தாயுமானவன், RC கடலூர்
மிட் டவுன் — D 2981

மே இதழில் ஜெய்ஸ்ரீயின் மனநல சவால்களைப் புரிந்து கொள்வது பற்றிய கட்டுரை அருமை. ஒவ்வொரு பெற்றோரும் அறிந்திருக்க வேண்டிய பயனுள்ள தகவல்களை வெளியிட்டு இளைஞர்களை வழிநடத்தியதற்கு நன்றி. மேலும், அதிக கலோரியை எரிக்க சைக்கிள் என்ற கட்டுரையில், சைக்கிள் ஓட்டுவதால் ஏற்படும் நன்மைகள் மட்டுமின்றி, நமது உணவுப் பழக்கத்தை மாற்ற வேண்டியதன் அவசியத்தையும் விவரிக்கிறது.

G J கண்ணன், RC திண்டுக்கல்
வெஸ்ட் — D 3000

இளைஞர்களிடையே உள்ள மனநலப் பிரச்சனைகள் மற்றும் சவால்கள் பற்றிய கட்டுரை மிகவும் சுவாரஸ்யமாக இருந்தது. டாக்டர் லக்ஷ்மி விஜயகுமார் மனநோய்க்கு வழிவகுக்கும் மன அழுத்தத்தைக் குறைப்பதற்கான வழிகளை

*தனது பதவிக் காலத்தில் சாதித்த அனைத்தையும் பெருமையுடன் நினைவுகூர்ந்து, வெளியேறும் RI தலைவர் கார்டன் மெக்கினலி, பூஜ்ஜிய வழக்குகளை அடைவதற் கான "எண்ட் போலியோ நவ்" பிரச்சாரத்தை ஆதரிப்பதன் மூலம் உலக குழந்தைகளுக்கு அவர்கள் அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்ற ரோட்டரியர்களுக்கு ஒரு தெளிவான அழைப்பு விடுத்துள்ளார்.*

*உலக அமைதிக்கான ரோட்டரியின் தேடலில் அமைதியைக் கட்டியெழுப்புதல் மற்றும் ரோட்டரி அமைதி மையங்கள் நேர்மறையான தாக்கத்தை ஏற்படுத்துகின்றன என்று அவர் சரியாகக் கூறினார்.*

*V R T துரைராஜா*
*RC திருச்சிராப்பள்ளி — D 3000*

*RI தலைவர் ஸ்டெபனியைப் பற்றி படிப்பது சுவாரஸ்யமாகவும், ரோட்டரியின் நிகழ்ச்சிகள், திட்டங்கள் மற்றும் முகாம்களைப் பற்றி தெரிந்து கொள்வது குறிப்பிடத்தக்கதாகவும் இருந்தது. போர்ஷே ஹிட் அண்ட் ரன் வழக்கு பற்றிய தலையங்கத்தையும், காபுலின் வீழ்ச்சி கட்டுரையையும் படிப்பது சுவாரஸ்யமாக இருந்தது.*

*வெங்கடேஷ் M N, RC பெங்களூர் சவுத் வெஸ்ட் — D 3191*

விரிவாகப் பரிந்துரைத்துள்ளார்.

T D பாட்டியா, RC டெல்லி மயூர் விஹார் — D 3012

"நக்சல் நடமாட்டம் நிறைந்த பகுதியில் நம்பிக்கையை ஏற்படுத்துவோம் என்ற கட்டுரையைப் படித்தது மனதுக்கு இதமாக இருந்தது. நக்சல் பகுதிகளில் நடந்த என்கவுன்டர்கள் மற்றும் பல கொலைகள் பற்றிய செய்திகளைப் படிக்கும்போது எனக்கு வருத்தமாக இருக்கும். ராஜீவ் வார்பேயின் முயற்சி களுக்கு நான் தலை வணங்கு கிறேன்; இது ஒரு உன்னதமான நடவடிக்கையாகும்.

N ஜெயச்சந்திரன், RC மெட்ராஸ் சென்ட்ரல் — D 3232

பாரத ரத்னா மற்றும் முன்னாள் குடியரசுத் தலைவர் டாக்டர் APJ அப்துல் கலாமை இழிவுபடுத்தி ஜூன் மாத இதழில் குஜராத்தைச் சேர்ந்த ரோட்டேரியர் அல்லாத ஒருவர் எழுதிய கடிதம் வெளியிடப் பட்டிருக்கக்கூடாது. மதம், மொழி, பிரதேசம் என்ற தடைகளைத் தாண்டி நாட்டில் உள்ள அனைவராலும் விரும்பப்படும் ஒரு சிறந்த மனிதர் அவர்.

முரளி கிருஷ்ணா RV
RC மூட்பித்ரி — D 3181

ஜூன் இதழில் ராஜ்கோட்டைச் சேர்ந்த ரோட்டரியர் அல்லாத ஃபரூக் அப்துல்கஃபர் பவானி எழுதிய கடிதத்தால் நான் வெறுப்படை கிறேன். நமது முன்னாள் குடியரசுத் தலைவர் அப்துல் கலாமின் குணங்கள் மற்றும் பங்களிப்புகளை பற்றி உலகமே அறியும். மதச்சார்பற்ற மதிப்புகளுக்கு பெயர் பெற்ற ரோட்டரி இயக்கத்தில் கேள்விப்படாத மத உணர்வுகளைத் தூண்டும் வகையில் இருந்த கடிதத்தின் உள்ளடக்கம் மிகவும் இழிவானது.

M சண்முகம், RC தஞ்சாவூர் மிட் டவுன் — D 2981

## குறைந்தபட்ச வருகை அவசியம்

நான் 89 வயதான ரோட்டரியர், எனது சங்கத்தின் பட்டயத் தலைவர், மற்றும் ரோட்டரியில் 34 ஆண்டுகள் பணியாற்றியுள்ளேன். ஆர்வமில்லாத அல்லது நிறுவனத்தின் தத்துவத்தைப் புரிந்து கொள்ளாத புதிய உறுப்பினர்களால் ரோட்டரியின் மோசமான தரநிலைகள் குறித்து வேதனைப்படுகிறேன்.

முன்னதாக சங்க கூட்டங்களில் குறைந்தபட்ச வருகை கட்டாயமாக இருந்தது, ஆனால் இப்போது அது முற்றிலும் இல்லாமல் போய்விட்டது மற்றும் பெரும்பாலான ரோட்டேரி யர்களின் வருகை குறைவாக உள்ளது. ஆச்சரியப்படும் விதமாக, RMB (ரோட்டரி மீன்ஸ் பிசினஸ்)-ன் புதிய சங்கங்கள் முழுவதுமே முதன்மையாக அவர்களின் வணிக நலன்களை கருத்தில் கொண்டு இயங்குகின்றன, இது ரோட்டரி கொள்கைகளுக்கு முரணானது.

குறைந்தபட்ச வருகை கண்டிப்பாக அமல்படுத்தப்பட வேண்டும் என்று நான் கடுமையாக பரிந்துரைக்கிறேன். ரோட்டரியின் இலட்சியங்களுடன் ஒத்துப்போகாத பெரும் கூட்டத்தைக் காட்டிலும், குறைந்த எண்ணிக் கையிலான அர்ப்பணிப்புள்ள ரோட்டேரியர் களைக் கொண்டிருப்பது நல்லது.

நானுபாய் மேத்தா
RC தானே மிட் டவுன் — D 3142

## சிறந்த தலையங்கம்

*உங்கள் ஆசிரியர் குறிப்புகள் மற்றும் கட்டுரைகள் உணர்வுகளுக்கு ஒரு விருந்தாக உள்ளன, அது ஒருவரை நீங்கள் எழுதும் இடத்திற்கே கொண்டு செல்கின்றன.*

*சூசன் கோஷி, RC கோட்டயம் — D 3211*

ஜூலை **1, 2024** முதல், எங்கள் மின்பதிப்பு சந்தா ரூ.420-யிலிருந்து ரூ.**320** என திருத்தப்பட்டுள்ளது.

**அட்டையில்:**
RI தலைவர் ஸ்டெஃபனி அர்ச்சிக்

தங்கள் கருத்துக்கள் வரவேற்கப்படுகின்றன. மேலும் உங்கள் சங்கத்தின் நல திட்டங்கள் புகைப்படங்களுடன் rushbhagat@gmail.com அல்லது rotarynewsmagazine@gmail.com என்ற மின்னஞ்சலிற்கு அனுப்பலாம். WHATSAPP செய்திகள் ஏற்றுக்கொள்ளபடமாட்டாது. மேலும் ரோட்டரி செய்திகளை எங்கள் www.rotarynewsonline.org என்னும் இணைய தளத்தில் Rotary News Plus என்னும் இதழில் காணலாம்.

# RI தலைவரிடமிருந்து...



ஜூசி ஹெவிட்

## இன்னும் சிறந்த ஒரு தொலைநோக்குப் பாதையில்...

நாம் நம்முடைய சங்கங்களில் உள்ளடக்குதல் மற்றும் உரிமையுள்ளவர்களாக்குதல் உணர்வை வளர்க்கும் போது, ரோட்டரி மிகச் சிறப்பாகிறது. உண்மையில், உரிமையுள்ளவர்களாக்குதல்தான் ரோட்டரியின் மந்திரம் என்றுகூட நான் சொல்வேன்.

உள்ளடக்குதல், உரிமையுள்ளவர்களாக்குதலில் கவனம் செலுத்தும்போது, ஒரு பொது நோக்கத்தில் ஒன்றிணைதல் இன்னும் எளிதாகிறது. நாம் ஒருவருக்கு ஒருவர் உறுதிப்பாட்டுடன் செயல்படும் போது, நம் இலக்குகளில் கவனம் செலுத்தும்போது, நாம் மிகுந்த செயல்திறனுடன் இயங்குகிறோம்.

இதற்கு, ரோட்டரியின் செயல் திட்டம் உதவும். கருத்துகளைப் பெறுவதற்கு, உங்கள் சங்கத்தின் வலிமைகள், வலிமைக்குறைவுகளை மதிப்பிடு வதற்கு, சவால்களைக் கையாள்வதற்கு நீங்கள் பயன் படுத்தக்கூடிய கருவிகள் இந்தச் செயல் திட்டத்தில் உள்ளன.

உலகம் மாறிக்கொண்டிருக்கிறது. இந்த நேரத்தில் நம் சங்கங்கள் உறைந்து நிற்கக்கூடாது. ஆனால், நாம் செய்யவேண்டிய மாற்றங்கள் ஒரேமாதிரியும் வியூக அடிப்படையிலும் இருக்கவேண்டும், அவற்றை ஒன்றின் மீது ஒன்றாக அடுக்கி இன்னும் சிறந்த தொலைநோக்குப் பாதையில் நடக்கவேண்டும். அந்தத் தொலைநோக்கை நோக்கிப் பணியாற்றவும், உங்கள் சங்கத்துக்குள் செயல்திறன் மிக்க மாற்றத்தை உருவாக்கவும் செயல் திட்டம் உங்களுக்கு உதவும். செயல்திட்டத்தைப் பின்பற்றி, சமூகத்தினரின் அறிவுறுத்தல்களின்படி நடந்தால், அனைத்து ரோட்டரி உறுப்பினர்களும் தங்களுடைய சங்கங் களில் உரிமையுள்ளவர்களாக உணரவேண்டும் என்று நாம் விரும்பும் நிலையை வளர்ப்பதற்கு அது உதவும்.

அதனால்தான், பன்முகத்தன்மை, சமநிலை மற்றும் உள்ளடக்குதலுக்கான நம் உறுதிப்பாடு மிகவும் முக்கியமாகிறது. நம்முடைய வீச்சை விரிவாக்குவதன் முதல் படி, நாம் அனைவரும் மற்றவர்களுடைய நலனுக்கு உதவுவோம் என்று உறுதிகொள்வது. இதன்மூலம், இந்தச் சிக்கலான நேரங்களில் நாம் நேர்விதமான அமைதியைப் பரப்பலாம்.

நாம் உலகெங்குமுள்ள முன்னணிப் பல்கலைக்கழகங்களில் உள்ள நம் ரோட்டரி அமைதி மையங்களின் வழியாகத் தோழமைக் கல்வியை வழங்குகிறோம். இவற்றில் 1,800க்கும் மேற்பட்ட ரோட்டரி அமைதித் தோழர்கள் பட்டம் பெற்றுள்ளார்கள். ஒட்டோ மற்றும் ஃபிரான் வால்டர் அறக்கட்டளை வழங்கியுள்ள $15.5 மில்லியன் பரிசின்மூலம், நாம் இன்னும் பல பகுதிகளில் அமைதிக் கட்டமைப்பாளர்களுக்குத் தொடர்ந்து ஆதரவளிக்கலாம். இஸ்தான்புல்லில் உள்ள பஹ்செசெஹிர் பல்கலைக்கழகத்தில் நம்முடைய அடுத்த அமைதி மையம் அமையவுள்ளது.

அடுத்த ஆண்டு இஸ்தான்புல் மையத்தில் நடைபெறவுள்ள ரோட்டரி தலைமை அமைதிக் கருத்தரங்குக்கு நான் உங்களைப் பெருமையுடன் அழைக்கிறேன். ஃபிப்ரவரி 20 முதல் 22 வரை நடைபெறவுள்ள இந்த மூன்று நாள் கருத்தரங்கு, நம் ரோட்டரி குடும்பம் அமைதிக் கட்டமைப்பை முன்னெடுத்துச்செல்லும் பல வழிகளைச் சுட்டிக்காட்டும்.

உண்மையில், நாம் உலகில் அமைதியைக் கொண்டுவரவேண்டுமென்றால், இளம்பிள்ளை வாதத்தை முடித்துவைக்கவேண்டுமென்றால், உறுப்பினர் எண்ணிக்கையைப் பெருக்கவேண்டு மென்றால், மந்திரக் கோலை அசைத்துச் சில மந்திரங்களைச் சொன்னால் போதாது. இது நீங்கள் எடுத்துச் செய்யவேண்டிய பணி. நீங்கள் முடிக்கும் ஒவ்வொரு திட்டமும், நீங்கள் கொடையளிக்கும் ஒவ்வொரு டாலரும், நீங்கள் சேர்க்கும் ஒவ்வொரு புதிய உறுப்பினரும் அந்த மந்திரத்தை உருவாக்க உதவும்.

**ஸ்டெஃப்னி A அர்ச்சிக்**
தலைவர், ரோட்டரி இன்டர்நேஷனல்.



# வெப்ப அலைகளும் சூழல் பாதுகாப்பும்!

மனித இனத்தின் அதீத பேராசை, சுயநலம் மற்றும் சிந்தித்துச் செயல்படாமை ஆகியவை பேரழிவைத் தரும் பருவநிலை மாற்றத்துக்குப் பங்களிக்கின்றன என்பதை உலகின் பல பகுதிகளில் வீசிவரும் வெப்ப அலைகள் நினைவுபடுத்துகின்றன. முற்றிலும் உதவியற்ற நிலையில் இந்த கோடைக்காலத்தில் இந்தியாவில் பெரும்பாலான பகுதிகளில் அதிக அளவில் வெப்ப அலை வீசிவருவதை நாம் பார்த்து வருகிறோம். 37 நகரங்களில் வெப்ப அலை 45 டிகிரி செல்சியஸாக பதிவாகியுள்ளது. மேலும் சில நகரங்களில் வெப்ப அலை 50 டிகிரிக்கு மேல் சென்றதால் பள்ளிகளில் கோடை விடுமுறையை நீட்டிக்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. புதைப்படிவ எரிபொருள்களை எரிப்பது, காடுகளை அழிப்பது, பசுமைப் பகுதிகள் கட்டடங்களாக மாறியதுமே வெப்ப அலை வீசுவதற்கு முக்கிய காரணங்களாகும். மேலும் பசுமை இல்ல வாயுக்கள் அதிகரிப்பும் புவி வெப்பமாதலுக்கு காரணமாகின்றன. இவை இப்போது ஆபத்தான நிலையை எட்டியுள்ளன.

இந்தியாவில் உள்ள பணக்காரர்களில் பலர் கோடை காலத்தில், குளிர்பிரதேசங்களான ஐரோப்பிய நாடுகளில் சென்று தங்குவது வழக்கம். ஆனால், அங்கெல்லாம்கூட வெப்ப அலையின் தாக்கத்தால் பலர் உயிரிழக்க நேரிட்டுள்ளது. இந்தியாவில் ஊரகப் பகுதிகளைவிட நகர்ப்புற பகுதிகளில் உள்ளவர்கள் வெப்ப அலைகளால் அதிகம் பாதிக்கப்பட்டுள்ளனர். பசுமையான மரம், செடிகள், பூக்கள் நிறைந்து பூந்தோட்ட நகரம் என அழைக்கப்படும் பெங்களூருவில் கடந்த ஆண்டு வரலாறு காணாத அளவில் தண்ணீருக்கு நெருக்கடி ஏற்பட்டது அனைவரும் அறிந்ததே. தில்லியில் வெயில் ஒருபுறம் வாட்டிவதைக்க, குடிநீருக்கு கடும் தட்டுப்பாடு நிலவி வருகிறது.

இத்தகைய இருண்ட சூழலில், ரோட்டரியின் ஏழாவது மையப்புள்ளியாக சுற்றுச்சூழல் பாதுகாப்பு சேர்க்கப்பட்டுள்ள நிலையில், உலகெங்கிலும் உள்ள ரோட்டேரியன்கள் தாய் பூமியைக் காப்பாற்ற அர்த்தமுள்ள திட்டங்களைச் செயல்படுத்துவதில் ஈடுபட்டுள்ளனர் என்பது மகிழ்ச்சியளிக்கும் செய்தி. நீர் சேமிப்பு, நீர்வளத்தை பெருக்குதல், தடுப்பு அணைகள் கட்டுதல் மற்றும் நீர்நிலைகளை சீரமைத்தல், மரங்கள் மற்றும் காடுகளை வளர்த்தல் மற்றும் சுற்றுச்சூழல் மாசுபடுதலிலிருந்து மக்களை மீட்க பசுமைப் பூங்காக்களை உருவாக்குதல் ஆகியவை இதில் அடங்கும். சமீபத்திய இதழில் சுற்றுச்சூழல் நிலைத்தன்மை ரோட்டரி செயல்குழு மற்றும் TRF குழுவினர் சுட்டிக்காட்டியபடி பருவநிலை பாதுகாப்பு நடவடிக்கைகள் உமிழ்வை தடுப்பதுடன் மட்டுமல்லாமல், புதைபடிவ எரிபொருள்களால் ஏற்படும் காற்றுமாசுபடுதலை குறைத்து நமது ஆரோக்கியத்தையும் பாதுகாக்க உதவுகிறது.

இந்தியாவில் உள்ள சங்கங்கள் புகையில்லா அடுப்புகளை வழங்குவதற்கான திட்டங்களைச் செயல்படுத்தலாம். நேபாளத்தில் உள்ள RID 3292-க்கு உட்பட்ட ரோட்டரி சங்கங்கள் சர்வதேச மானிய உதவி மூலம் நீர்மின் சக்தியால் இயங்கும் அடுப்புகள் வழங்கும் திட்டத்தை செயல்படுத்தி வருகின்றன. மின்சார வாகனங்களுக்கான பேட்டரிகளை சார்ஜ் செய்யும் நிலையங்களுக்கு சங்கத்தின் மூலம் நிதியுதவி அளிப்பதன் மூலம் பெட்ரோலியப் பொருள்களால் ஏற்படும் மாசுபாடுகளை தடுப்பது மற்றொரு சிறந்த வழியாகும்.

நமக்கு உணவளித்து வரும் விவசாயிகளின் நிலையான வாழ்வாதாரத்துக் காகவும் நாட்டில் பசுமையை ஏற்படுத்தவும் இந்திய ரோட்டேரியன்கள் பணியாற்றி வருகின்றனர். TRF-ல் ஒவ்வொரு ஆண்டும் வழங்கப்படும் 2 மில்லியன் டாலர் மானிய உதவி இந்த ஆண்டு நிலையான விவசாயத்திற்காக தில்லி பிரீமியர் ரோட்டரி சங்கத்துக்கு வழங்கப்பட்டுள்ளது ஊக்கமளிப்பதாகும். ராஜஸ்தான் பாலைவனப் பகுதிகளில் தடுப்பு அணைகள் கட்டி, நீர்நிலைகளை இந்த ரோட்டரி சங்கம் எப்படி பாதுகாத்து வருகிறது என்பது பற்றிய விரிவான கட்டுரையை இந்த இதழில் காணலாம். இது விவசாயிகளின் வருமானத்தை கணிசமாக அதிகரிப்பதுடன் மட்டுமல்லாமல், விவசாயிகள் கிராமங்களிலிருந்து நகர்ப்புறங்களுக்கு இடம்பெயராமல் தடுக்கவும் உதவியுள்ளது.

ஆனால், இது ஒரு ஆரம்பம்தான். உற்சாகமான சங்கத்தின் உறுப்பினர்கள் ஏற்கெனவே நிலையான விவசாயத்திற்கான தங்கள் பணிகளை விரிவுபடுத்தும் நோக்கில் கார்ப்பொரேட் நிறுவனங்களின் சமூக பொறுப்புணர்வு (சி.எஸ்.ஆர்.) திட்டத்தின்கீழ் கூடுதலாக 2 மில்லியன் டாலர், அதாவது சுமார் ரூ.16 கோடி நிதி திரட்டியுள்ளனர். இது தொடர்பான நிறுவனங்கள் மேலும் ஆர்வம் காட்டி வருவதால் மேலும் தங்களுக்கு நிதி கிடைக்கும் என நம்பிக்கையுடன் உள்ளனர்.

இந்த சங்கத்துக்கு நல்வாழ்த்துக்கள்! வெற்றிக்கு கடவுள் துணையிருப்பார்!!

ரஷீதா பகத்

# கால்கரிக்கு வாருங்கள்



*எல்போ ரிவர் கேம்ப், கால்கரி*

தயாராகுங்கள், கனடாவில் பாறைகள் நிறைந்த மலையடி வாரத்தின் அழகிய பின்னணியில் நடைபெறவிருக்கும் மாநாட்டில் உங்களுடைய ரோட்டரி நண்பர் களைச் சந்திக்கத் திட்டமிடுங்கள்!

ஆம், ரோட்டரி இன்டர்நேஷனல் மாநாடு 1988 குளிர்கால ஒலிம்பிக்ஸ் நடைபெற்ற இடமும், தன்னுடைய மிதிவண்டிப் பண்பாடு, வலுவான உள்நாட்டுப் பாரம்பரியத்துக்குப் புகழ் பெற்ற நகரமுமான கால்கரிக்கு இரண்டாவதுமுறையாக வருகிறது. ஜூன் 21 முதல் 25 வரை நடை பெறவுள்ள ரோட்டரியின் தனித் துவமான இந்த நிகழ்வைப் பயன் படுத்திச் சங்கங்கள் உறுப்பினர் எண்ணிக்கையை மேம்படுத்தலாம்.

இதற்குமுன் 1996ல் இந்த மாநாடு இந்த நகரத்தில் நடைபெற்றுள்ளது. இந்த மாநாட்டின் ஏற்பாட்டாளர்கள், மாநாடு முழுவதும் ரோட்டரி பற்றிய விழிப்புணர்வைத் தூண்டுவதற்கென ஊக்கம் அளிக்கும் சமூகத் திட்டங் களைக் காட்சிப்படுத்துவார்கள், இதற்கு நீங்களும் உதவலாம். சமீபத்தில் விரிவாக்கப்பட்ட BMO மையத்தில் நடைபெறும் மிகப் பெரிய நிகழ்வுகளில் ஒன்றாக இது அமையும். நீங்கள் இதில் கலந்துகொள்ளும்போது, ரோட்டரியின் நல்ல பணியைப் பற்றிய செய்தியைப் பரப்ப உதவுவீர்கள். அத்துடன், கால்கரி ஸ்டாம்பேட் கோடை ரோடியோவுக்குப் புகழ் பெற்ற இந்த நகரத்தில் பல மகிழ்ச்சி நிகழ்வுகளையும் நீங்கள் காண்பீர்கள். பல பயணிகள் கால்கரியில் தொடங்கி ஒரு மேற்குக் கனடா ரயில் பயணத்தை மேற்கொள்கிறார்கள், அல்லது, அப்பயணத்தைக் கால்கரியில் முடிக்கிறார்கள். வட அமெரிக்காவின் ஒரு பகுதியை ஆராய்வதற்குக் கால்கரி ஒரு சிறந்த தொடக்கப் புள்ளியாகும். புகழ் பெற்ற கனடிய மேபிள் சிரப் புட்டியுடன் இங்கிருந்து வீட்டுக்குக் கிளம்பும் நீங்கள், வழியில் கதகதப்பான ஹவாயி அல்லது மெக்சிகோ-வையும் பார்த்துவிட்டுச் செல்வது இன்னும் இனிமையாக இருக்கும்.

**மேலும் தெரிந்துகொள்ள பதிவு செய்ய:**
convention.rotary.org



**ஆளுநர் குழு**

RID 2981 பாஸ்கரன் S
RID 2982 சிவகுமார் V
RID 3000 ராஜா கோவிந்தசாமி R
RID 3011 மகேஷ் திரிகா
RID 3012 பிரசாந்த் ராஜ் ஷர்மா
RID 3020 வெங்கடேஸ்வர ராவ் M
RID 3030 ராஜீந்தர் சிங் குரானா
RID 3040 அனீஷ் மலிக்
RID 3053 ராகுல் ஸ்ரீவஸ்தவா
RID 3055 மோகன் பராஷர்
RID 3056 ராக்கி குப்தா
RID 3060 துஷார் ஷா
RID 3070 பர்மிந்தர் சிங் குரோவர்
RID 3080 ராஜ்பால் சிங்
RID 3090 சந்தீப் சௌஹான்
RID 3100 தீபா கண்ணா
RID 3110 நீரவ் நிமேஷ் அகர்வால்
RID 3120 பரிதோஷ் பஜாஜ்
RID 3131 ஷீத்தல் ஷரத் ஷா
RID 3132 சுரேஷ் ஹேரலால் சாபூ
RID 3141 சேட்டன் தேசாய்
RID 3142 தினேஷ் மேத்தா
RID 3150 சரத் சௌத்ரி கட்ராகட்டா
RID 3160 சாது கோபால கிருஷ்ணா
RID 3170 சரத் பாய்
RID 3181 விக்ரம்தத்தா
RID 3182 தேவ் ஆனந்த்
RID 3191 சதீஷ் மாதவன்
RID 3192 மகாதேவ பிரசாத் N S
RID 3201 சுந்தரவடிவேலு N
RID 3203 சுரேஷ் பாபு S
RID 3204 சந்தோஷ் ஸ்ரீதர்
RID 3211 சுதி ஜப்பார்
RID 3212 மீரான் கான் சலீம்
RID 3231 ராஜன்பாபு M
RID 3233 மகாவீர் போத்ரா
RID 3234 சரவணன் N S
RID 3240 சுக்மிந்தர் சிங்
RID 3250 பிபின் சாச்சன்
RID 3261 அகில் மிஸ்ரா
RID 3262 யக்ஞன்சிஸ் மோஹாபத்ரா
RID 3291 கிருஷ்ணேந்து குப்தா

அச்சு மற்றும் பதிப்பாளர் **P T பிரபாகர்** (முகவரி: 15 சிவசாமி சாலை, மைலாப்பூர் சென்னை-4). துகார் டவர்ஸ், 3-வது தளம், 34, மார்ஷல்ஸ் ரோடு, எழும்பூர், சென்னை-600 008-யில் இயங்கும் ரோட்டரி நியூஸ் ட்ரஸ்ட் சார்பில் ராசி கிராபிக்ஸ் பி லிட், 40, பீட்டர்ஸ் ரோடு, ராயப்பேட்டை, சென்னை- 14 என்ற முகவரியில் அச்சிடப்படுகிறது. ஆசிரியர்: **ரஷீதா பகத்.**

கட்டுரைகளை திருத்தவோ/ சுருக்கவோ ஆசிரியருக்கு முழு உரிமை உண்டு. இதழில் வெளியாகும் கட்டுரைகளை RNT அனுமதியுடன் மட்டும் மறுபதிப்பு செய்யலாம்.

Printed and published by PT Prabhakar, 15 Sivaswamy Street, Mylapore, Chennai 600004, on behalf of Rotary News Trust and printed at Rasi Graphics Pvt Ltd, 40, Peters Road, Royapettah,Chennai - 600 014, India, and published at Rotary News Trust, Dugar Towers, 3rd Floor, 34, Marshalls Road, Egmore, Chennai 600 008. Editor: Rasheeda Bhagat.

**அறங்காவலர் குழுவினர்**

T N ராஜு சுப்ரமணியன் RID 3141
RI இயக்குனர் மற்றும்
RNT தலைவர்
அனிருதா ராய்சௌத்ரி RID 3291
RI இயக்குனர்
Dr பரத் பாண்ட்யா RID 3141
TRF அறங்காவலர்
ராஜேந்திர K சாபூ RID 3080
கல்யாண் பானர்ஜி RID 3060
சேகர் மேத்தா RID 3291
அசோக் மஹாஜன் RID 3141
P T பிரபாகர் RID 3232
Dr மனோஜ் D தேசாய் RID 3060
C பாஸ்கர் RID 3000
கமல் சங்வி RID 3250
Dr மகேஷ் கோட்பாகி RID 3131
A S வெங்கடேஷ் RID 3232
குலாம் A வஹன்வதி RID 3141

**RI Directors-elect**

முருகானந்தம் M RID 3000
நாகேஷ் K P RID 3191

**செயற்குழு உறுப்பினர்கள்** (2024–25)

மகாதேவ பிரசாத் N S RID 3192
தலைவர், ஆளுநர் குழு
அகில் மிஸ்ரா RID 3261
செயலாளர், ஆளுநர் குழு
ராஜா கோவிந்தசாமி R RID 3000
பொருளாளர், ஆளுநர் குழு
ராக்கி குப்தா RID 3056
ஆலோசகர், ஆளுநர் குழு

**ஆசிரியர்**
ரஷீதா பகத்

**துணை ஆசிரியர்**
ஜெய்ஸ்ரீ பத்மநாபன்

**நிர்வாகம் மற்றும் விளம்பர மேலாளர்**
K விஸ்வநாதன்

ரோட்டரி நியூஸ், துகார் டவர்ஸ்,
3-வது தளம், 34, மார்ஷல் சாலை,
எழும்பூர், சென்னை-8, இந்தியா
தொலைபேசி: 044 42145666
*rotarynews@rosaonline.org*
*www.rotarynewsonline.org*

Contributions is welcome but will be edited. Content can be reproduced with permission and attributed to RNT.





# மாயாஜாலத்தை அனுபவிக்கும் நேரம்

நம் அனுபவமுள்ள உறுப்பினர்கள் ஒரு முக்கியப் பொறுப்பைக் கொண்டுள்ளனர்: அது புதிய உறுப்பினர்களை அன்புடன் வரவேற்பதும் மற்றும் சுறுசுறுப்பாக ஈடுபடுத்துவது மாகும், தொடக்கத் திலிருந்தே அவர்கள் மதிப்பு மிக்கவர்களாகவும் ஒருங்கிணைந்தவர் களாகவும் உணருவதை உறுதிசெய்ய வேண்டும். ஒவ்வொரு உறுப்பினரும் ரோட்டரியில் ஒரு தனித்துவமான லட்சியத்துடன் இணைகிறார்கள்-அது சேவையின் மீதான ஆர்வம், கூட்டுறவுக்கான தேடுதல், நீடித்த நட்பை உருவாக்குவதற்கான விருப்பம் அல்லது தனிப்பட்ட வளர்ச்சிக்கான பயணம் என எதுவாகவும் இருக்கலாம். இந்த உந்துதல்களை வளர்ப்பது நமது கூட்டுக் கடமையாகும், அவர்கள் காலப்போக்கில் பரிணாம வளர்ச்சி பெறுகிறார்கள் என்பதைப் புரிந்து கொண்டு, ஒரு சங்கமாக நம்மை இணைக்கும் உறவுகளை பலப்படுத்த வேண்டும்.

திட்ட முன்னணி ஒருங்கிணைப் பாளர்கள் மற்றும் செயல்திட்ட சாம்பியன்கள் போன்ற புதுமையான பாத்திரங்களை அறிமுகப்படுத்துவது, மூலோபாய வளர்ச்சி மற்றும் கூட்டுச் சாதனைக்கான நம் அர்ப்பணிப்பை எடுத்துக்காட்டுகிறது. மாவட்டங்கள் மற்றும் சங்கங்கள் முழுவதும் நெருக்கமாகப் பணியாற்றுவதன் மூலம், லட்சியமான பல்லாண்டு இலக்குகளை அடைவதற்கும், ஒவ்வொரு சங்கம் மற்றும் உறுப்பினர்களுக்கும் எதிரொலிக்கும் செயல் திட்டங்களைச் செயல்படுத்து வதற்கும் தெளிவான பாதையை உருவாக்குவோம்.

இந்தப் புதிய ஆண்டைத் தழுவும்போது, அது தரும் புதிய வாய்ப்புகளைப் பயன்படுத்தி, தவிர்க்க முடியாத சவால்களை விடமுயற்சி மற்றும் புதுமையுடன் எதிர்கொள்வோம். இளைஞர் முயற்சிகள் மற்றும் ரோட்டரி சமூகப் படைகள் (RCC) முதல் பெருநிறுவனக் கூட்டணிகள், அரசாங்க ஒத்துழைப்புகள் மற்றும் NGO கூட்டாண்மைகள் வரை பல்வேறு துறைகளில் அதிநவீன தொழில்நுட்பங்களைத் தழுவி, கூட்டாண்மைகளை வளர்த்துக் கொள்ளுங்கள். இது நமது தாக்கத்தை அதிகரித்து சமூகத்தில் நமது நிலையை உயர்த்தும்.

நாம் மேற்கொள்ளும் பல திட்டங்களுக்கு மத்தியில், நமது உலகளாவிய தலைவரான ஸ்டெஃபனி அர்ச்சிக்கின் கிளர்ச்சியூட்டும் அழைப்புக்கு செவிசாய்ப்போம். நமது செயல் திட்டத்தின் உருமாறும் சக்தியை வெற்றிபெறச் செய்வோம், தொடர்ச்சிக்கும் மாற்றத்திற்கும் இடையே சமநிலையைக் கண்டறிந்து, நேர்மறையான அமைதிக்காகப் பணியாற்றுவோம். கடந்த கால சாதனைகளை முறியடிக்க நம்பிக்கையுடனும், உறுதியுடனும் எடுக்கப்பட்ட துணிச்சலான நடவடிக்கைகளால் இந்த ஆண்டு குறிக்கப்படட்டும்.

ரோட்டரியின் மாயாஜாலத்தை தொடங்கி, வெகு தொலைவில் எதிரொலிக்கும் நேர்மறையான மாற்றத்தின் அலைகளை உருவாக்குவதற்கான தருணம் இது.

**அனிருதா ராய்சௌத்ரி**
RI இயக்குனர் 2023–25

# நமக்கு ஆற்றல் அளிக்கும் எஞ்சின்



இந்த மாதம், ரோட்டரியின் மந்திரத்தைக் கொண்டாடும் ஒரு புதிய பயணத்தை நாம் சேர்ந்து தொடங்குகிறோம். ரோட்டரி என்பது நீங்கள் பெருமையுடன் ஓட்டுகிற ஓர் அழகிய கார் என்றால், ரோட்டரி அறக்கட்டளைதான் நீங்கள் தேர்ந்தெடுத்துள்ள இடத்துக்கு அதை ஓட்டிச்செல்கிற எஞ்சின். அந்த ரோட்டரி அறக்கட்டளைக்கு ஆற்றல் அளிப்பது, ரோட்டரியின் வலிமைகள், குறிப்பாக, நீங்களும் உங்களைப்போன்ற 1.4 மில்லியன் சிறந்த உறுப்பினர்களும்தான்.

பல புதிய உறுப்பினர்களைப்போல், நானும் ரோட்டரியில் சேர்ந்தபோது ரோட்டரி அறக்கட்டளையைப் பற்றி மிகக் குறைவாகத்தான் அறிந்திருந்தேன். ஆனால், அது 1985ல் மாறிப்போனது. அந்த ஆண்டில் தான், என் சங்கத்தின் உள்வரும் தலைவர் என்ற முறையில் நான் என் மனைவி கே-உடன் என்னுடைய முதல் RI மாநாட்டில் கலந்து கொண்டேன். அந்த மாநாடு மிசௌரியில் உள்ள கன்சாஸ் நகரத்தில் நடைபெற்றது. இளம்பிள்ளை வாதத்தைத் தடுக்கும் வாய்வழி மருந்தை உருவாக்கிய டாக்டர் ஆல்பர்ட் சபின், உலகக் குழந்தைகளுக்குத் தடுப்பு மருந்து வழங்கும்படி ரோட்டரியைக் கேட்டுக்கொண்டபோது, பார்வையாளர்கள் அவருக்கு வழங்கிய பெரும் ஆதரவை நாங்கள் எப்போதும் மறக்கமாட்டோம். அதன்மூலம், போலியோப்ளஸ் பிறந்தது, உலகெங்குமுள்ள குழந்தைகளுக்கு ரோட்டரியின் உறுதிப்பாட்டில் முக்கியமான கணம் அது. நான் அங்கு இருந்தேன்.


உலகம்முழுவதும் இன்னும் நல்லவற்றைச் சாதிப் பதற்கென, நம் அறக்கட்டளையின் அறங்காவலர்கள் 2024–25ல் $500 மில்லியன் நிதி திரட்டுவது என்னும் உயர்ந்த இலக்கை அமைத்துள்ளார்கள். இந்த இலக்கை எட்டுவதற்கு, உங்கள் ஆதரவும் தேவைப்படும். 2025க்குள் நன்கொடை நிறுவல் நிதியை $2.025 பில்லியனுக்குக் கட்டமைக்கும் நம் இலக்கை எட்டவும் இது நமக்கு உதவும். அறக்கட்டளைக்கான நிதி ஆதரவை இந்த ஆண்டுமுழுவதும் முன்னிலையில் வைத்திருப்பதற்கென, நான் மார்க்கின் மந்திரக் குறியீடுகளை உருவாக்கி யுள்ளேன். உங்களால் இயன்ற தொகையை 31 ஆகஸ்டுக்குள் ஆண்டு நிதிக்கு வழங்குங்கள்.

இந்த ஆண்டு, உலகெங்கும் நம்மை அழைத்துச் சென்று நன்மை செய்யவைக்கும் எஞ்சினுக்கு நாம் எரிபொருள் நிரப்புவோம். அறக்கட்டளைமுழுவதும் ரோட்டரியின் மந்திரத்தைச் செயல்படுத்துவோம்.

**மார்க் மலோனி**
TRF அறங்காவலர் தலைவர்



# கூட்டு நடவடிக்கையின் சக்தி



நாம் ஒரு புதிய ரோட்டரி ஆண்டில் நுழையும்போது, நமது கடந்தகாலத்தைப் பரிசீலித்து, அதை அடிப்படையாகக் கொண்டு, எதிர்காலத்தை நோக்கி முன்னேற வேண்டிய நேரம் இதுவாகும். அது முன்னெப்போதையும் விட ரோட்டரி மதிக்கப்படும் மற்றும் முக்கிய பங்கு வகிக்கும் எதிர்காலம். அதற்கான பெருமை ரோட்டரி அறக்கட்டளையையே சேரும்.

அறக்கட்டளை RI இன் தொண்டு நிறுவனமாக செயல்படுகிறது.

TRF அதன் மானியத் திட்டத்தின் மூலம், ஒரு சிறந்த உலகம், சிறந்த சமூகம் மற்றும் ஒரு சிறந்த எதிர்காலத்தை பற்றிய நமது கனவுகளை நனவாக்க ரோட்டரிக்கு தொலைநோக்குப் பார்வையை வழங்குகிறது.


ப்ரோகிராம்ஸ் ஆஃப் ஸ்கேல் என்பது ஒரு தாக்கத்தை ஏற்படுத்தக்கூடிய, நிலையான பிரதிபலிப்புத் திட்டத்திற்கு வழங்கப்படும் 2 மில்லியன் TRF மானியமாகும். உலகளவில் போட்டி அடிப்படையில் ஒரே ஒரு மானியம் மட்டுமே வழங்கப்படுகிறது. இந்தியாவில் நீர் அணுகல் மற்றும் சிறந்த அறுவடைக்கான கூட்டாளர்கள் என்ற திட்டத்திற்காக RC டெல்லி பிரீமியருக்கு (RCDP) ப்ரோகிராம்ஸ் ஆஃப் ஸ்கேல் விருது வழங்கப்பட்டுள்ளது என்பதை பகிர்ந்து கொள்வதில் மகிழ்ச்சி அடைகிறேன். இந்தியாவுக்கு இது பெருமையான தருணம். வாழ்த்துக்கள் RCDP.

**TRF-க்கு நாம் பங்களிக்கும் மூன்று நிதிகள் உள்ளன என்பது உங்களுக்குத் தெரியும்:**
**வருடாந்திர நிதி –** இன்று வருடாந்திர நிதியத்திற்கான நமது பங்களிப்பு நாளை உலகளாவிய மானியங்களைச் செய்ய உதவுகிறது. மேலும் உலகளாவிய மானியங்கள் TRF-ன் கேம் சேஞ்சர்களாக உள்ளன; **போலியோ நிதி –** உலகை போலியோ இல்லாததாக மாற்றுவோம் என்பது உலக குழந்தைகளுக்கு நாம் அளிக்கும் வாக்குறுதி; **எண்டோவ்மென்ட் நிதி –** எண்டோவ்மென்ட் நிதிக்கான நம் ஆதரவு TRF இன் எதிர்காலத்தை உறுதி செய்கிறது.

TRF-ன் மூன்று நிதிகளையும் நீங்கள் அனைவரும் ஆதரிக்க வேண்டும் என்பதே எனது வேண்டுகோள்.

கூட்டு நடவடிக்கை மற்றும் பரோபகாரத்தின் சக்திக்கு TRF ஒரு சான்றாக இருக்கிறது. அதன் பரந்த அளவிலான திட்டங்கள் மற்றும் முன்முயற்சிகள் மூலம், அது தொடர்ந்து நிலையான வளர்ச்சியை ஊக்குவித்து, உலகம் முழுவதும் அமைதி மற்றும் நல்லெண்ணத்தை மேம்படுத்துகிறது. அதுவே ரோட்டரி அறக்கட்டளையின் மாயாஜாலமாகும்.

**பரத் பாண்ட்யா**
TRF அறங்காவலர்




## உலக ரோட்டரி எண்ணிக்கை

| | | |
|---|---|---|
| ரோட்டரி சங்கங்கள் | : | **36,978** |
| ரோட்டராக்ட் சங்கங்கள் | : | **10,634** |
| இன்டராக்ட் சங்கங்கள் | : | **14,613** |
| ரோட்டரி கம்யூனிட்டி கார்ப்ஸ் (RCC) | : | **13,460** |
| ரோட்டரியினர் | : | **1,181,186** |
| ரோட்டராக்டர்கள் | : | **162,325** |
| இன்டராக்டர்கள் | : | **326,191** |

*As on June 17, 2024*

## ரோட்டரி உறுப்பினர் எண்ணிக்கை

As on June 1, 2024


| RI District | Rotary Clubs | No of Rotarians | Women Rotarians (%) | Rotaract Clubs | Rotaract Members | Interact Clubs | RCC |
|---|---|---|---|---|---|---|---|
| 2981 | 140 | 6,033 | 6.03 | 73 | 504 | 32 | 254 |
| 2982 | 87 | 3,923 | 6.07 | 44 | 909 | 86 | 186 |
| 3000 | 145 | 6,121 | 11.89 | 106 | 1,815 | 214 | 217 |
| 3011 | 137 | 5,154 | 30.29 | 87 | 2,452 | 159 | 39 |
| 3012 | 167 | 4,207 | 24.67 | 78 | 1,139 | 101 | 61 |
| 3020 | 84 | 4,879 | 8.05 | 41 | 818 | 112 | 351 |
| 3030 | 101 | 5,770 | 16.66 | 56 | 1,000 | 480 | 386 |
| 3040 | 98 | 2,404 | 14.23 | 40 | 809 | 54 | 214 |
| 3053 | 74 | 2,992 | 16.71 | 27 | 414 | 39 | 131 |
| 3055 | 78 | 3,207 | 12.63 | 70 | 1,089 | 46 | 378 |
| 3056 | 87 | 3,840 | 24.58 | 34 | 450 | 98 | 201 |
| 3060 | 103 | 5,215 | 15.95 | 67 | 2,305 | 66 | 144 |
| 3070 | 119 | 3,282 | 15.51 | 49 | 570 | 55 | 63 |
| 3080 | 109 | 4,384 | 12.61 | 66 | 1,925 | 166 | 126 |
| 3090 | 128 | 2,707 | 5.87 | 21 | 374 | 258 | 166 |
| 3100 | 112 | 2,222 | 10.76 | 13 | 58 | 34 | 151 |
| 3110 | 141 | 3,825 | 11.84 | 18 | 127 | 55 | 109 |
| 3120 | 89 | 3,788 | 16.00 | 48 | 587 | 25 | 55 |
| 3131 | 144 | 5,808 | 33.40 | 131 | 3,181 | 258 | 151 |
| 3132 | 93 | 3,819 | 14.04 | 44 | 638 | 102 | 214 |
| 3141 | 116 | 6,419 | 27.87 | 141 | 6,046 | 170 | 241 |
| 3142 | 110 | 3,989 | 21.84 | 64 | 2,275 | 108 | 97 |
| 3150 | 110 | 4,352 | 13.69 | 101 | 2,012 | 113 | 130 |
| 3160 | 80 | 2,639 | 8.75 | 32 | 258 | 95 | 82 |
| 3170 | 149 | 6,717 | 15.24 | 126 | 2,020 | 172 | 180 |
| 3181 | 89 | 3,730 | 10.86 | 47 | 505 | 88 | 121 |
| 3182 | 86 | 3,717 | 10.71 | 48 | 249 | 86 | 103 |
| 3191 | 94 | 3,489 | 18.14 | 70 | 1,940 | 132 | 35 |
| 3192 | 86 | 3,612 | 21.59 | 89 | 2,431 | 145 | 40 |
| 3201 | 176 | 6,865 | 9.96 | 139 | 2,606 | 101 | 95 |
| 3203 | 96 | 5,049 | 7.31 | 50 | 933 | 115 | 39 |
| 3204 | 79 | 2,606 | 6.75 | 24 | 237 | 14 | 13 |
| 3211 | 161 | 5,274 | 8.72 | 9 | 97 | 22 | 135 |
| 3212 | 125 | 4,770 | 11.66 | 102 | 3,799 | 185 | 153 |
| 3231 | 96 | 3,487 | 7.11 | 42 | 569 | 39 | 417 |
| 3232 | 188 | 6,569 | 20.99 | 128 | 4,500 | 127 | 102 |
| 3240 | 104 | 3,553 | 17.17 | 47 | 709 | 44 | 234 |
| 3250 | 108 | 4,212 | 21.94 | 63 | 1,003 | 58 | 191 |
| 3261 | 100 | 3,422 | 23.50 | 26 | 275 | 26 | 45 |
| 3262 | 117 | 3,907 | 15.64 | 81 | 830 | 642 | 287 |
| 3291 | 145 | 3,912 | 26.41 | | | 78 | 751 |
| **India Total** | **4,651** | **175,870** | | **2,542** | **54,458** | **5,000** | **7,088** |
| 3220 | 70 | 2,041 | 17.49 | 97 | 4,242 | 115 | 77 |
| 3271 | 112 | 1,548 | 21.51 | 196 | 2,061 | 275 | 28 |
| 0063 (3272) | 129 | 1,499 | 17.88 | 97 | 1,233 | 22 | 49 |
| 0064 (3281) | 332 | 7,081 | 17.65 | 249 | 1,701 | 117 | 214 |
| 0065 (3282) | 180 | 3,512 | 9.94 | 179 | 1,305 | 24 | 47 |
| 3292 | 157 | 5,613 | 18.99 | 185 | 5,435 | 110 | 137 |
| **S Asia Total** | **5,631** | **197,164** | **15.98** | **3,545** | **70,435** | **5,663** | **7,640** |

*Source: RI South Asia Office*

# ஸ்டெஃப்னி ஒரு விளையாட்டு ஆர்வலர்!

டயானா ஸ்கோபெர்க்

*ஒரு தீவிர விளையாட்டு ரசிகரான தலைவர் ஸ்டெஃப்னி அர்ச்சிக், தெளிவான தளத்தை உருவாக்குவது மற்றும் நீதி, நேர்மையை கடைப் பிடிப்பதில் தன்னை நிலைநிறுத்திக் கொண்டவர். ரோட்டரியை வெற்றியாளரின் வட்டத்தில் வைத்திருப்பதில் கண்ணும் கருத்துமாக இருப்பவர்.*




RI *தலைவர் ஸ்டெஃப்னி அர்ச்சிக் மற்றும் அவரது சங்க உறுப்பினர் கிரெக் இன்கார்டோனா.*

அது ஒரு குளிர்நிறைந்த ஜனவரி மாத இரவு. சிகாகோவில் பூஜ்யம் டிகிரி பாரன்ஹீட்டுக்கு கீழே தொடர்ச்சியாக இரண்டாவது முறையாக குளிர் நிலவிய நேரம்.

பள்ளிகள் மூடப்பட்டுள்ளன. நிகழ்ச்சிகள் ரத்துச் செய்யப் பட்டுள்ளன. விமானங்கள் தரை யிறக்கப்பட்டன. வெளியே பனிப் பொழிவு, ஆனால், ஸ்டெஃப்னி அர்ச்சிக் இருக்கும் வளாகத்தின் உள்ளே மகிழ்ச்சிக் கொண்டாட்டம்.

ஸ்டெஃப்னி ஜீன்ஸ் மற்றும் பிட்ஸ்பர்க் ஸ்டீலர்ஸ் டீ ஷர்ட் அணிந்திருக்கிறார். அதில் "மேஜிக் ஆஃப் ரோட்டரி" என்னும் எழுத்து பொறிக்கப்பட்டுள்ளது. அவரது தோள்களில் ஒன்றின் மேல் மஞ்சள் டவல் இருந்தது. அமெரிக்க கால்பந்து அணியின் தீவிர ரசிகர்கள் தங்கள் அணியை வரவேற்பதற்காக வைத்திருக்கும் சிறிய துண்டு அது. எப்போதாவது ஆரவாரம் அல்லது குமுறல் அவர்களின் உரையாடலை தடுக்கிறது.

ஸ்டீலர்ஸ் மற்றும் பஃப்பல்லோ பில்ஸ் இடையிலான பிளே ஆஃப் போட்டி அமெரிக்காவில் நிலவும் கடுங்குளிர் காரணமாக ஏற்கெனவே ஒருமுறை மாற்றியமைக்கப்பட்டது. ரோட்டரி தலைமையகத்திற்கு வருகை தரும் ரோட்டேரியன்கள் விமானம் தாமதமாக வந்ததால் புறநகர் எவன்ஸ்டனிலேயே சிக்கிக்கொண்டனர். அவர்களை விளையாட்டை கண்டு ரசிப்பதற்காக ஸ்டெஃப்னி அழைத்திருந்தார். 2024–25 ஆம் ஆண்டின் ரோட்டரி இன்டர்நேஷனல் தலைவரான ஸ்டெஃப்னி அப்போதுதான் ஆர்லாண்டோவில் நடைபெற்ற சர்வதேச அசெம்பிளி கூட்டத்தில் பங்கேற்றுவிட்டு திரும்பியிருந்தார். அவர், குளிர்பதனப் பெட்டியிலிருந்து ஒருவகையான குளிர்பானத்தை வெளியில் எடுத்து எதிர்பாராத விருந்தினர்களுக்கு வழங்கினார்.

ஸ்டெஃப்னி ஒரு விளையாட்டு ரசிகை என்று அழைப்பது, அவரை குறைத்து மதிப்பிடு வதாகும். பிட்ஸ்பர்கிலிருந்து 20 நிமிட பயணத்தில் உள்ள பென்சில்வேனியாவில் கேனன்ஸ்பர்கில் அவரது வீடு உள்ளது. அவரது வீட்டின் அடித்தளத்தில் "உமன்ஸ் கேவ்" என்று சொல்லப்படும் இடம் பிட்ஸ்பர்க் விளையாட்டை குறிப்பது. 1990-களின் காலத்திய பெட்டியில் பேஸ்பால் வீரர் ராபர்டோ கிளமன்ட், ஸ்டான்லி கோப்பையை வென்ற பிட்ஸ்பர்கின் பெங்குயின் ஹாக்கி அணி மற்றும் ராக்கி பிளேயர் உள்ளிட்ட பிட்ஸ்பர்க்கின் பிரபல விளையாட்டு வீரர்களின் புகைப்படங்கள் வைக்கப் பட்டிருந்தன. பிளேயரின் பிரேம் செய்யப்பட்ட ஜெர்ஸி, பெங்குயின் ஹாக்கி அணி வீரர்களின் மட்டைகள், கையெழுத்திடப்பட்ட கால்பந்து, சேகரிக்கப்பட்ட டிக்கெட்டுகள், வீரர்கள் பயன்படுத்திய மெத்தை ஆகியவையும் அதில் அடங்கும். சமீபத்தில் அவர் கையகப்படுத்திய பேஸ் பால் வீரர் ரிச்சி ஹெப்னரின் தலையாட்டி பொம்மை. (அவரது புகைப்படத்தை ஸ்டெஃப்னி, உயர்நிலைப் பள்ளியில் படித்த போது தனது லாக்கரில் ஒட்டிவைத்திருந்தார்). அருகில் ஒரு அலமாரியில் அவருக்குப்



பிடித்தமான இரண்டு சீருடைகள், அவரின் ரோட்டரி டீ ஷர்ட்டுகள் வைக்கப்பட்டிருந்தன.

அவருக்கு விளையாட்டு மீதான ஆர்வம் ஒரு ரசிகரைவிட அதிகமாக இருந்தது. ஒரு கோடையில், கனடா கால்பந்து குழு வீரர்களின் குணங்களை ஆய்வுசெய்ய அவர் உதவினார். என்.எஃப்.எல். பயிற்சி முகாம்களில் கலந்துகொண்டு அணிக்கு தகுதியான வீரர்களைக் கண்டறிந்தார். (பால்டிமோர் ரேவன் அணி பயிற்சியாளர் ஜான் ஹர்பாக், தன்னை அணுகி பங்கு பணிகள் பற்றி கேட்டறிந்ததாக அவர் நினைவுகூர்ந்தார். “நான் இதற்கு முன் ஒரு பெண்ணுடன் இணைந்து பணியாற்றியதில்லை”- ஜான். “அப்படியா?” என்று கேட்ட ஸ்டெஃபனி, “நான் யாரையும் கடித்து விடமாட்டேன்” என்று பதிலளித்தார்.) முன்னாள் வீரர்களால் நடத்தப்பட்ட ஸ்டீலர்ஸ் மகளிர் பயிற்சி முகாமிலும் அவர் பங்கேற்றார். கார் டயர்களைப் பயன்படுத்தி நடந்த பயிற்சியில் அவரது கால்களில் தசைநாண்களில் ஏற்பட்ட அழற்சியை அடுத்து அவர், தனது அனுபவத்தை பாதியில் முடித்துக்கொண்டார். இது ஒரு வேடிக்கையான கோடை, வேடிக்கையான விளையாட்டு என்கிறார் ஸ்டெஃப்னி.

ரோட்டரி சங்க கூட்டத்தில் ஸ்டீலர்ஸ் நிறுவனத்தின் துணைத்தலைவர் ஆர்ட் ரூனி ஜூனியரை சந்தித்துப் பேசினார். அதன்பிறகு கேனன்ஸ்பர்கில் உள்ள பிரபல நிறுவனத்தின் சாக்லேட்டை அவருக்காக கொண்டுவந்து கொடுத்தார். அடிக்கடி சந்தித்ததில் இருவரிடையே நட்பு பலமானது. விளையாட்டு மீது இருந்த ஆர்வத்தால் இருவரும் ஒன்றிணைந்தனர்.

அந்த வகையான தொடர்பு தான், இன்றிரவு விருந்தில் நடக்கிறது. சக ஸ்டீலர்ஸ் ரசிகர் ரெனே லாஸ், 2023–24 வெர்ஜீனியா மாவட்ட ஆளுநர் (7610) இந்த நிகழ்ச்சிக்காக தனது TJ வாட் ஜெர்ஸியை அணிந்துள்ளார்.

சில வாரங்களுக்குப் பிறகு, ஸ்டெஃப்னி, தனது உறவினர் மைக்கேல் ஹடலோவிக்கின் பிறந்தநாள் விழாவில் கலந்து கொள்வதற்காக மேற்கு பென்சில்வேனியாவில் கூடுகிறார். அவர்கள் இருவரும் உடன்பிறப்புகள் போலவே வளர்ந்தனர். அவர்கள் இருவரையும் அண்ணன், தங்கை போலவே பலரும் கிண்டல் செய்து வருகிறார்கள். கிச்சன் பகுதியில் பீட்சா, சிக்கன், பாஸ்தா சாலட், பழங்கள், நொறுவைகள், பழரசங்கள் நிறைந்திருந்தன. அவர்கள் இருந்த அறையில் இருந்த தொலைக் காட்சிகள் செய்திகள் வந்தவண்ணம் உள்ளன. ஆனால், சாப்பிடுவதற்கு முன் அவர்கள் இருவர் மற்றும் உறவினர்கள், பேரக்குழந்தைகள் “ஹாப்பி பர்த்டே” பாடலை முதலில் ஆங்கிலத்திலும் பின்னர் ஸ்லவோனிய மொழியிலும் பாடினார்கள். ஸ்டெஃப்னியும் அவர்களுடன் இணைந்து கொண்டார். அவரது குரல் வளமாகவும் தெளிவாகவும் இருந்தது.



*சங்க உறுப்பினர்கள் இங்கார்டோனா (இடது) மற்றும் வில்லியம் கெர்ன் தலைவர் ஸ்டெஃப்னியுடன்.*

ஸ்டெஃப்னியின் வாழ்க்கையில் இசையும் ஒரு பகுதியாக இருந்தது. அவரது தந்தை அக்கார்டியன் இசைக் கருவியை வாசிப்பதில் வல்லவர். மேலும் அவர் ஒரு இசைக் குழுவை தலைமையேற்று 35 ஆண்டுகளுக்கு மேலாக நடத்தி வந்தார். நான் நடக்க கற்றுக்கொள்வதற்கு முன்பே “போல்கா பேண்ட்” வாசிக்க கற்றுக்கொண்டேன். பின்னர் நாங்கள் நகரத்தில் வசித்த போது தந்தையின் இசைக் குழுவில் பாடகராகவும் இருந்தேன். மேலும் எனது உறவினர் ஒருவர் நடத்திய சர்ச் பாடல் குழுவிலும் நான் இடம்பெற்றிருந்தேன். சில குடும்பத்தினர் ஏதாவது ஒரு நிகழ்ச்சியில் ஒன்று கூடும்போது சீட்டு விளையாடுவார்கள். அதுபோல, என் தந்தை ஒரு இசைக் கலைஞர். எனது பாட்டி, அத்தை இருவரும் பாடகர்கள். எனவே நாங்கள் ஒன்று கூடும்போது பாட்டுப் பாடுவோம்” என்றார் ஸ்டெஃப்னி.

மேற்கு வெர்ஜீனியாவின் எல்லைக்கு அருகில் உள்ள மேற்கு பென்சில்வேனியாவில்தான் ஸ்டெஃப்னி வளர்ந்துவந்தார். கிராமப்புற பகுதியான அங்கு காடுகளும், அப்பளாச்சியன் மலை அடிவாரப் பகுதியும் உள்ளது. எனது தாய்வழி, தந்தை வழி பாட்டனார்கள் கிழக்கு ஐரோப்பாவிலிருந்து (போலந்து, ஸ்லவோக்கியா மற்றும் உக்ரைன்) இங்குதான் குடியேறினர். இங்கு நிலக்கரி சுரங்கங்களும், இரும்பு ஆலைகளும் அதிகம் என்பதால் வேலை வாய்ப்பு தேடி இங்கு அவர்கள் குடிபுகுந்தனர். நாங்கள் அமெரிக்காவுக்கு வந்தபோது, என்னுடைய அம்மாவுக்கு

‘‘எனக்கு கொஞ்சம் உருளைக்கிழங்கு கொடுங்கள்’’ என்ற ஒருவார்த்தை மட்டும்தான் பேசத்தெரியும்.

கலாசாரமும் குடும்பமும் ஸ்டெஃப்னிக்கு முக்கியமாக இருந்தது. அவருடன் சிறிது நேரத்தை செலவிட்டால், பீட்ரூட் பற்றிய தவறான புரிதல்கள், துறவியின் சக்தி மற்றும் கிழக்கு ஐரோப்பாவில் தனது தூரத்து உறவினர்களைச் சந்தித்தபோது நடந்த குடும்பக் கதைகளை நீங்கள் கேட்கலாம். அவர், தவறாமல் ஹடலோவிக் மற்றும் அவருடைய இதர தாய்வழி உறவினர்கள் பற்றிய செய்திகளை தொடர்ந்து சேகரித்து வருகிறார். மேலும் வருடம் ஒருமுறையாவது தந்தை வழி உறவினர்களைச் சந்தித்துப் பேசுகிறார்.

மேற்கு பென்சில்வேனியா ஒரு காலத்தில் இரும்பு எஃகு ஆலைகள் மற்றும் நிலக்கரி சுரங்கங்கள் அதிகம் இருந்ததால் ‘‘எஃக்கு ஆலைகள் நிறைந்த பகுதி’’ என அறியப்பட்டுவந்தது. 1970 மற்றும் 80-களில் அந்த தொழில்கள் வீழ்ச்சி அடைந்ததால் அது இப்போது ‘‘துருப்பிடித்த பகுதி’’ (Rust Belt) என்று அழைக்கப்படுகிறது. 1930 -களில் ஸ்டெஃப்னியின் குழந்தைப் பருவத்தில் அவர் வசித்து வந்த மோனிஸ்ஸென் நகரத்தின் மக்கள் தொகை 20,000 ஆக இருந்தது. ஆனால், 2022-ல் அங்கு மக்கள் தொகை வெறும் 7,000-மாக குறைந்து விட்டது. முக்கிய வீதிகளில் வரிசையாக இருந்த கடைகள் மூடப்பட்டு காலியாக இருக்கின்றன. ஒரே ஒரு முழு அளவிலான மளிகைக் கடை மட்டும் இப்போது செயல்பட்டு வருகிறது. புனிதப் பெயரான கல்லறை, அதாவது ஸ்டெஃப்னியின் தந்தைவழி பாட்டானார்கள் புதைக்கப்பட்டிருந்த ‘‘ஸ்லவோக் கல்லறைப் பகுதி’’ இப்போது பாதி காலியாக உள்ளது. அதன் புல்வெளித் தரைகள் முன்னர் எதிர்பார்க்கப்பட்ட அதிக கல்லறைகளை குறிக்கிறது. பலரும் நகரத்தை விட்டு வெளியேறிவிட்டதால் ‘‘அந்த இடம் ஒருபோதும் நிரம்ப வழியில்லை’’ என்று ஸ்டெஃப்னி விளக்கினார்.

குழந்தை பருவத்தில் ஸ்டெஃப்னி, நான்ஸி ட்ரூவின் மர்ம



*தனது சங்க உறுப்பினர்களுடன்.*

நாவல்களை படித்துவிட்டு ஒரு உளவாளியாக கனவுகண்டார். ‘‘நான் பென்சில்வேனியாவில் இந்த சிறிய இடத்தில்தான் இருந்தேன், நான் வேறு எங்கும் சென்றதில்லை’’. ‘‘நான் உலகத்தை பார்க்க விரும்பினேன்’’ என்றார் அவர். கல்லூரியில் படிக்கச் சென்றபோது சர்வதேச உறவுகளில் முக்கிய கவனம் செலுத்தினார். அதாவது வரலாறு, அரசியல் அறிவியல் மற்றும் இதர மொழிகளில் கவனம் செலுத்தினார். உயர்நிலைப் பள்ளியில் பிரெஞ்சு படித்த அவர், பின்னர் ரஷிய, போலந்து, செர்பியன் மற்றும் இத்தாலிய மொழிகளையும் படித்தார். கல்லூரிப் படிப்பை முடித்த பின்னர் அமெரிக்க புலனாய்வுத்துறைகளான FBI, CIA உள்ளிட்டவற்றில் வேலைக்கு விண்ணப்பித்தார்.

ஆனால், அவருக்கு ஒரு தடை இருந்தது. அவரது நான்கு பாட்டி, தாத்தாக்களும் கிழக்கு ஐரோப்பாவைச் சேர்ந்தவர்கள் என்பதுதான். ‘‘பெரும்பாலானவர்களின் பின்னணியை ஆராய மூன்று அல்லது நான்கு மாதங்கள் ஆகும்’’ என்று அவர் நினைவுகூர்ந்தார். ‘‘ஆனால், என்னுடையதை ஆராய ஒன்றரை வருடங்களானது’’ என்றார்.

FBI, வேலைவாய்ப்புக்கு அழைத்த நேரத்தில் ஸ்டெஃப்னி உயர்கல்வியில் ஒரு நிர்வாகியாக புதிய பாதையை தேர்ந்தெடுத் திருந்தார். அதை அவர் மிகவும் விரும்பினார். அவர், தனது கனவு வேலையை நிராகரித்தார். கல்வித்துறையில் மேற்படிப்பு முடித்த அவர், பின்னர் தலைமைத் துவத்துக்கான படிப்பில் முனைவர்

பட்டம் வென்றார். ஒரு சர்வதேச அளவிலான பணியில் இருக்க வேண்டும் என்ற அவரது கனவு, கனவாகவே போனது- ரோட்டரியில் அவர் சேரும் வரை.

பிறந்தநாள் விருந்தின் போது, ஸ்டெஃப்னியின் உறவினரான ஜெர்மி லேன், அவரைப்பற்றி கூறினார். லேனுக்கு இப்போது 38 வயதாகிறது. ஆனால், இளம் பருவம் வரை அவர், ஸ்டெஃப்னியை சந்திக்கவே இல்லை. அந்த நேரம் தனது வாழ்க்கைப் பாதையில் ஏற்படுத்திய தாக்கத்தை அவர் நினைவுகூர்ந்தார். ஜெர்மி லேன், தனது இலக்கை அடைய ஸ்டெஃப்னி ஊக்கப்படுத்தினார். "நான் அவரை எனது பாட்டியின் வீட்டில் பார்த்தது முதல் அவர்தான் எனக்கு எல்லாம் என நினைத்தேன். அவருடைய அதிர்வு, ஆற்றல் துடிப்பான பேச்சு என்னை மயக்குகிறது. அவர் ஒரு அற்புதமான பெண். எனது வாழ்க்கையின் ஒருபகுதியாக இருப்பதற்கு நான் நன்றியுள்ளவனாக இருப்பேன்" என்றார் லேன்.

"ஸ்டெஃப்னி மிகவும் நேர்மையானவள் மற்றும் உண்மையானவள்" என்கிறார் ஹடாலோவிக்கின் மகள் ரெபக்கா பஸ்ஸார். "ராஜதந்திரம் மிகுந்த நபர்களுக்கு மத்தியிலும் சரி அப்பாவிகள் இருக்கும் இடத்திலும் சரி அவரைப் பொருத்திப் பார்க்கலாம். அனைவரும் அவரை விரும்புகிறார்கள். அவர் எங்கு சென்றாலும் நல்ல வரவேற்பு கிடைக்கும்" என்று பஸ்ஸார் கூறினார். அவரைவிட வேடிக்கையான நபரை நீங்கள் பார்க்க முடியாது என்று பஸ்ஸார் மேலும் கூறினார்.

மறுநாள் காலை, ஸ்டெஃப்னி, கேனன்ஸ்பர்கில் உள்ள உணவகத்தில் ஒரு அறைக்குள் நடந்து சென்றபோது, அங்கு மேஜையில் அமர்ந்திருந்த இரண்டு டஜனுக்கும் மேலான ரோட்டரி உறுப்பினர்கள் கைதட்டலுடன் வரவேற்றனர். ஸ்டெஃப்னியை மட்டும் இப்படி வரவேற்கவில்லை. அவரின் மெக்முர்ரே ரோட்டரி சங்க கூட்டத்துக்கு யார் வந்தாலும் இப்படித்தான் வரவேற்பார்கள். சில ஆண்டுகளுக்கு முன்பு ஒருவர் கூட்டத்திற்கு தாமதமாக வந்தபோது இது தொடங்கியது. எல்லோரும் ஆரவாரம் செய்தார்கள். அது பிடித்துப்போகவே அதையை பின்பற்றுகிறார்கள். இப்போது யார் எப்போது வருகிறார்கள் என்பது பற்றி கவலை இல்லை. அனைத்து உறுப்பினர்களும் ஒரு சர்வதேச தலைவர் போல வரவேற்கப் படுகிறார்கள். உங்களுக்கு இது பிடித்தமாக இல்லையா? என்று கேட்கிறார் ஸ்டெஃப்னி.

சங்கத்தின் தலைவர் வில்லியம் கெர்னை அவர் கட்டிப்பிடிக்கிறார். கூட்டம் தொடங்குகிறது. இது ஒரு காலை உணவு சந்திப்பு மற்றும் சிற்றுண்டியின் வாசனை காற்றில் ஊடுருவுகிறது. ஸ்டெஃப்னி காலை உணவை அதிகம் விரும்புவதில்லை. காபி மட்டும் அருந்துகிறார்.

பல ஆண்டுகளாக சங்கத்தில் சுமார் 35 உறுப்பினர்களே இருந்தனர் என்கிறார் ஸ்டெஃப்னி. ரோட்டரியின் செயல்திட்டத்துடன் புதிய நபர்களைத் தேடினர். சங்கத்தின் தலைவர்கள் ஒவ்வொரு உறுப்பினரிடமும் சங்கத்தின் செயல்பாடுகளைப் பற்றி கேட்டனர். சங்கத்தின் கூட்டம் எப்போது, எங்கு நடக்கும், சங்கத்தின் திட்டங்கள் என்ன என்று கேட்டறிந்தனர். அந்த தகவலின் மூலம் ஒரு நாளின் வெவ்வேறு நேரங்களில் காலை உணவு முதல் மதிய உணவு வரை கூட்டத்தை நடத்தினால் நல்லது என்பது தெரியவந்தது. இதையடுத்தே இந்த காலை உணவு கூட்டம். புதிதாக இரண்டு உறுப்பினர்கள் சேர்ந்துள்ளனர் என்றார் ஸ்டெஃப்னி. இதற்கு முன்னர் அழைத்தும்கூட தங்களால் வரமுடியவில்லை என்று அவர்கள் கூறினர்.

ரோட்டரி சங்கம் இத்துடன் நின்றுவிடவில்லை. உறுப்பினர்கள் அப்பகுதியில் உள்ள இதர குழுக்களுடனும் பேசினர். சேவை செய்ய விரும்பும் ஆனால், கூட்டத்தில் கலந்துகொள்ள முடியாதவர்களைக் கண்டறிந்தனர். எனவே அவர்களுக்காக "சாட்டிலைட் கிளப்" தொடங்கப் பட்டது. இந்த புதிய கருத்தின் மூலம் 15 புதிய உறுப்பினர்கள் கிடைத்தார்கள். அவர்கள் முழுத் தொகையையும் செலுத்தினார்கள், என்றார் ஸ்டெஃப்னி. நாங்கள் எதையும் தள்ளுபடி செய்யவில்லை. ஆனால், அவர்கள் வாராந்திர கூட்டங்களுக்குக்கூட வருவதில்லை என்பது எங்களுக்குத் தெரியும்". அதற்கு பதிலாக அவர்கள் PBR (பீட்சா, பீர் மற்றும் ரோட்டரி கூட்டம்) இரவுக் கூட்டத்தை நடத்துகிறார்கள்.

இன்று காலை சந்திப்பு துடிப்பானது. கலகலப்பான உரை யாடல்கள் மற்றும் வெடிச் சிரிப்புகள் நிறைந்தது. ஆரவாரம், பகிர்ந்து கொள்ளப்பட்ட காலை உணவு, நட்புறவு இவை அனைத்தும் சங்கத்தின் நோக்கத்தின் ஒரு பகுதியாகும். ஸ்டெஃப்னியின் வார்த்தைகளில் சொன்னால் "தவிர்க்க முடியாதது". சுறுசுறுப்பாக இயங்கும் ரோட்டரி சங்கத்தின் உறுப்பினராக



இருப்பதால் பேசுவது எனக்கு எளிதானது என்று அவர் கூறினார். ''தவிர்க்க முடியாதது என்றால், எனது அனுபவம் கட்டாயமானது, மிகவும் வேடிக்கையானது. மிகவும் ஆற்றல் மிக்கது. மக்கள் அதை விரும்பிக் கேட்பதால் வெளியேற விரும்பவில்லை'' என்று அவர் மேலும் கூறினார். ''நான் சொல்வது என்னவென்றால், இது என்னுடையது, இத்தகைய குழுவில்தான் நான் இருக்க விரும்புகிறேன்'' என்றார்.

1991-ம் ஆண்டு, பென்சில்வேனியாவில், கலிபோர்னியா பல்கலைக் கழகத்தில் உள்ள எனது அலுவலகத்திற்குள் அறிமுகம் இல்லாதவர் ஒருவர் நுழைந்து, ''ரோட்டரி சங்க கூட்டத்திற்கு போக விருப்பமா?'' என்று கேட்டார். அப்போது ஸ்டெஃப்னிக்கு ரோட்டரி பற்றி அவ்வளவாகத் தெரியாது. ஆனால், சமீபத்தில் விவாகரத்து செய்திருந்த அவர், புதிய நண்பர்களைத் தேடுவதில் தீவிரமாக இருந்தார். இந்த சமயத்தில் ஒரு பெண், ரோட்டரியின் சர்வதேச மகிமையை பற்றி சொன்னது ''கிளிக்'' ஆனது.

பிட்ஸ்பர்கின் தெற்கில் உள்ள நகரத்தில் கலிபோர்னியா ரோட்டரி சங்கத்தின் முதல் கூட்டம் நடைபெற்றபோது அதில் அவர் பங்கேற்றார். அங்கு சங்கத்தின் உறுப்பினரும், RI 1987–88-ன் தலைவருமான சக் கெல்லரை சந்தித்தார். ''அவர், தன்னை அறிமுகப்படுத்திக் கொண்டார். நாங்கள் விரைவிலேயே நண்பர்களானோம்.'' என்கிறார் ஸ்டெஃப்னி. ரோட்டரியில் கட்டமைக்கப்பட்ட வழிகாட்டி எனக்கு கிடைத்தார். எனக்கு ஆச்சரியமாக இருந்தது. ஸ்டெஃபனி குழு ஆய்வு பரிமாற்ற கூட்டங்களுக்கு ஏற்பாடு செய்தார். இளைஞர்கள் பரிமாற்ற நடவடிக்கைகளையும் மேற்கொண்டார். மூன்று கால்கள் சாக்குப் பந்தயத்துடன் கூடிய சுற்றுலாவுக்கும் அவர் ஏற்பாடு செய்தார்.

ஸ்டெஃப்னி குறிப்பாக TRF பணிக்கு ஈர்க்கப்பட்டார். முதலில் அவரது சங்கத்துக்கும் பின்னர் அவரது மாவட்டத்துக்கும் அறக்கட்டளைத் தலைவரானார். பின்னர் மண்டல அளவில் ரோட்டரி அறக்கட்டளையின் பிராந்திய ஒருங்கிணைப்பாளராக பணியாற்றினார். நிதி வளர்ச்சியில் கவனம் செலுத்தினார். ரோட்டரி இயக்குநராகவும், அறங்காவ லராகவும் சர்வதேச அளவில் சேவையாற்றிய மற்றொரு பிட்ஸ்பர்க் பகுதி ரோட்டேரியன் லூ பிகோனியுடன் இணைந்து பணியாற்றினார். மேலும் ஐந்து அல்லது ஏழு நபர்கள் கொண்ட பெரு நன்கொடையாளர் சாத்தியக் குழுவை ஏற்படுத்தி பயிற்சி அளித்தார். லூ பிகோனி, அவரது மனைவி பார்பரா மற்றும் நான் அவர்களின் சிவப்பு நிற கெடிலாக் காரில், அந்த பிராந்தியத்தையே சுற்றி வந்தோம். அந்தக் காலம் மிகவும் பயனுள்ளதாக இருந்தது என்றார் ஸ்டெஃப்னி.

அறக்கட்டளையில் அவர் பணியாற்றியதால், பலரும் அவரைப் பற்றி தெரிந்து கொண்டனர். இந்த சமயத்தில் 2012-ம் ஆண்டு ஒரு நாள் காலை 5 மணிக்கு அவருக்கு ஒரு தொலைபேசி அழைப்பு வந்தது. ரோட்டரி அறக்கட்டளை அறங்காவலராக ஆன் மாத்யூஸுக்கு பதிலாக அவரது பெயர் பரிந்துரைக்

*தலைவர் ஸ்டெஃப்னி RC மெக்முர்ரே தலைவர் வில்லியம் கெர்னுடன் இணைந்து அமைதிக் கம்பத்திற்கான இடத்தைத் தேடுகிறார்.*



கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப் பட்டது. (ஆன் மாத்யூஸ், ரோட்டரி இயக்குநர் குழுவில் இடம்பெறுவதால் தனது பதவியை விட்டு விலகினார்.). பின்னர் ஸ்டெஃப்னி இயக்குநரானார். மேலும் நிறுவனத்தின் திட்டமிடல் குழுவுக்கு தலைவரானார். இது ரோட்டரியை எப்படி செழிப்பான எதிர்காலத்திற்கு கொண்டு செல்வது என்பதற்கான உத்திகளை வடிவமைப்பதில் முக்கியப் பங்கு வகித்தது.

ஸ்டெஃப்னியின் சர்வதேச உறவுகளின் பின்னணியில் பார்த்தால், தலைவர் என்கிற முறையில் அவரது அமைதிக்கான ஆர்வம் ஆச்சரியமளிக்கவில்லை. அவர் நான்குவழிப்பாதை பரிசோதனை, நேர்மறையான கிளப் கலாசார முதலீடு மற்றும் ரோட்டரி அமைதி மையங்களை ஈடுபடுத்துவதன் மூலம் ரோட்டரியின் அமைதிக்கான அர்ப்பணிப்பு செய்தியை உறுப் பினர்கள் உதவியுடன் பரப்புவதை ஊக்குவிக்கிறார். ‘‘ஒரு போரை நிறுத்தியதற்காக நாங்கள் அமைதிக்கான நோபல் பரிசைப் பெறப் போவதில்லை. ஆனால், உலகத்தை ஒரு சிறந்த இடமாக மாற்ற ரோட்டரியைப் பயன்படுத்த முடியும்’’ என்கிறார் ஸ்டெஃப்னி.

ஸ்டெஃப்னியின் அமைதிக்கான உந்துதலில் ஒரு முக்கிய அம்சம் அவர் தூணாக நின்றதுதான். அன்று பிற்பகல் சங்க கூட்டத்திற்குப் பிறகு, பிட்ஸ்பர்க்கிலிருந்து தென்கிழக்கே 15 மைல் தொலைவில் உள்ள சமூகப் பூங்காவில், ஓயிட் ஓக் ரோட்டரி சங்க உறுப்பினர்களுடன் அவர் இணைகிறார். அது ஒரு அழகான வெயில் நாள். பிப்ரவரியின் தொடக்கத்தில் இருந்தாலும் வசந்த காலத்தை உணர்த்தியது. பூங்காவில் உள்ள கருவேல மரங்களில் துளிர்த்திருந்த இலைகளிலிருந்து மெல்லிய காற்று வீசியது.

RID 7305-ன் DG மற்றும் ஓயிட் ஓக் சங்கத்தின் உறுப்பினருமான டான் டக்கர்தி 8 அடி உயரமான வெள்ளைக் கம்பத்தை கையில் பிடித்திருக்கிறார். அதில், ‘‘பூமியில் அமைதி நிலவட்டும்’’ என்று ஆங்கிலம், ஐரிஷ், இத்தாலியன், போலிஷ், ஜெர்மன், குரோட்டியன், ஸ்பானிஷ் மற்றும் வியத்நாமிய மொழிகளில் பொறிக்கப்பட்டிருந்தது. இந்த சொற்றொருடர் பிரெய்லி முறையிலும் எழுதப்பட்டிருந்தது. மேலும் வானவில் கொடி ஸ்டிக்கர் மற்றும் அமைதியை வலியுறுத்தும் ஸ்டிக்கர்கள் ஒட்டப் பட்டிருந்தன. ஸ்டெஃப்னி எழுந்து சென்று உடனடியாக தனது செல்போனை கையிலெடுத்து அமைதிக் கம்பத்தில் இருந்த ‘‘QR’’ குறியீட்டை ஸ்கேன் செய்து மேலும் சில தகவல்களுடன் இணைய தளத்தில் பதிவிடுகிறார்.

உறுப்பினர்களின் வீடுகள், அவர்களுடைய சங்கம், அவர்களின் சமூகம் அல்லது உலகம் முழுவதும் அமைதிக்கான உறுதிப்பாட்டை வெளிப்படுத்தும் சமிக்ஞைகளாக இந்த அமைதிக் கம்பங்கள் நிறுவப்படுவதை அவர் ஊக்குவிக்கிறார். ஓயிட் ஓக் ரோட்டரி சங்கத்தின் உறுப்பினராக இருக்கும் டான் டக்கெர்த்தியின் மனைவியும் வரும் ஆண்டில் தங்கள் மாவட்டத்தில் உள்ள ஒவ்வொரு சங்கத்திலும் அமைதிக் கம்பம் நிறுவப்படுவதை இலக்காகக் கொண்டுள்ளார்.

ஓயிட் ஓக் சங்கத்தின் கடைசி உறுப்பினர் வந்ததும், முக்கியமான காலகட்டத்தில் விளையாட்டு வீரர்கள் தங்கள் பயிற்சியாளர்களை சூழ்ந்து நிற்பதைப் போல அனைவரும் ஸ்டெஃப்னியைச் சுற்றி குவிந்தனர். அமைதிக்கம்பம் நடும் திட்டம் எனக்கு மிகவும் பிடித்தது. ஏனெனில் இது ஒரு காட்சியைப் பிரதிநிதித்துவப் படுத்துகிறது என்று அவர்களிடம் ஸ்டெஃப்னி கூறுகிறார். ஓயிட் ஓக் பகுதியில் உள்ள இந்த பூங்காவுக்கு வரும் அனைவரிடமும் ‘‘உங்கள் சங்கம் அமைதியை கட்டியெழுப்ப விரும்புகிறது. ரோட்டரியின் குறிக்கோளும் அமைதியை கட்டியெழுப்புவது தான்’’ என்கிற செய்தி சென்று சேரும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

நிகழ்ச்சியின் இறுதியில், ஸ்டெஃப்னி, அனைவரையும் அமைதிக் கம்பத்தை தொடுமாறு அழைக்கிறார். அவர்கள் ஒன்றிணை கிறார்கள்-ஒரே அணியாக. அது தான் ரோட்டரி குழு. ஸ்டெஃபனி புன்னகைக்கிறார். விளையாட்டு தொடர்கிறது.

©ரோட்டரி



*RC பிட்ஸ்பர்க் உறுப்பினர் கேட் மாட்ஸ் மற்றும் அவரது மகள் மேசன் RI தலைவர் ஸ்டெஃப்னியுடன்.*

ADVT.

# KLE SOCIETY BELGAUM
## AND
# XAVIER UNIVERSITY SCHOOL OF MEDICINE
## ANNOUNCE

# 6 YEARS
PRE-MED TO
## DOCTOR OF MEDICINE / DOCTOR OF VETERINARY MEDICINE
## PROGRAMME




**DOCTOR OF MEDICINE**

**First 2 years**
Start @ KLE, Campus Karnataka, India

**Next 2 years**
Continue @ Xavier's Campus Aruba, Caribbean island - Netherlands

**Next 2 years**
Complete @ Xavier's affiliated Teaching Hospitals USA / Canada

**DOCTOR OF VETERINARY MEDICINE**

**First 2 years**
Start @ KLE, Campus Karnataka, India

**Next 3 years**
Continue @ Xavier's Campus Aruba, Caribbean island- Netherlands

**Final year**
Complete @ Xavier's affiliated Teaching Hospitals USA / Canada

JOIN OUR
# WEBINAR
**REGISTER NOW**
XUSOM.COM/INDIA/

**Tuesday July 9** 10 AM IST

**Wednesday July 10** 10 AM IST

(Those who are unable to reach for counseling and spot interviews, can attend the webnair)

### About the Program
- Student in the Doctor of Medicine (MD) degree will be able to graduate and are eligible to apply for residency in United States and Canada
- Student in the Doctor of Veterinary Medicine (DVM) degree will be permitted to take the NAVLE exam and immediately accept without the need for residency

### Class will begin in September 2024
**Eligibility and Qualification for Admission**
- Student must have completed 12th standard
- Minimum of GPA 3.0 (Equivalent)
- NEET eligibility will be required before enrolment
- Proficiency in English

**Counseling and spot interviews between 8 - 10, July at the KLE campus**
**Nehru Nagar Belgaum – Karnataka**
(The exact location and building will be emailed to interested students/Parents.)

**Students/Parents attending counselling will get air-travel reimbursement (for two only)**
(With no obligation to join the program)

**Limited Seats**

**Deadline to apply July 25, 2024**
To apply, Visit: application.xusom.com
email: infoindia@xusom.com

**XAVIER STUDENTS ARE ELIGIBLE FOR H1/J1 Visa PROGRAMME**

# ரோட்டரியின் 4வது ப்ரோக்ராம்ஸ் ஆஃப் ஸ்கேல்

# இந்திய விவசாயத்திற்கான மானியம்

ரஷீதா பகத்

நீர் பாதுகாப்பு மற்றும் இந்திய விவசாயிகளின் வருமானத்தை மேம்படுத்துவதில் ஒரு இந்திய சங்கத்தின் ஆர்வம், இந்த ஆண்டுக்கான ரோட்டரி அறக்கட்டளையின் 2 மில்லியன் டாலர் ப்ரோக்ராம்ஸ் அஃப் ஸ்கேல் மானியம் இந்திய விவசாயத்திற்காக வழங்கப்படுவதை உறுதி செய்துள்ளது. இதை சிங்கப்பூரில் நடந்த RI மாநாட்டில் TRF தலைவர் பேரி ரசின் அறிவித்தார். இந்த மானியத்திற்கான விண்ணப்பத்தை, RC தில்லி பிரீமியர், RID 3011 செய்துள்ளது. இரண்டு தசாப்தங்களாக நீர் பாதுகாப்பு மற்றும் நீர்நிலைகளை மறுசீரமைத்தல் மற்றும் இந்தியாவின் மிகவும் வறண்டு கிடக்கும் சில பகுதிகளில் தடுப்பணைகள் கட்டுதல் போன்ற திட்டங்களில் இச்சங்கம் பணியாற்றி வருகிறது.

பருவநிலை மாற்றத்தால் மோசமாக பாதிக்கப்பட்டுள்ள நாட்டின் விவசாயிகளுடன் இந்திய ரோட்டேரியர்கள் செய்யும் பணிகளுக்கு இந்த மானியம் துணைபுரியும் என்று ரசின் கூறினார். இந்தியாவில் நீர் அணுகல் மற்றும் சிறந்த அறுவடைக்காக பங்குதாரர்கள் (Partners for Water Access and Better Harvests in India) திட்டத்தின் மூலம் இந்த மானியம் வழங்கப்படும், இது நிலத்தடி நீர் அளவை அதிகரிக்கவும், சாகுபடி பகுதிகளை விரிவுபடுத்தவும் மற்றும் சுமார் 60,000 விவசாயிகளின் வருமானத்தை 25 சதவீதம் முதல் 30 சதவீதம் வரை உயர்த்துவதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.

மாநாட்டின் பொது அமர்வு ஒன்றில் உரையாற்றிய ரசின், “உலகில் அதிகமான கோதுமை,



அரிசி மற்றும் பிற உணவுப் பொருட்களை உற்பத்தி செய்வது இந்தியாவில் உள்ள விவசாயிகள் தான். ஆனால் இந்த விவசாயிகள் நம்பியிருக்கும் நிலத்தடி நீர் அழிந்து வருகிறது. பருவநிலை மாற்றம் மழைப்பொழிவை மிகவும் ஒழுங் கற்றதாக ஆக்குகிறது, இது வறட்சிக்கு வழிவகுக்கிறது'' என்றார்.

இதன் விளைவாக, இந்தியாவின் இக்கட்டான பகுதிகளில் உள்ள பெண்களும் குழந்தைகளும் அதிக நேரத்தை செலவிட்டு, நீண்ட தூரம் நடந்து சென்று தண்ணீரைப் பெறும் நிலை உள்ளது. இவை கல்வியிலும், வாழ்வாதாரத்திலும் சிறப்பாகப் பயன்படுத்தக்கூடிய நேரம். விவசாயத்தின் வருமானம் வீழ்ச்சி யடைந்ததால், ஆண்கள் தங்கள் கிராமங்களை விட்டு நகர்ப்புறங்களில் வேலை தேடும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். இந்தப் போக்குகள் இந்தக் குறிப்பிட்ட சமூகங்களுக்கோ அல்லது உலகத்திற்கோ நிலையானதல்ல.

ரோட்டரியின் நான்காவது ப்ரோகிராம்ஸ் ஆஃப் ஸ்கேல் இந்த போக்குகளை மாற்றியமைப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது. இந்த மானியத்தின் மூலம் ரோட்டரி ஐந்தாண்டு திட்டத்தில் இந்திய விவசாயிகளுடன் இணைந்து இந்தியாவில் தலைமுறை தலை முறையாக நிலையான விவசாயத் திற்கான விதைகளை விதைக்கும் என்றார். இந்தியாவில் நீர் அணுகல் மற்றும் சிறந்த அறுவடைக்கான பங்குதாரர்கள் நான்கு மாநிலங்களில் ஒவ்வொரு ஆண்டும் நிலத்தடி நீர் அளவினை 10 முதல் 15 சதவீதம் வரை உயர்த்துவதற்காக தடுப்பணைகள் மற்றும் குளங்கள் போன்ற மழைநீர் சேகரிப்பு அமைப்புகளை உருவாக்குவார்கள். சொட்டு நீர் பாசனத்தை அறிமுகப்படுத்தி பூர்வீக இனங்கள் மற்றும் பழ மரங்களை நடுவதன் மூலம் சுமார் 4,100 ஹெக்டேர் (10,000 ஏக்கருக்கும் அதிகமான) நிலத்தில் மண் அரிப்பைக் குறைக்கவும் இது செயல்படும்.

இந்த நடவடிக்கைகள் அனைத்தும் காலநிலை மாற்றத்தின் விளைவு களை ஈடுசெய்யவும், நிலையான விவசாய நடைமுறைகளை எளிதாக்கவும் உதவும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

உள்ளூர் பேச்சுவழக்குகள் மற்றும் மரபுகளை நன்கு அறிந்த ரோட்டரி உறுப்பினர்கள் தேசிய அமைப்புகளுடன் இணைந்து விவசாயிகளுக்கு ஆதரவளிப்பார்கள். கூடுதல் நீரைச் சேமித்தும், மக்கள் சார்ந்துள்ள சுற்றுச்சூழல் அமைப்புகளைப் பாதுகாக்கும் அதே வேளையில் குறைந்த நீரில் அதிக பயிர்களை வளர்க்கும் நுட்பங்களை மேம்படுத்துவார்கள். இத்திட்டத்தின் வெற்றியானது நிலத்தடி நீர் சேமிப்பு மற்றும் விவசாய உற்பத்தித்திறன் அதிகரிப்பால் மட்டுமன்றி, விவசாயிகள் மற்றும் அவர்களது குடும்பங்களின் வாழ்க்கைத் தரத்தில் ஒட்டுமொத்த முன்னேற்றத்தின் மூலமும் அளவிடப்படும்.



RC டெல்லி பிரீமியர் தலைவர் சுதான்ஷு பச்சிசியா ராஜஸ்தானின் ஆல்வாரில் சங்கம் கட்டிய தடுப்பணையில் கிராம மக்கள் உடன்.

### நீர் பாதுகாப்பிற்காக அர்ப்பணிப்புடன் இருக்கும் ஒரு சங்கம்

RC டெல்லி பிரீமியரின் தலைவர் சுதன்ஷு பச்சிசியா, நீர் பாதுகாப்பு மற்றும் இந்திய விவசாயிகளின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்கான ஆர்வம் ஆகியவற்றில் சங்கத்தின் பணியில் TRF தகுதியைக் கண்டது தனக்கு மகிழ்ச்சியளிப்பதாக கூறினார். ரோட்டரி நியூஸ் உடனான உரையாடலில், "எங்கள் சங்கம் சிறிது காலமாக நீர் பாதுகாப்பில் ஈடுபட்டு தடுப்பணைகளை உருவாக்கி வருகிறது, மேலும் ராஜஸ்தானில் உள்ள அல்வார் பகுதியில் உள்ள அந்த தடுப்பணை களின் நன்மைகளையும் அவை நிலத்தடி நீரை எவ்வாறு மேம்படுத்தியது என்பதையும் நாங்கள் பார்த்தோம். இப்பகுதியில், தடுப்பணைகளால் ஒரு




ஆல்வாரில் உள்ள தடுப்பணையின் கட்டுமானதிற்கு முன் கிராம மக்கள் பூஜை செய்கிறார்கள்.

வருடத்திற்குள் வறண்டிருந்த குழாய் கிணறுகள் மற்றும் கை பம்புகள் தண்ணீர் கொடுக்க ஆரம்பித்துள்ளன.

இந்த உற்சாகமான முடிவு, அவர்களின் மூத்த ரோட்டேரியர்களில் ஒருவரான, இந்த சங்கத்தின் பட்டய உறுப்பினரும், RC டெல்லி மிட்டவுனின் முன்னாள் தலைவருமான K S மேத்தாவுக்கு உத்வேகம் அளித்தது, இந்த ரோட்டேரியர்கள் தங்களின் தற்போதைய சங்கத்தை உருவாக்குவதற்கு RC டெல்லி மிட்டவுனிலிருந்து தான் பிரிந்தனர். "அவருக்கு நீர் சேமிப்பு மற்றும் தடுப்பணைகள் கட்டுவதில் மிகுந்த ஆர்வமும் ஆழமான அறிவும் உள்ளது, என்று பச்சிசியா கூறினார்.

அடுத்த சில ஆண்டுகளில் இந்தத் திட்டம் எப்படிச் செயல்படும் என்பது குறித்து, பச்சிசியா கூறுகையில், மகாராஷ்டிராவில் உள்ள மராத்வாடா, மத்தியப் பிரதேசத்தில் உள்ள பந்தேல்கண்ட் மற்றும் ராஜஸ்தானின் சில பகுதிகளிலிருந்து தொடங்கும் என்றார். "நாங்கள் மிகவும் வறண்ட பகுதிகளில் சிலவற்றைத் தேர்ந் தெடுத்துள்ளோம், மேலும் சில வலுவான செயல்பாட்டு பங்காளர் களுடன் ஏற்கனவே இணைந்துள் ளோம், அவர்களில் ஒருவர் மராத்வாடாவைச் சேர்ந்த GVT-ன் மாயங்க் காந்தி."

(காந்தி ஒரு சமூக ஆர்வலர் மற்றும் தன்னார்வ தொண்டு நிறுவனமான குளோபல் விகாஸ் அறக்கட்டளையின் நிறுவனர் மற்றும் தலைமை அறங்காவலர் ஆவார். அது மராத்வாடா, மகாராஷ்டிரா மற்றும் மத்திய பிரதேசம் ஆகிய வறட்சியால் பாதிக்கப்பட்ட கிராமங்களை மாற்றுவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. இதை இந்திய விவசாயிகளின் குறைந்தபட்ச வருவாயை ஒரு ஏக்கருக்கு

ஆண்டுக்கு சராசரியாக ரூ.10,000லிருந்து ரூ.1 லட்சமாக உயர்த்துவதன் மூலம் செய்ய முயல்கிறது.

அவர்கள், நீர் பாதுகாப்பில் பணிபுரியும் பந்தேல்கண்டின் தன்னார்வ தொண்டு நிறுவனம் ஸ்ரீஜன் மற்றும் ராஜஸ்தானில் உள்ள PHD ரூரல் டெவலப்மென்ட் அறக்கட்டளை ஆகியவற்றுடன் கூட்டு சேர்ந்துள்ளனர். ''முதலில் விவசாயிகளுக்கு நிலத்தடி நீர்மட்டத்தை அதிகரிப்பது அடிப்படை யோசனையாகும், பின்னர் அவர்களுக்கு சொட்டு நீர் பாசனத்தை அறிமுகப்படுத்தி குறைந்த நீர் தேவைப்படும் மற்றும் சொட்டு நீர் பாசனத்தில் சிறப்பாக செயல்படும் விவசாய விருப்பங்களை வழங்க வேண்டும். இரண்டாவது கட்டத்தில் பழ மரங்களை வளர்ப்பது அறிமுகம் செய்யப்பட உள்ளது. அடிப்படை விவசாயக் கருத்தை மாற்றி, விவசாயிகளை அதிக லாபம் தரும் விவசாயத்தில் ஈடுபடுத்துவதே எங்கள் நோக்கம்'' என்று பச்சிசியா மேலும் கூறுகிறார்.

மண், தட்பவெப்பநிலை மற்றும் பிற காரணிகளை ஆய்வு செய்தபின், பிராந்திய ரீதியாகவும், வேளாண் வல்லுநர்கள் மற்றும் இத்துறையில் உள்ள பிற நிபுணர்களால் முடிவு செய்யப்பட்டு பழங்கள் தேர்ந்தெடுக்கப்படும்.

2005-ம் ஆண்டு PHD ஊரக வளர்ச்சி அறக்கட்டளையின் தலைவராக தான் இருந்த போது, குறு மற்றும் சிறு இந்திய விவசாயிகளின் வருமானத்தைப் பெருக்கும் இந்த வேலையை ரோட்டேரியர்கள் எவ்வாறு தொடங்கினர் என்பதை மேத்தா விவரித்தார். ''ராஜேந்திர சிங் ஏற்கனவே நீர் பாதுகாப்பு மற்றும் சுற்றுச்சூழலுக்கான தனது பணிக்காக மகசேசே விருதை வென்றுள்ளார். எனவே, நாங்கள் அவரை அழைத்து, தடுப்பணைகள் மூலம் தண்ணீரைச் சேமிப்பது பற்றிய முழுக் கருத்தையும் புரிந்துகொண்டு, அவருடன் ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டு, அவருடன் இணைந்து இரண்டு தடுப்பணைகளைக் கட்டினோம்.''

## ஆதரவு மற்றும் மகிழ்ச்சியை வெளிப்படுத்தும் கூட்டாளர்கள்

*விளைச்சல், பண்ணை விளை பொருட்களின் மதிப்பு மற்றும் விவசாயிகளின் வருமானத்தை மேம்படுத்த ரோட்டேரியர்களுடன் இணைந்து செயல்படும் RC டெல்லி பிரீமியரின் கூட்டாளர்கள் TRF அறிவிப்பை வரவேற்றுள்ளனர். GVT நிர்வாக அறங்காவலரான மாயங்க் காந்தி, இந்திய விவசாயிகளுக்கு உதவுவதற்காக இந்த மதிப்புமிக்க மானியத்தைப் பெற்றதற்காக சங்க உறுப்பினர்களை வாழ்த்தினார். ''காலநிலை நெருக்கடியின் பெரும் பாதிப்பை ஏழ்மையானவர்கள் தான் தாங்குகிறார்கள் என்பதை நாம் அறிவோம், மேலும் அவர்களின் வாழ்க்கையை மாற்றுவதற்கான ஒரே வழி நிலையான விவசாயம் மட்டுமே என்று GVT-ல் நாங்கள் நம்புகிறோம். நாங்கள் பல ஆண்டுகளாக மரங்களை நட்டு, நீர் பாதுகாப்பில் பணியாற்றி வருகிறோம், இப்போது ரோட்டரி உடனான இந்த கூட்டின் மூலம், வறட்சி மற்றும் வறுமையால் பாதிக்கப்பட்ட இந்தியாவின் மிக மோசமான பகுதிகளில் ஒன்றின் ஆயிரக்கணக்கான விவசாயிகளுக்கு உதவ எங்களால் முடியும். இங்கே அதிக எண்ணிக்கையிலான விவசாயிகளின் தற்கொலைகள் நடைபெறுகின்றன என்று அறிக்கைகள் தெரிவிக்கின்றன. இந்த ஒத்துழைப்பில் இணைந்து செயல்பட நாங்கள் எதிர்நோக்குகிறோம், மேலும் நீண்ட காலத்திற்கு விவசாயிகளின் வாழ்க்கையில் குறிப்பிடத்தக்க தாக்கத்தை ஏற்படுத்த முடியும் என்று நம்புகிறோம்.''*

*PHD கிராமப்புற மேம்பாட்டு அறக்கட்டளையின் தலைவர் ஷரத் ஜெய்பூரியா கூறுகையில், ''ரோட்டரியுடன் இணைந்து, தொலைதூர கிராமப்புற இந்தியாவில் விவசாய சமூகங்களை மேம்படுத்துவதை நாங்கள் எதிர்நோக்குகிறோம். காலநிலை-எதிர்ப்பு விவசாய நடைமுறைகளை ஊக்குவிப்பதன் மூலம் 30,000 விவசாயிகளின் சமூகப் பொருளாதார நிலைமைகளை மேம்படுத்துவதை இந்த கூட்டாண்மை நோக்கமாகக் கொண்டுள்ளது, அவர்களில் 45% பெண்கள். பழத்தோட்டங்கள் மற்றும் பல அடுக்கு காய்கறி விவசாயம் போன்ற உயர் மதிப்பு பயிர்களுக்கு பல்வகைப்படுத்துவது இதில் அடங்கும். கூடுதலாக, நிலத்தடி நீர் ரீசார்ஜ் செய்வதில் கவனம் செலுத்தி, நிலையான இயற்கை வள மேலாண்மை மூலம் 10.45 மில்லியன் கன அடிக்கு மேல் நீர் அளவை உருவாக்குவதும் இதில் அடங்கும். அரசாங்கத்துடன் இணைந்து சமூகப் பங்கேற்புக்கான ஒருங்கிணைந்த அணுகுமுறையுடன் இந்தத் திட்டம் செயல்படுத்தப்படும்; சமூகம் முக்கிய பங்குதாரர்களில் ஒன்றாக இருக்கும்.''*

*கூட்டு நடவடிக்கை மூலம் சுய முன்முயற்சிகளின் (SRIJAN) தலைமை நிர்வாக அதிகாரி பிரசன்னா கெமரியா கூறுகையில், ''பெண் விவசாயிகளுக்கு அதிகாரம் அளிக்கவும், ஜான்சி மற்றும் நிவாரி மாவட்டங்களில் நிலையான வாழ்வாதாரத்தை மேம்படுத்தவும் RC டெல்லி பிரீமியருடன் ஸ்ரீஜனின் கூட்டாண்மையை அறிவிப்பதில் நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம். நீர் பாதுகாப்பு, காலநிலைக்கு ஏற்ற விவசாயம் மற்றும் வாழ்வாதார முயற்சிகள் ஆகியவற்றில் எங்களின் கூட்டு முயற்சிகள் மூலம், 1,500 பெண் விவசாயிகளுக்கு பயனளிப்பதையும், 7,000 மரங்களை நடுவதை எளிதாக்குவதையும் நோக்கமாகக் கொண்டுள்ளோம். இத்திட்டம் எட்டு கோடி லிட்டர் நிலத்தடி நீரை உருவாக்கி, 700 ஏக்கர் விவசாய நிலத்தை உருமாற்றும். ஒன்றாக, நேர்மறையான மாற்றத்தை ஏற்படுத்தவும், கிராமப்புற சமூகங்களுக்கு நெகிழ்ச்சியான, வளமான எதிர்காலத்தை உருவாக்கவும் நாங்கள் கடமைப்பட்டுள்ளோம்.*

*(RISAO-வின் மூத்த PR மற்றும் தகவல் தொடர்பு உத்தியாளர் ஜோதி ராயின் உள்ளீடுகளுடன் கட்டுரை எழுதப்பட்டுள்ளது.)*

அடுத்ததாக கிராமப்புற இந்தியாவில் நலன்புரி நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக அர்ப்பணிக்கப்பட்ட ஒரு அமைப்பான RDF, இந்த வேலையைத் தானாகச் செய்ய முடிவெடுத்தது. “பின்னர், PRID சுஷில் குப்தாவின் உதவியுடன் வெளிநாட்டில் இருந்து நிதியுதவி பெற்று நாங்கள் பல நீர் பாது காப்பு திட்டங்களை மேற் கொண்டோம் மற்றும் சிகார், அல்வார், தோசா மற்றும் ஜெய்ப்பூருக்கு அருகிலுள்ள கிராமங்களில் தடுப்பணைகளை கட்டினோம், மேலும் ஹரியானாவில் பட்டோடியில் சில நீர் தொட்டிகளையும் கட்டினோம்.

### இந்திய விவசாயிகளின் முக்கியமான தேவை

இந்திய விவசாயியின் மிக முக்கியமான தேவை நீர் தானா என்று கேட்டதற்கு, “நீர் மட்டுமல்ல, விவசாயிகளின் மொத்த வருமானம் உயர்வதை உறுதி செய்ய வேண்டும்” என்று அவர் கூறுகிறார்.

ராஜஸ்தானில் தடுப் பணைகளை கட்டிய பிறகு, அந்த பகுதியில் நிலத்தடி நீர்மட்டம் உயர்ந்து, விவசாயிகள் பயிர்களை அறுவடை செய்ய, “அவர்களின் வருமானம் 100 சதவீதம் உயர்ந்திருப்பதை நாங்கள் கண்டோம்” என்று மேத்தா கூறினார். ஆனால், துரதிர்ஷ்டவசமாக, அவர்கள் இன்னும் ஆழ்துளைக் குழாய்க் கிணறுகள் மூலம் தண்ணீரை எடுத்துக் கொண்டிருந்தார்கள், “அதனால் தடுப்பணை களில் சேமிக்கப்படும் தண்ணீரில் குறைந்தது 40 முதல் 50 சதவீதம் வரை குறைகிறது. எனவே அந்த தண்ணீரை சேமிக்க இன்னும் என்ன செய்யலாம் என்று யோசிக்க ஆரம்பித்தோம்.”

விவசாய நடைமுறை களில் நீர் நுகர்வைக்


*2014-ல் ராஜஸ்தானில் ரோட்டரி ஆதரவுடன் கட்டப்பட்ட தடுப்பணையின் கோப்பு புகைப்படம்.*

ரஷீதா பகத்



*ஒரு தடுப்பணை திட்டத்தில் கிராம மக்களுடன் பச்சிசியா மற்றும் சங்க உறுப்பினர்கள்.*



ரஷீதா பகத்



**மேலே:** RC *ப்ருமத் துருக்டர்ஷெய்ம் கோச்சர்ஸ்பெர்க், பிரான்ஸ் முன்னாள் தலைவர் பிலிப் டாங்கெல்சர் (வலமிருந்து இரண்டாவது) ராஜஸ்தானில் உள்ள கலகோட்டா கிராமத்தில் ஒரு தடுப்பணை திறப்பு விழாவில்* (2014).

**இடது:** *ஆல்வாரில் உள்ள கலேர் கிராமத்தில் சங்கத்தால் கட்டப்பட்ட ஒரு தடுப்பணை.*



குறைப்பதற்கான வழிகள் குறித்து அந்தத் துறையில் உள்ள நீர் வல்லுநர்களுடன் பல சுற்று விவாதங் களுக்குப் பிறகு, “சொட்டு நீர் பாசனத்தில் செய்யக் கூடிய சில வகையான விவசாயம் இருப்பதை நாங்கள் கண்டு பிடித்தோம்; துரதிருஷ்ட வசமாக ராஜஸ்தானில் பரவலாக பயிரிடப்படும் கோதுமை மற்றும் கடுகு போன்ற பயிர்களை சொட்டு நீர் பாசனம் மூலம் செய்யமுடியாது. ஆனால் அதிர்ஷ்டவசமாக பழ மரங்களை சொட்டு நீர் பாசனம் மூலம் வளர்க்கலாம்'' என்றார்.

எனவே விவசாயிகள் தற்போது நெல்லிக்காய், எலுமிச்சை, சாத்துக்குடி, எலந்தப்பழம் மற்றும் பப்பாளி போன்ற பிராந்தியத்திற்கு ஏற்ற பழ மரங்களை நடவு செய்யத் தொடங்கியுள்ளனர். “இந்தப் பழ மரங்களால் அவர்களுடைய வருமானம் மூன்று மடங்கு உயரும். மேலும் பழ மரங்கள் வளரும் போது, அவர் இந்த மரங்களுக்கு கீழே உள்ள நிலத்தில் பயிர் செய்யமுடியும். இதன் விளைவாக, அவரது வழக்கமான வருடாந்திர வருமானத்தை உறுதி செய்யும் அதே வேளையில், பழங்கள் மூலம் அவருக்கு கூடுதல் வருமானமும் தருகிறோம்'' என்கிறார் மேத்தா.

மேலும், பழ மரங்களுடன், சொட்டு நீர் பாசனம் அமைக்க ரோட்டேரியர்கள் இந்த விவசாயிகளுக்கு ரூ.10,000 தொகையை வழங்கத் தொடங்கியுள்ளனர். இதற்காக அரசாங்கத் திடம் இருந்து 50 சதவீத

மானியம் பெறுவதற்கும் அவர்களுக்கு உரிமை உண்டு. ஆனால், பணம் கிடைப்பதில் தாமதம் ஏற்படுவது தான் ஒரே பிரச்சனை என்று அவர் மேலும் கூறினார். இதனுடன் வங்கியில் இருந்து கடனாக சிறிது பணம் மற்றும் அவரது தனிப்பட்ட சேமிப்பில் கொஞ்சம் சேர்த்து, குறு விவசாயி சொட்டு நீர் பாசன முறையை சொந்தமாக அமைக்கலாம், இது வரும் ஆண்டுகளில் நிலத்தடி நீரில் பெரும் சேமிப்புக்கு வழிவகுக்கும்.

சிறு/குறுகிய விவசாயிகளின் நிலங்களை சுற்றிச் சென்று அவர்களுக்குத் தேவையான உரங்கள், பூச்சிக்கொல்லிகள் மற்றும் இதர உள்ளீடுகள் குறித்து ஆலோசனை வழங்க இரண்டு தோட்டக்கலை நிபுணர்களும் நியமிக்கப்பட்டுள்ளனர். சிறு விவசாயிகளுக்கு மண்புழு உர பைகள் வழங்கப்பட்டுள்ளது, அதன் மூலம் அவர்களே உரத்தை தயாரிக்க முடியும், என்றார்.

### விவசாயிகளுக்கான சந்தைப்படுத்தல் சவால்

இந்திய விவசாயிகள், குறிப்பாக சிறு மற்றும் குறு விவசாயிகள், சந்தைப்படுத்தலில் சவால்களை எதிர் கொள்கின்றனர், ஏனெனில் முகவர்கள், தரகர்கள் மற்றும் இடைத் தரகர்கள் விலையைக் கட்டுப்படுத்தி பெரும் லாபம் ஈட்டுகின்றனர். இதில் நஷ்டமடைபவர்கள் விவசாயிகள் தான். இந்த சிறு விவசாயிகள் மதிப்பு கூட்டப்பட்ட விவசாயத்தின் மூலம் உற்பத்தியில் ஒரு முக்கியமான நிலையை அடையும்போது முழு நிலைமையும் மாறும் என்று அவர் நம்புகிறார். "அவர்கள் பெரும் உற்பத்தியை அடைந்தவுடன், இடைத்தரகர் பெரிய லாபத்தை எடுத்துவிடக்கூடாது என்பதால் நாங்கள் அவர்களை பண்ணை நிறுவனங்கள் அல்லது கூட்டுறவு நிறுவனங்களுக்குச் செல்ல ஊக்குவிப்போம். பெரும் உற்பத்தியின் மற்றொரு நன்மை என்னவென்றால், விவசாயி இதை அடையும் தருணத்தில், அவர் தனது விளைபொருட்களை விற்க தரகரிடம் ஓட வேண்டியதில்லை. தரகர் அவரிடம் வருவார், அது விலையில் 10 முதல் 20 சதவீதம் வரை வித்தியாசத்தை ஏற்படுத்துகிறது.

விவசாயிகளின் நிறுவனங்கள் அல்லது கூட்டுறவுகள் உருவாக்கப் பட்டவுடன், அவர்கள் தங்கள் விளைபொருட்களை மிகவும் ஒழுங்கமைக்கப்பட்ட முறையிலும் லாபகரமாகவும் விற்பது மட்டு மல்லாமல், உள்ளீடுகளை கூட்டாக வாங்குவதும் அவற்றை மிகவும் மலிவாக மாற்றும், என்றார்.

### மற்ற துறைகள்

சிறு விவசாயிகளின் வருமானம் கணிசமான அளவு உயரும்போது இந்தியாவின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் நேரடித் தாக்கம் ஏற்படுவதைத் தவிர, இந்த மானியம் பாதிக்கும் பல துறைகள் உள்ளன. இவை கல்வி, குறிப்பாக பெண் குழந்தைகளின் கல்வி, MHM போன்றவற்றின் விழிப்புணர்வு மற்றும் ஆதரவின் மூலம் பெண்களின் சுகாதாரம் ஆகியவற்றை உள்ளடக்கியது என்று பச்சிசியா மேலும் கூறினார். "இந்த மானியத் திட்டம் பெண்கள் நலனில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தும். நம் நாட்டில் பெண்கள் தண்ணீர் எடுக்க 2–3 கி.மீ தூரம் நடந்து செல்ல






IPDG *ஜீதேந்தர் குப்தா (வலது) மற்றும்* DG *மகேஷ் திரிகா*
*(இடமிருந்து இரண்டாவது)* RC *டெல்லி பிரீமியர் உறுப்பினர்களுடன்.*

வேண்டும் என்பது அனைவரும் அறிந்ததே. நீர்நிலைகளை மேம் படுத்துவது அவர்களுக்கு இந்த பெரும் சுமையை குறைக்க உதவும். சாதாரண தொழிலுக்காக நகரங் களுக்கு இடம்பெயர்வதும் இதனால் நிறுத்தப்படும்.''

இவை அனைத்தும் தரை மட்டத்தில் நடக்க, மூன்று ஆண்டுகள் ஆகும் என அவர் ஒப்புக்கொண்டார்; நீர் மட்டம் உயர ஒரு வருடம் ஆகும், மேலும் பழ மரங்களை நடுவதன் பலன் மூன்று ஆண்டுகளில் தெரியும்.

"நாளின் முடிவில், விவசாயத்தின் அடிப்படைக் கருத்தை மாற்ற விரும்பு கிறோம், மேலும் ஒரு சிறு விவசாயியின் அதிகரித்த வருமானத்தின் தாக்கம் மிகப்பெரியதாக இருக்கும்.''



ரஷீதா பகத்

சிறந்த செய்தியை கடைசியாக சொன்ன சங்கத் தலைவர், இத்திட்டத்தில் இருந்து வரும் $2 மில்லியன் (கிட்டத்தட்ட ரூ.$16 கோடி) தவிர, இந்திய தொழில் நிறுவனங் களிடமிருந்து கூடுதல் $2 மில்லியனுக்கான உறுதிப்பாட்டை ஏற்கனவே பெற்றுள்ள தாகக் கூறினார். "இது ஆரம்பம் தான்; எங்கள் நன்கொடை யாளர்களும் சமூகமும் இந்தத் திட்டத்தின் உண்மையான தாக்கத்தைப் பார்த்த வுடன், அதன் விளைவாக மேலும் இந்தத் திட்டம் ஐந்து ஆண்டுகளில் $100 மில்லியனாக உயரும் என்று எதிர்பார்க்கிறோம்'' என்றார்.

கிராமப்புற இந்தியாவின் வளர்ச்சிக்கு உதவ விரும்பும் பல இந்திய கார்ப்பரேட்டுகள் உள்ளன என்றும், கல்வி, சுகாதாரம், வாழ்வாதாரம் மற்றும் சுற்றுச்சூழல் போன்ற பல்வேறு கூறுகளைக் கொண்ட இந்தத் திட்டத்தால், "நம் CSR நோக்கங்கள் மற்றும் அர்ப்பணிப்புகளுடன் இணங்கிய வேறு ஏதாவது ஒரு பகுதியையும் அவர்கள் கண்டுபிடித்து நம்முடன் கூட்டு வைப்பார்கள்.'' என அவர் கூறினார்.

இந்த ஆண்டுக்கான ப்ரோக்ராம்ஸ் அஃப் ஸ்கேல் இந்தியாவிற்கு வழங்கப்பட்டதில் தனது மகிழ்ச்சியை வெளிப்படுத்திய TRF அறங்காவலர் பாரத் பாண்டியா, இந்த மானியம் மாற்றத்தைக் கொண்டு வரவும், சுற்றுச்சூழல் நிலைத் தன்மையை மேம்படுத்தவும், இந்தியாவில் உள்ள கிராமப்புற சமூகங்களுக்கு பிரகாசமான எதிர்காலத்தை உறுதி செய்யவும் சங்கத்திற்கு உதவும் என்றார்.■

# சிங்கப்பூரில் தெற்காசிய வரவேற்பு





**மேலே:** PRIP *மார்க் மலோனி மற்றும் அவரது மனைவி கே (இடமிருந்து)* PDGs *ராஜீவ் சர்மா, சுபாஷ் ஜெயின்,* RI *இயக்குனர் அனிருதா ராய்சௌத்ரி மற்றும் தெற்காசிய வரவேற்பு தலைவர் பிரியேஷ் பண்டாரி ஆகியோருடன்.*

**இடது:** PDG *பண்டாரி மற்றும் அவரது மனைவி எல்லோரா* TRF *அறங்காவலர் லாரி லன்ஸ்போர்டுடன்.*

**கீழே:** *இடமிருந்து:* RI *பொது செயலாளர் ஜான் ஹியூகோ, அவரது மனைவி மார்கரெட், கேத்தரின் கம்ப் மற்றும்* RIPE *ஸ்டெஃப்னி அர்ச்சிக்.*











மேலிருந்து கடிகார திசையில்: RID *ராய்சௌத்ரி மற்றும்* TRF *அறங்காவலர் கீதா மானேக்;* இடமிருந்து: RID *ராய்சௌத்ரி* TRF *துணைத்தலைவர் பரத் பாண்டியா மற்றும் மாதவி;* RID 3201 PDG *மாதவ் சந்திரன் மற்றும் சுஜாதா;* RIDN KP *நாகேஷ், அவரது மனைவி உமா மற்றும் ஷிப்ரா ராய்சௌத்ரி;* DGND *ரவிசங்கர் டகோஜு மற்றும் அவரது மனைவி பாவ்லா* Rtn *ராம்பூர் விஸ்வநாத்துடன் (நடுவில்).*






TRF துணைத் தலைவர் பாண்டியா மற்றும் மாதவி.



PRIP சேகர் மேத்தா மற்றும் ராஷி.



PRIP K R ரவீந்திரன் மற்றும் TRF துணைத்தலைவர் பாண்டியா.



RIPE ஸ்டெஃப்னி தனது உதவியாளர் PDG டாம் கம்ப் உடன்.




PDG ஆஷா வேணுகோபால் மற்றும் அனிருத் பல்டிவால்.










**மேலே இருந்து கடிகார திசையில்:**
RIDNs M *முருகானந்தம் (இடது) மற்றும் நாகேஷ்; வானதி மற்றும்* PRIP *ரவீந்திரன்,* PRID C *பாஸ்கர் மற்றும் மாலா, மற்றும்* PDG *பண்டாரி;* PRIP *மலோனி மற்றும் கே; (இடமிருந்து)* PDGs VR *முத்து, சுரேஷ் ஹரி மற்றும் தீபக் ஷிகார்பூர்;* TRF *துணைத் தலைவர் பாண்டியா, மாதவி மற்றும்* RID *ஹான்ஸ்-ஹெர்மன் காஸ்டன்.*







RID *ராய்சௌத்ரி,* PRIP *மேத்தா, ராஷி மற்றும்* PDG *பண்டாரி.*






**வலமிருந்து:** *ஷிப்ரா,* RID *காஸ்டன் மற்றும் அவரது மனைவி நட்ஜா பீக்கார்ட்.*
**வலது: இடமிருந்து:** *வானதி,* PRIP *ரவீந்திரன்,* PRIDs *பாஸ்கர் மற்றும் மகேஷ் கோட்பாகி, மற்றும்* RIDN *முருகானந்தம்.*







**இடமிருந்து:** RID *ராய்சௌத்ரி,* RI *பொதுச் செயலாளர் ஹியூகோ, மார்கரெட், எல்லோரா,* PDG *பண்டாரி, ஷிப்ரா மற்றும்* PDG *ஜெயின்.* **வலது:** PRID *கமல் சங்வி மற்றும் சோனல்.*





DG ஜெயினுடன் RID ராய்சௌத்ரி மற்றும் ஷிப்ரா.







மேலே: PRID A S வெங்கடேஷ், வினிதா; கீழே: PDG N சுப்பிரமணியன், அவரது மனைவி லலிதா, மொஹிந்த்ரு மற்றும் DGE அமிதா மற்றும் PDG ஜெயின்.



புகைப்படங்கள்: ரஷீதா பகத்; வடிவமைப்பு: S கிருஷ்ணப்ரதீஷ்

SINGAPORE 2024

# ரோட்டரியை தவிர்க்க முடியாததாக மாற்றுங்கள்

ரஷீதா பகத்



RIPE ஸ்டெஃப்னி அர்ச்சிக்

“உங்கள் சங்கத்தை உறுப்பினர்களுக்கு எப்படி தவிர்க்க முடியாததாக மாற்றுவீர்கள்? அவர்களிடம் ரோட்டரி நம்முடையது என்ற எண்ணத்தை எப்படி வளர்ப்பீர்கள்? இதுதான் நான் உங்கள் முன் வைக்கும் சவாலாகும்” என்று சிங்கப்பூரில் நடைபெற்ற மாநாட்டின் பொது அமர்வில் உரையாற்றிய உள்வரும் தலைவர் ஸ்டெஃப்னி அர்ச்சிக் கூறினார்.

அவ்வாறு செய்வதற்கு பலவழிகள் உள்ளன என்று கூறிய அவர், அதற்கு ஒரு உதாரணத்தையும் கூறினார். கோவிட் தொற்றுக்குப் பிறகு, அமெரிக்காவின் மஸ்ஸாஸுசெட்ஸ் என்னுமிடத்தில் உள்ள ஹோலியோக் ரோட்டரி சங்கம் சில மாற்றங்களையும், சில புதுமைகளையும் புகுத்தி எப்படி உறுப்பினர்களை வளர்த்தெடுத்தது என்று விளக்கினார். “இந்த பின்னடைவை ஒரு பலமாக மாற்றுவதன் மூலம், சங்கம் உள்ளூர் நூலகத்தில் உள்ள சமூகக்கூடத்தில் சந்திப்பு கூட்டங்களை நடத்தியது. அருகிலிருந்த ஒரு இடத்திலிருந்து மதிய உணவு வரவழைக்கப்பட்டது. அதற்காகும் செலவு ஒருவருக்கு 10 டாலர்தான். அதுவும் வேண்டும் என்றால் மட்டும் வாங்கிக் கொள்ளலாம். அல்லது தங்கள் வீட்டிலிருந்தே மதிய உணவை கொண்டு வரலாம். அப்படி வருபவர்கள் இலவசமாகவே கூட்டத்தில் பங்கேற்கலாம். இது நியாயமாகச் செயல்படுவதற்கு சிறந்த வழியாகும்.” “இதன் மூலம் சங்கத்தில் 13 புதிய நபர்கள் உறுப்பினர்களாகச் சேர்ந்தார்கள்” என்று அவர், பலத்த கைதட்டலுக்கு இடையே கூறினார்.

இது நம்முடைய சங்கம் என்கிற உணர்வை உறுப்பினர்களிடையே தலைவர்கள் உருவாக்க வேண்டும் என்று அவர் வலியுறுத்தினார். மேலும் சங்கத்தின் அனுபவங்கள் ரோட்டரி உறுப்பினர்கள் என்ற முறையில் அவர்கள் என்ன எதிர்பார்க்கிறார்கள் என்பதை ஏற்கெனவே இருக்கும் உறுப்பினர்கள் மற்றும் வருங்கால உறுப்பினர்களிடம் கேட்டறிவதுதான் சிறந்த நடைமுறையாகும். இந்த இடத்தில் ரோட்டரியின் செயல் திட்டம் மூலம் கருத்துக்களைச் சேகரிக்கவும் சங்கத்தின் வலுவான புள்ளிகளை மதிப்பிடவும், மேம்படுத்துவதற்கான பகுதியை அடையாளம் காணவும் மற்றும் சவால்களை எதிர் கொள்ளவும் முடியும் என்றார் அவர்.

உலகில் தொடர்ந்து மாற்றங்கள் நிகழ்ந்து வரும் நிலையில், ரோட்டரி சங்கங்கள் மட்டும் ஒரே இடத்தில் நிலையாக நிற்க முடியாது. ஆனால், நாம் செய்யும் மாற்றங்கள் சீரானதாகவும், உத்திகள் நிறைந்ததாகவும், ஒரு நீண்ட கால கண்ணோட்டத்துடனும் இருக்க வேண்டும். இது உங்கள் சங்கத்தில் பயனுள்ள மாற்றத்தை உருவாக்கத் தேவையான தொடர்ச்சியை உங்களுக்கு வழங்கும். செயல் திட்டத்தைப் பின்பற்றுவதும், சமூகத்தின் பரிந்துரைகளை நிவர்த்தி செய்வதும், ரோட்டரி உறுப்பினர்கள் அனைவரும் தற்போதைய அல்லது புதிய சங்கத்தை தங்களுடையது போல உணரும் நிலை வரவேண்டும் என்றே நாங்கள் விரும்புகிறோம்.

இங்கு தான், “பன்முகத்தன்மை, சமத்துவம் மற்றும் உள்ளடக்கத்துக்கான (DEI) நமது உறுதிப்பாட்டை விரிவுபடுத்துவதன் முக்கியத்துவம் முக்கிய பங்கு வகிக்கிறது. மேலும் உறுப்பினர்கள் பரஸ்பரம் ஒருவருக்கொருவர் நலனில் அக்கறை செலுத்துவது ரோட்டரியின் எல்லையை விரிவு படுத்துவதற்கும் சிக்கலான காலகட்டத்தில் அமைதியை பரப்புவதற்கும் முதல் படியாகும், என்றார் அவர்.

### அமைதியை கட்டமைக்க முன்னுரிமை

உலகில் அமைதியைக் கட்டியெழுப்புவது ரோட்டரிக்கு முதன்மையான முன்னுரிமையாக உள்ளது. ரோட்டேரியன்கள் இதைச் செய்வதற்கான மிகச்சிறந்த வழிகளில் ஒன்று அமைதி ஃபெலோஷிப். 25 ஆண்டுகளுக்கு முன்பு சிங்கப்பூரில் TRF அறிவித்த திட்டமாகும். இது அமைதியை விரும்பும் வல்லநர்களுக்கு மோதல்களை எவ்வாறு தடுப்பது அல்லது முடிவுக்கு கொண்டுவருவது என தெரிந்துகொள்ள உதவுகிறது. ரோட்டரி அமைதி மையங்கள் மூலம் 1800 அமைதிக் கூட்டாளிகள் பட்டம் பெற்றுள்ளனர். மேலும் 140-க்கும் மேலான நாடுகளில் சிறந்த உலகத்தை அமைக்க பணியாற்றி வருகிறார்கள்.

ஓட்டோ மற்றும் பிரான் வால்டர் அறக்கட்டளையின் 15.5 மில்லியன் டாலர் நன்கொடைக்கு நன்றி. இப்போது இஸ்தான்புல்லில் உள்ள பாசேசெஹிர் பல்கலைக்கழகத்தில் மேலும் ஒரு அமைதி மையம் உருவாக்கப்பட்டு வருகிறது. அங்கு அடுத்த ஆண்டு ரோட்டரி தலைவரின் அமைதி மாநாடு பிப்ரவரி 20 முதல் 22 வரை நடைபெற உள்ளது. “பிளவுபட்ட உலகில் அமைதியை மீட்டெடுத்தல்” என்பது மாநாட்டின் கருபொருளாகும். மேலும் இது ரோட்டரியின் முறையான அமைதி முயற்சிகளில் கவனம் செலுத்துவதோடு, ஒன்றாக கற்பதற்கான வாய்ப்புகளை வழங்குகிறது. இதற்கான பதிவு ஜூலை மாதம் தொடங்கும். இந்த முக்கியமான முன்முயற்சிக்கு ரோட்டேரியன்களின் ஆதரவு தேவை என்றார் ஸ்டெஃப்னி.

உண்மை என்னவென்றால், “நாங்கள் உலகில் அமைதியைக் கொண்டுவரப்போவதில்லை, போலியோவை ஒழிக்கப் போவதில்லை அல்லது மந்திரக் கோலை அசைத்தோ அல்லது வேடிக்கையான வார்த்தைகளைக் கூறியோ உறுப்பினர்களை வளர்க்கப் போவதில்லை. அது உங்களிடம் தான் உள்ளது. புதிய உறுப்பினர்களைச் சேர்ப்பதன் மூலம், அதிக டாலர்களில் நன்கொடைகளைப் பெறுவதன் மூலம் மற்றும் திட்டங்களை முறையாகப் பூர்த்தி செய்வதன் மூலம்தான் நீங்கள் இந்த மாயாஜாலத்தை ஏற்படுத்த முடியும்”.

ஸ்டெஃப்னி மேலும் கூறுகையில், “25 ஆண்டுகளுக்கு முன்பு சிங்கப்பூரில் நடைபெற்ற சர்வதேச மாநாட்டை பற்றிய எனது நினைவுகளை நான் மறக்க மாட்டேன். அப்போது நான் மாவட்ட ஆளுநராக இருந்தேன். இப்போது ரோட்டரி இன்டர்நேஷனல் தலைவர் பதவியை ஏற்றுக் கொள்வதில் நான் உண்மையிலேயே பெருமைப்படுகிறேன்,” என்றார். பங்கேற்பாளர்கள் வீடு திரும்பியதும் மாநாட்டில் தாங்கள் ஏற்படுத்திய தொடர்புகளை கட்டியெழுப்ப வேண்டும் என்று அவர் வலியுறுத்தினார்.■

# அமைதி, மகளிர்க்கு அதிகாரம், மனநலத்தில் கவனம் ஈர்த்த RI மாநாடு

ரஷீதா பகத்

நாம் வாழும் சிக்கலான மற்றும் மோதல்கள் நிறைந்த காலத்தை பிரதிபலிக்கும் வகையில், சிங்கப்பூரில் நடைபெற்ற ரோட்டரி சர்வதேச மாநாட்டில் வெளிவந்த வலுவான செய்தி என்னவென்றால் அமைதி, மகளிர்க்கு அதிகாரம் அளித்தல் மற்றும் மனநலம் பற்றியது. தொடக்க அமர்வில் உரையாற்றிய RI தலைவர் கோர்டன் மெக்கினலி, “கடந்த ஆண்டு உலகில் அமைதி நிலவ வேண்டும் என்பதுதான் பலரின் எண்ணமாக இருந்தது. ரோட்டரியின் பணிகளில் முன்னிலை வகிப்பதும் அதுதான். ஸ்காட்டிஷ் கவிஞர் ராபர்ட் பர்ன்ஸை மேற்கோள் காட்டிய அவர், “உலக மக்கள், குறிப்பாக ரோட்டேரியன்கள் பொதுவான மனிதநேயம் மற்றும் அமைதி, கருணை நிறைந்த உலகத்தை கட்டியமைக்க வேண்டிய நேரம் வந்துவிட்டதை வலியுறுத்தினார். உலகில் அமைதி திரும்பாத சூழலில் நாம் கடினமான பயணத்தை மேற்கொள்ளும்போது சில சோதனையான தருணங்களையும் அனுபவித்து வருகிறோம். உலகின் பிரச்னைகள் நம்மை ஆழமாக பாதிக்கின்றன. ஏனென்றால் நமக்கு நண்பர்கள் இருக்கிறார்கள். சில நேரங்களில் குடும்பத்தினர், அண்டை வீட்டாருடன் மனத்தாங்கலையும் இழப்பையும் அனுபவித்து வருகிறோம்.

ஆனால், “நமது சேவைத் திட்டங்கள், மனிதாபிமான முயற்சிகள், முறையான அணுகுமுறை மூலம் மோதல்களுக்கு தீர்வுகண்டு அமைதியை கட்டியெழுப்ப முயற்சித்து வருகிறோம். உலகில் நேர்மறையான மாற்றத்திற்கு கிரியா ஊக்கிகளாக நாம் செயல்பட்டு வருகிறோம். சண்டை சச்சரவுகள் இல்லாத சிறந்த உலகத்தை நிர்மாணிக்க பொதுவான நோக்கத்துடன் மனித குலத்தை ஒன்றுபடுத்துவதற்கான முயற்சியில் ஈடுபடுவதில் நாம் ஒரு சிறந்த எடுத்துக்காட்டாக செயல்பட்டு வருகிறோம்” என்றார்.

அமைதியை கட்டியெழுப்புவது என்றால் “போர் நிறுத்தம் அல்ல”




2023–24 RI *தலைவர் கார்டன் மெக்கினல்லி சிங்கப்பூரில் நடந்த* RI *மாநாட்டில் ஒரு அமர்வில் உரையாற்றுகிறார்*

என்று மெக்கினலி கூறினார். உலகில் போர் நடைபெறும் இடங்களுக்கு நாம் அணிவகுத்துச் சென்று ''போரை நிறுத்துங்கள்'' என்று சொல்ல நாம் விரும்புவோம். ஆனால், துரதிருஷ்டவசமாக நமக்கு அந்த சக்தி இல்லை. ஆனால், சண்டைகளும் மோதல்களும் ஏற்படாமல், தொடக்கத்திலேயே அமைதியை கட்டியெழுப்புவதற்கான சக்தி நம்மிடம் இருப்பதாக நான் நம்புகிறேன். நோய்களைத் தடுப்பது மற்றும் சிகிச்சை அளிப்பது, குடிநீர், சுகாதாரம், மருத்துவ வசதிகளை ஏற்படுத்துவது, குழந்தைகளின் ஆரோக்கியத்தை மேம்படுத்துவது, அவர்களுக்கு அடிப்படைக் கல்வி அறிவை ஏற்படுத்துவது, சமூகப் பொருளாதாரத்தை மேம்படுத்துவது, சுற்றுச்சூழல் பாதுகாப்பை நிலை நிறுத்துவது ஆகியவற்றின் மூலம் இதைச் செய்ய முடியும்.

பொருளாதார மற்றும் அமைதியை கட்டியெழுப்பு வதற்கான அமைப்புடன் புதிய உத்தியுடன் ரோட்டரி கூட்டாண்மை அமைத்துள்ளது நமது அதிர்ஷ்டம் என்றே சொல்ல வேண்டும். அமைதியான உலகத்தை உருவாக்குவதற்கு இது உதவும்.

சமூகத் திட்டங்கள் மூலம் மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதற்கு ரோட்டேரியன்கள் கடுமையாக உழைத்து வருகின்றனர். உலகில் அமைதியை கொண்டு வருவதற்கு இது முக்கியமானது என்று RI தலைவர் வலியுறுத்திக் கூறினார்.

கடந்த ஆண்டில் நூற்றுக் கணக்கான, ஆயிரக்கணக்கான நபர்களை நான் சந்தித்துள்ளேன். ஆனால், அவர்களில் மூன்றுபேரை மட்டும் நான் இப்போது உங்களுக்கு அறிமுகப்படுத்துகிறேன்.

முதலாவது 16 வயது கெவின். பியூனஸ் அயர்ஸில் வசித்து வந்தார். அவரும் அவரது மனைவி ஹெதரும் கடந்த ஆண்டு நவம்பர் மாதம் அர்ஜென்டினாவுக்கு சென்றிருந்தபோது என்னை சந்தித்தனர். கெவினுக்கு காது கேட்காது. வாய் பேச முடியாது. ரோட்டரி நிதியுதவி பெற்ற பள்ளியில் படித்தார். அவரது சைகை மொழி மொழிபெயர்ப்பாளர் மூலம் கெவின், ''இந்த கோடையில் பள்ளிப்படிப்பை முடித்து கல்லூரிக்குச் சென்று படித்து மோட்டார் மெக்கானிக்காக விரும்புகிறேன்'' என்று கூறினார். அவர் நினைப்பது நடக்கும் என்று அவரது ஆசிரியர்களும் உறுதிப் படுத்தினர். ''ரோட்டரிக்கும் அதன் சிறப்பான பணிக்கும் நன்றி. கெவின், நம்பிக்கையான, அமைதியான எதிர்காலத்தைப் பெறுவதற்கான வாய்ப்பு கிடைத்துள்ளது''. என்றார்.

ரோட்டேரியன்கள் வாழ்க்கையை மாற்றியமைத்த இரண்டாவது நபர், 16 வயது டாப்னே. இவர் ஜாம்பியாவைச் சேர்ந்தவர் என்றாலும் கடந்த ஜனவரியில் நான் இந்தியாவில், சண்டீகரில் இருந்த போது என்ன சந்தித்தார். இங்குள்ள சண்டீகர் ரோட்டரி சங்கம் நீண்ட காலமாக, இதயக் குறைபாடுள்ள இளைஞர்களுக்கு அறுவைச்சிகிச்சை மூலம் வாழ்வளிக்கும் திட்டத்தைச் செயல்படுத்தி வருகிறது. டாப்னேவும் இதயக் குறைபாட்டை நீக்கும் அறுவைச்சிகிச்சை செய்து கொண்டு புதிய வாழ்வைத் தொடங்க ஜாம்பியா திரும்பினார். அவர் இப்போது மகிழ்ச்சியாக இயல்பான வாழ்க்கை வாழ்ந்து வருகிறார். இத்திட்டத்தின் கீழ் பயன்பெற்ற 777-வது இதய நோயாளி டாப்னே என்பது குறிப்பிடத்தக்கது.



போலியோ போன்ற முடக்குவாத நோயிலிருந்து ரோட்டரி பாதுகாத்த மூன்றாவது நபர் ஆப்பிரிக்காவின் மலாவி நாட்டைச் சேர்ந்த குழந்தை. அவருக்கு போலியோ சொட்டு மருந்து கொடுக்கும் வாய்ப்பு எனக்கு கிடைத்தது. இதன் மூலம் அக்குழந்தை போலியோ நோயிலிருந்து பாதுகாக்கப்படும். ரோட்டரி தனிநபர்களுக்கு அதிக நம்பிக்கை மற்றும் அமைதியான எதிர்காலத்துக்கான வாய்ப்பை வழங்கியதற்கு மற்றொரு சிறந்த உதாரணமாகும்.

எனது பதவிக்காலத்தில் நான் கவனம் செலுத்திய மற்றொரு விஷயம் மனநலம் என்று குறிப்பிட்டார் கோர்டன் மெக்கினலி. அவர் மேலும் கூறுகையில், ''இது எனது தனிப்பட்ட விஷயம். பத்து ஆண்டுகளுக்கு முன்னர் எனது சகோதரர் இயன், மன அழுத்தத் திலிருந்து விடுபட தனியாக நீண்ட போராட்டம் நடத்தினார். இந்த பயங்கர நோயினால் அவர் அனுபவித்த வேதனை அதிகம். இறுதியில் அந்த நோய் அவரது வாழ்வையே பறித்து விட்டது. எனக்கும் அவரை நேசித்தவர்களுக்கும் இது ஒரு பெரிய இழப்பாகும். எங்கே நாம் தவறிவிட்டோம்? இன்னும் என்ன

ரஷீத்தா பகத்



RI *தலைவர் மெக்கினல்லி மற்றும் அவரது மனைவி ஹெதர் தங்கள் குடும்பத்துடன்.*

செய்திருக்கலாம்?'' என்ற கேள்வி என்னுள் எழுந்தது.

அவர் மேலும் கூறுகையில், ''நான் உங்களின் அனுதாபத்தை பெற வேண்டும் என்பதற்காக இந்த கதையைக் கூறவில்லை. எனது அனுபவத்தை உங்களிடம் பகிர்ந்து கொண்டேன். மன அழுத்தத்துக்கு எதிரான போராட்டம், உங்களின் இளைய சகோதரர் உள்ளிட்ட குடும்பத்தில் அன்பானவர் எவரையும் பாதிக்கலாம். கடந்த 18 மாதங்களில் ரோட்டேரியன்கள் பலர், தங்கள் குடும்ப விஷயங்களை என்னிடம் பகிர்ந்துகொண்டுள்ளனர் என்றார் அவர்.

துயரங்கள், வலிகள் அல்லது தனிமைக்கு முடிவு காண்பதன் மூலம் நிச்சயமாக ரோட்டேரியன்களால் மன ஆரோக்கியம் மற்றும் நல்வாழ்வை மேம்படுத்த முடியாது. சவால்கள் வாழ்க்கையின் தவிர்க்க முடியாத பகுதியாகும். ஆனால், இதை எதிர்த்துப் போராடுவதற்கு மற்றவர்களின் உதவியை நாட முடியும். சில நபர்கள், சில நிறுவனங்கள் மற்றும் சில நுணுக்கமான செயல்கள் மூலம் நாம் சேவை செய்யும் மக்களிடம் மாற்றத்தை ஏற்படுத்த முடியும். அவை தகுதியான மலிவான விலையில் பராமரிப்புக்கான அணுகலை உறுதிசெய்யும்.

நமது சங்கங்களை இதமாக, வரவேற்கத்தக்க சூழலில் வைத்திருப்பதன் மூலம் நாம் பலவற்றை சாதிக்க முடியும். நாங்கள் அனைவர் மீதும் அக்கறை செலுத்து வதுடன் ஒருவர் சொல்வதை மற்றொருவர் கேட்கிறோம். அனைவரும் ஒன்று என்பதை உணர வைக்கிறோம். நல்வாழ்வு, மனநல ஆரோக்கியம் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துதல், மனநலச் சேவைகளுக்கான அணுகலை மேம்படுத்துதல் ஆகியவற்றுடன் தொடர்புடைய களங்கத்தை துடைக்க கடந்த 12 மாதங்களுக்கு மேலாகப் பணியாற்றிவரும் உலகெங்கிலும் உள்ள ரோட்டேரியன்களுக்கு நன்றி தெரிவித்துக் கொள்வதாகவும் அவர் குறிப்பிட்டார்.

கடந்த ஆண்டில் கணிசமான முன்னேற்றம் ஏற்பட்டிருந்தாலும் இன்னும் நிறைய செய்ய வேண்டியுள்ளது. மேலும் இரண்டாம் நாள் அமர்வில் ரோட்டரி உலகில் மனநல மேம்பாட்டுக்காக செயல்படுத்தப்பட்டு வரும் சில நம்பமுடியாத திட்டங்களின் சிறப்பு அம்சங்களையும், புதுமையான வழிகளையும் நாம் காணமுடியும். நாம் கவனம் செலுத்தும் துறையின் எதிர்கால திட்டங்களுக்கு அடித்தளமாக அவை அமையும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

மனநல பிரச்னைக்கு தீர்வுகாண நாம் நீண்டகாலம் அர்ப்பணிப்பு உணர்வுடன் கவனம் செலுத்த வேண்டும் என்பதை நினைவில் கொள்ளுங்கள். இதற்கு சிகிச்சை அளிப்பது மட்டுமல்லாமல், மனநல பிரச்னைக்கான காரணத்தை அறிந்து அதற்கும் தீர்வுகாண்பதும், தொடர்ந்து ஆதரவு அளிப்பதும் முக்கியமாகும். மனநலம் என்பது உலகில் தனிப்பட்ட ஒருவரின் அல்லது குடும்பத்தினரின் போராட்டமாகும். ஆனால், இது இன்னும் அதிகமான ஒன்று. இது நாம் செய்யும் செயல் அனைத்தையும் பாதிக்கும் என்பதால் இதை எதிர் கொள்வது உலகளாவிய சவாலாகும். இதற்கு வயது, பாலினம், சமூகம் அல்லது தேசியம் என எல்லைகள் எதுவும் கிடையாது. ஆனாலும் இது நீண்டகால பிரச்னை, இதைப் பற்றி விவாதிப்பதுகூட இழுக்கு, வெட்கக் கேடானது என்று பலரும் மௌனமாக இருக்கின்றனர் என்றார் அவர்.

''ரோட்டேரியன்கள் வேறு வழியைப் பார்க்க மாட்டார்கள். மௌனம், இரக்கம் மற்றும் சாக்குப்போக்குகளைக் கூறி நீங்கள் அக்கறை செலுத்த முடியாது. நாங்கள் எப்போது தேவையோ அப்போது துணிச்சலுடன் எழுந்து நின்று, பேசவேண்டியதை பேசி, செயலில் ஈடுபடுவோம்'' என்று மெக்கினலி அழுத்தமாக தெரிவித்தார்.

இதைத்தான் ரோட்டரி செய்தது. சமீபத்தில் பிலிப்பின்ஸில் உள்ள ஒரு கிராமத்தில், உள்ளூர் சமூகத்தைச் சேர்ந்த தாய்மார்களுக்கு உதவ உடல் ஆரோக்கியம் மற்றும் நல்வாழ்வுக்கான கிளினிக்கை தொடங்கி யுள்ளோம். கொலராடோவில் உள்ள ரோட்டரி சங்கங்கள், உலகெங்கிலும் உள்ள இளைஞர் களின் மனநல பிரச்னைகளுக்கு சிகிச்சை அளிக்கும் வகையில், மனநல மருத்துவர்கள் அது தொடர்பான சிறப்புக் கல்வியை பெறுவதை உறுதி செய்ய நிதிசார்ந்த ஒரு அறக்கட்டளையை ஏற்படுத்தியுள்ளன.

சங்க உறுப்பினர்களும் இதில் அதிக அக்கறை காட்டி வருகின்றனர் என்றார்.

மாநாட்டின் தொடக்க அமர்வில், பிரிட்டிஷ் பாப் ஸ்டார் டாலும் ஸ்காட், மனதைக் கவரும் சில பாடல்களைப் பாடினார். அவரும் மன அழுத்தத்தால் பாதிக்கப்பட்டவர். ஆனால், அவர் தனது ரசிகர்களிடம், மன அழுத்தத்துக்கு எதிரான போராட்டத்தைப் பற்றி வெளிப்படையாகப் பேசினார். மன அழுத்தப் பிரச்னை ஏற்பட்டால் சரியான நேரத்தில், சரியான நபர்களின் உதவியை நாடுவது முக்கியமானது என்பதை வலியுறுத்தினார்.



ரஷீதா பகத்

*மாநாட்டில் பிரிட்டிஷ் இசைக்கலைஞர் கலம் ஸ்காட்.*

சமத்துவமின்மையை எதிர்த்துப் போராடவும், பெணகள் மற்றும் குழந்தைகளின் உரிமைகளுக்காக போராடவும் பொதுவாழ்வில் தம்மை அர்ப்பணித்துக் கொண்ட கிராசா மசேலின் பேச்சை கேட்கும் வாய்ப்பும் மாநாட்டுப் பிரதிநிதிகளுக்கு கிடைத்தது. அவர் மொசாம்பிக் நாட்டின் கல்வி அமைச்சராகவும், கேப்டவுன் பல்கலைக் கழகத்தின் வேந்தராகவும் பணியாற்றியவர். ஐ.நா.வுடன் இணைந்து பணியாற்றி வருகிறார். குழந்தைகள், இளைஞர்கள் மற்றும் பெண்களின் உடல் ஆரோக்கியம், நல்வாழ்வுக்காக பணியாற்றியதற்காக உலக சுகாதார நிறுவனம் அவரை பாராட்டி கௌரவித்துள்ளது.

இந்த இக்கட்டான காலத்தில் உலகில் அமைதியை நிலைநாட்டுவதன் முக்கியத்துவம் குறித்து உரையாற்றிய கிராசாமசேல், ‘‘இது வேறு ஒருவரின் பிரச்னை என்று நினைக்காமல், இதை அரசாங்கத்தின் வேலை என்று விட்டுவிடாமல் அனைவரும் பொறுப்புடன் ஒன்றிணைந்து செயல்பட வேண்டும்’’ என்று கூறினார்.



*மொசாம்பிக் முன்னாள் கல்வி அமைச்சர் மற்றும் சர்வதேச பெண்கள் மற்றும் குழந்தைகள் உரிமை ஆர்வலர் கிரேசா மச்செல் (வலது).*

பல்வேறு பிராந்தியங்களில், பல்வேறு சூழல்களில் சிறுமிகளும், பெண்களும், அநீதி, வன்முறை, மோதல் உள்ளிட்ட பிரச்னைகளை சந்திக்க வேண்டியுள்ளது. மேலும் பருவநிலை மாற்றத்தால் இடப் பெயர்ச்சியையும் சந்திக்க வேண்டியுள்ளது என்றார். பெண்களின் மேம்பாட்டுக்கு ரோட்டரி எந்தவிதத்தில் உதவ முடியும் என்று கேட்டபோது, ‘‘பொறுப்புணர்வுதான் இங்கு முக்கியமானது. பொறுப்பை ஏற்றுக்கொள்ள இங்கு பலர் செல்வாக்கு மற்றும் அதிகாரத்தில் இருக்கின்றனர். நமக்குள்ள அதிகாரத்தை நல்ல விஷயங்களுக்கு குறிப்பாக பெண்களின் நல்வாழ்வுக்கு நாம் பயன்படுத்திக் கொள்ளவேண்டும். பெண்களுக்கு ஒரே மாதிரியான ஊதியம் வழங்கப்பட வேண்டும். அவர்களின் தனித்துவமான பங்களிப்பை உணர்ந்துகொள்ள வேண்டும். எல்லாவற்றுக்கும் மேலாக ‘‘பெண் கல்வி’’ முக்கியமானது என்றார்.■

# பிரெய்லில் சாகசம்

ஜெய்ஸ்ரீ

ரோட்டரி கிளப் அஃப் பெங்களூர் லேக்வேர்ல்ட், RIDக்கள் 3191 மற்றும் 3192-ன் எட்டு ரோட்டரி சங்கங்களுடன் இணைந்து பார்வையற்றோருக்கான கார் பேரணியை மே மாதம் ஏற்பாடு செய்தது. பெங்களூரில் உள்ள வேகா மாலில் 30 கார்களுடன் நடைபெற்ற இந்த நிகழ்வை அப்போதைய DG ஸ்ரீனிவாஸ் மூர்த்தி மற்றும் PDG ஃபசல் மஹ்மூத் ஆகியோர் கொடியசைத்து தொடங்கி வைத்தனர். எலக்ட்ரானிக் சிட்டியில் உள்ள கோல்ட் காயின்ஸ் கிளப் மற்றும் ரிசார்ட்டில் 40 கிமீ பேரணி நிறைவடைந்தது.

ஒவ்வொரு காரிலும் ஒரு பார்வையற்ற நபர் நேவி கேட்டராக இருந்தார், அவர் பேரணி ஆரம்பத்தில் பிரெய்லியல் திசைகளின் பட்டியலைப் பெற்றார். ஒவ்வொரு சோதனைச் சாவடிக்கும் குறிப்பிட்ட நேரம், வேகம் மற்றும் தூரத்தை அவர்கள் பின்பற்றுவதை உறுதிசெய்து, அவர்களுக்கு ஒதுக்கப்பட்ட பாதை வழியாக பார்வையுள்ள ஓட்டுநர்களை அவர்கள் வழிநடத்த வேண்டியிருந்தது. நம்பிக்கை, தொடர்பு மற்றும் ஒருங்கிணைப்பு ஆகியவை இதில் முக்கியமானவை. "எங்கள் ஓட்டத்தின் போது நாங்கள் ஒரு அழகான நட்பை உணர்ந்தோம் மற்றும் அர்த்தமுள்ள உரையாடலைப் பரிமாறிக் கொண்டோம்" என RC பெங்களூர் லேக்வேர்ல்டின் தலைவர் ஜுபைதா ஜமால் கூறுகிறார். அவர் ஓட்டுநர்களில் ஒருவராக இருந்தார், அவரை வழிநடத்திய லிங்கராஜ், அமெரிக்கா, சிங்கப்பூர் மற்றும் ஐக்கிய அரபு எமிரேட்ஸில் நிகழ்வுகளை நடத்திய சர்வதேச பரதநாட்டிய நடனக் கலைஞராவார்.

அவரது நேவிகேட்டரின் உதவியால், ஜுபைதா பெண்கள் பிரிவில் இரண்டாவது இடத்தைப் பெற்றார். "ஆனால் வெற்றி அவ்வளவு சுலபமானது அல்ல. ஆனால் சாதனையை விட, நாங்கள் பகிர்ந்து கொண்ட தோழமையை நான் இன்னும் பெரிதாக கருதுகிறேன். நாங்கள் பலமுறை தொலைந்து

*RC பெங்களூர் லேக்வேர்ல்ட் தலைவர் சுபைதா ஜமால் (இடமிருந்து 3வது), ஸ்ரீகாருண்யா சுப்பிரமணியம் ராஜன், RID 3192 DEI இயக்குனர் அபா சக்சேனா, RID 3191 DEI இயக்குனர் வரலட்சுமி பாலாஜி (வலது) மற்றும் RID 3191 மற்றும் 3192 உறுப்பினர்கள் கார் பேரணி நிகழ்வில்.*



போனோம், வழி பிரெய்லில் இருந்ததால் என்னால் அதைப் படிக்கவும் முடியவில்லை. ஓட்டம் முழுவதும் எனது கூட்டாளரை நான் முழுமையாக நம்ப வேண்டியிருந்தது, அது ஒரு மறக்கமுடியாத அனுபவமாக இருந்தது,'' என்று அவர் கூறுகிறார்.

இது இந்த நிகழ்வின் 14-வது ஆண்டாகும், இது சங்க உறுப்பினர் ஸ்ரீகாருண்யாவால் அவரது நிறுவனமான பீப்பிள் ஃபார் பீப்பிள் மூலம் உருவாக்கப்பட்டது. நாங்கள் அதைத் தொடர விரும்புகிறோம்'' என்கிறார் ஜுபைதா. மக்களுக்கு பார்வையற்றவர்களை பற்றி விழிப்புணர்வையும் உணர்திறனையும் ஏற்படுத்துவதே இதன் முதன்மையான நோக்கமாகும், மேலும் உள்ளடக்கிய சமுதாயத்தை உருவாக்க உதவு வதாகும். "பேரணியில் கலந்து கொண்ட 30 பார்வையற்ற நேவி கேட்டர்களிடம், "தாங்கள் அங்கீகரிக்கப்பட வேண்டும்'' என்ற உணர்வு மேலோங்கியிருந்தது. அவர்கள் எந்த சிறப்பு சிகிச் சையையும் எதிர்பார்க்கவில்லை; அதற்கு பதிலாக அவர்கள் தங்கள் திறமைக்காக அங்கீகரிக்கப்பட்டு, சமுதாயத்தின் ஒரு பகுதியாக இருக்க விரும்புகிறார்கள்.

பேரணி முழுவதும், அணிகள் தங்கள் வழிசெலுத்தல் திறன்கள், சிக்கலைத் தீர்க்கும் திறன்கள் மற்றும் ஒட்டுமொத்த ஒருங்கிணைப்பு ஆகியவற்றை சோதிக்க வடிவமைக்கப்பட்ட பல்வேறு பணிகளை எதிர் கொண்டன. விண்டேஜ் பைக்குகளில் மார்ஷல்கள் ஒவ்வொரு சோதனைச் சாவடியிலும் நேரத்தைக் கணக்கிட்டனர். "அனைத்து நேவிகேட்டர்களும் தங்கள் ஊனமுற்ற நிலையிலும் தீவிரமாக செயல் பட்டனர். சரியான வாய்ப்பையும் ஆதரவையும் வழங்கியபோது அவர்களின் நம்பமுடியாத திறனை இந்நிகழ்வு எடுத்துக்காட்டியது. மைசூரை சேர்ந்த நேவிகேட்டர் மாலினி போன்ற வர்களால் நாங்கள் ஈர்க்கப்பட்டோம், இது அவருடைய 16வது பேரணியாகும். அவர் சர்வதேச மாணவர்களுக்கு ஆன்லைனில் இசை கற்பிக்கிறார்'' என்கிறார் சங்கத் தலைவர்.




RID 3192 IPDG *ஸ்ரீனிவாஸ் மூர்த்தி மற்றும்* DG N S *மகாதேவ பிரசாத்* DEI *ஆர்வலரான தீபா நரசிம்மனுக்கு* DEI *வினையூக்கி விருது வழங்குகிறார். மாவட்ட* DEI *இயக்குநர்* (2023–24) *அபா சக்சேனா (இடது) மற்றும்* PDG *ஜீதேந்திர அனேஜா (வலது) காணப்படுகின்றன.*

பங்கேற்பாளர்கள் பெங்களூரைச் சேர்ந்த NGOக்களான மித்ரா ஜோதி, IDL மற்றும் விவிதாவின் மாணவர்கள், மேலும் அவர்களி டமிருந்து நுழைவுக் கட்டணமாக தலா ரூ.2,000 வசூலிக்கப்பட்டது, அதில் ஒரு பகுதி ரோட்டரி சங்கங்களின் சமூகத் திட்டங்களுக்கு நிதியளிக்கும். கோல்ட் காயின்ஸ் ரிசார்ட்டின் நிர்வாக இயக்குநர் தயானந்த், வெற்றி பெற்றவர்களுக்கு ரொக்கப் பரிசுகளை வழங்கினார், மேலும் பேரணி அணியினருக்கு மதிய உணவு ஏற்பாடு செய்தார்.

## DEI விருதுகள்

2023–24 ஆம் ஆண்டில், RID 3190 இலிருந்து பிரிக்கப்பட்ட RID 3192, "பன்முகத்தன்மை, சமத்துவம் மற்றும் உள்ளடக்கத்தை (DEI) மேம்படுத்துவதற்கான அவர்களின் அற்புதமான முன்முயற்சிகளுக்காக நிறுவனங்கள் மற்றும் தனிநபர் களைக் கொண்டாடவும், மேலும் மற்றவர்களை ஊக்குவிக்கும் வகையில் அவர்களின் சிறந்த நடைமுறைகளைப் பகிர்ந்து கொள்ள அவர்களுக்கு ஒரு தளத்தை வழங்கவும், ரோட்டரி DEI விருதுகளை அறிமுகப்படுத்தியது'' என்று மாவட்ட DEI இயக்குனர் (23–24) அபா சக்சேனா கூறுகிறார். மூன்று வகையான நிறுவனங்களிடமிருந்து சமர்ப்பிப்புகள் பெறப்பட்டன – NGO-க்கள், கல்வி நிறுவனங்கள் மற்றும் மருத்துவமனைகள் போன்ற பொது சேவை நிறுவனங்கள்; பெருநிறுவனங்கள் மற்றும் ரோட்டரி சங்கங்கள். "புதிய சாதனை படைத்து, சமூக தாக்கத்தை உருவாக்கி, பெண்கள், ஊனமுற்றோர் மற்றும் LGBTQ+ சமூகத்தினர் பணியிடத்திலும் சமூகத்திலும் பங்கேற்பதை ஊக்குவிக்கும் முயற்சிகளை நாங்கள் தேடினோம்.''

வெற்றியாளர்களில் விப்ரோ, ஜொமாட்டோ மற்றும் ஆர்பிராசெஸ் போன்ற கார்ப்பரேட்டுகளும், NIMHANS, பயோகான் அகாடமி, ஆல் இன்குளுசிவ் பௌண்டேடின் மற்றும் சார்தக் அறக்கட்டளை போன்ற பொது சேவை நிறுவனங்களும் அடங்கும். ரோட்டரி பிரிவின் கீழ், பெங்களூர் RCs, பெங்களூர் நார்த்வெஸ்ட், பெங்களூர் புவனேஸ்வரி நகர், சென்னை பாரதி மற்றும் E-கிளப் சென்னை சக்தி ஆகியவை தொடக்க DEI விருதுகளை வென்றன.■

# சிங்கப்பூரில் மற்றொரு மாயாஜால RI மாநாடு

ரஷீதா பகத்





TRF அறங்காவலர் துணைத் தலைவர் பரத் பாண்டியாவும் மாதவியும்.



RI இயக்குனர் அனிருதா ராய்சௌத்ரி மற்றும் ஷிப்ரா.



PRIP K R ரவீந்திரன் மற்றும் வானதி.





TRF *அறங்காவலர் தலைவர் பேரி ரசின் மற்றும் எஸ்தர்.*



RID 3250 PDG *சஞ்சய் கெம்கா இளம் பங்கேற்பாளருடன்.*



151 நாடுகளைச் சேர்ந்த 14,000க்கும் மேற்பட்ட ரோட்டேரியர்கள் சிங்கப்பூரில் மே 2024-ல் சர்வதேச மாநாட்டிற்காக ஒன்றுகூட, அது ஒரு சிறிய-ஐக்கிய நாடுகள் போல் இருந்தது; இது ஒவ்வொரு ஆண்டும் உலகின் பல்வேறு பகுதிகளில் நடைபெறும் ரோட்டரியின் வருடாந்திரக் கூட்டமாகும்.

ஒவ்வொரு ஆண்டும் வெவ்வேறு நகரங்களில் நடைபெறும், ரோட்டரி மாநாடு உறுப்பினர்கள் மற்றும் பங்கேற்பாளர்கள் ஒருவரையொருவர் இணைத்து, அவர்களின் சமூகங்களில் உள்ள சிக்கல்களைத் தீர்ப்பதற்கு எவ்வாறு நடவடிக்கை எடுப்பது என்பது குறித்து பல நிபுணர்களிடமிருந்தும் கற்கும் மையமாக செயல்படுகிறது.

இந்த மாநாட்டின் ஆற்றல் மற்றும் அதிர்வுகள், கடந்த காலங்களில் நடைபெற்ற மற்ற ரோட்டரி மாநாட்டைப் போலவே, மாயாஜாலமாகவும்



RI *இயக்குனர் ராஜு சுப்பிரமணியன் மற்றும் வித்யா.*





**அமர்ந்திருப்பவர்கள், வலமிருந்து:** PRIP *கல்யாண் பானர்ஜி, எஸ்தர் மற்றும்* PRIP *பேரி ரசின்,* RI *பொதுச் செயலாளர் ஜான் ஹியூகோ, ஹெதர் மற்றும்* RI *தலைவர் கார்டன் மெக்கினல்லி,* PRIP *சேகர் மேத்தா மற்றும் ராஷி.* **நிற்பவர்கள், வலமிருந்து:** *சூசேன் மற்றும்* PRIP *ஹோல்கர் நாக், மார்கரெட் ஹியூகோ, ஜூலியட் மற்றும்* PRIP *இயன் ரைஸ்லி,* PRIP *மார்க் மலோனி மற்றும் கே,* PRIP *ரவீந்திரன் மற்றும் வானதி,* PRIP D K *லீ மற்றும் யங்,* PRIP *ஜெனிபர் ஜோன்ஸ் மற்றும்* DGE *நிக் கிரயாசிச்.*



ஹெதர் மற்றும் RI தலைவர்
கார்டன் மெக்கினல்லி.




ஹவுஸ் ஆஃப் ஃப்ரெண்ட்ஷிப்-ல்
வண்ணமயமான ரங்கோலி.








PRIP *மேத்தா மற்றும் ராஷி.*



PRIP *மார்க் மலோனி தனது மகள் சுசன்னா ஃபெய்த் கிரேருடன்.*

தொற்றும் விதமாகவும் இருந்தன. தொடக்க அமர்வில், 200க்கும் மேற்பட்ட உறுப்பினர் நாடுகளின் கொடிகளை அசைத்து ரோட்டராக் டர்கள் அணிவகுப்பு நடத்த வண்ணமயமான உடையணிந்த பங்கேற்பாளர்கள் உற்சாகமான ஆரவாரம், விசில் மற்றும் பரவலான கரவொலியுடன் கொண்டாடினர்.

நிகழ்வின் தொடக்கத்தில் ஸ்வீடிஷ் இசைக்குழு அபாவின் மயக்கும் பாடல்கள் ஒலிக்க, பரந்து விரிந்த மெரினா பே சாண்ட்ஸ் எக்ஸ்போ மற்றும் கன்வென்ஷன் சென்டரில் உள்ள பிரமாண்டமான ஆடிட்டோரி யத்தில் சில நூற்றுக்கணக்கான ரோட்டேரியர்கள் தன்னிச்சையாக தங்கள் இருக்கைகளில் இருந்து எழுந்து நடனமாடத் தொடங்கினர்.

பெரும்பாலான ரோட்டரி சர்வதேச நிகழ்வுகளில் இசை தேர்வுகள் சிறப்பாக இருக்கும் அதற்கு RI தலைவர் கார்டன் மெக்கினலியின் மாநாடும் விதிவிலக்கல்ல. ஆரம்ப அமர்வு, பிரிட்டிஷ் பாடகர் காலம் ஸ்காட்டின் ஆத்மார்த்தமான மெல்லிசையுடன் மூடிந்தது.

நான்கு நாட்கள் முழுவதும், மாநாட்டின் அமர்வுகள், நிகழ்வுகள், சிறப்பு மதிய உணவுகள் மற்றும் இரவு உணவுகள் ஆகியவற்றில் உலகம் முழுவதும் ரோட்டேரியர்களால் செய்யப்பட்ட 100க்கும் மேற்பட்ட மனிதாபிமான சேவை திட்டங்கள் பகிரப்பட்டன.

“அர்த்தமுள்ள இணைப்புகளை உருவாக்க மக்களை ஒன்றிணைப் பதும், மிகவும் ஆரோக்கியமான, நம்பிக்கையான மற்றும் அமைதியான உலகத்தை உருவாக்க உதவுவதற்கு ஒருவரையொருவர் ஊக்குவிப்பதும் ரோட்டரி மாநாடுகளின் பணியாகும்” என்று மெக்கினலி கூறினார்.

RIPN மரியோ டி கமர்கோ, 1974–75-ல் அமெரிக்காவின் மின்னசோட்டாவின் கடும் குளிர்காலத்தில் தான் பங்கேற்ற ரோட்டரி யூத் எக்ஸ்சேஞ்ச் திட்டம், தனது வாழ்க்கைப் பார்வையை மாற்றி,'' யூத் எக்ஸ்சேஞ்ச் திட்டத்தில் இருந்து வரும் முதல் RI தலைவராக நான் ஆவதற்கு வழி வகுத்தது'' என கூறினார்.

உள்வரும் RI தலைவர் ஸ்டெஃப்னி அர்ச்சிக், “உடன் இருக்கும் உணர்வின் முக்கியத்துவத்தை என்னால் மிகைப் படுத்த முடியாது. உடன் இருக்கும் உணர்வே ரோட்டரியின் மாயாஜாலம் என நான் செல்வேன் என்றார்.

இந்தியாவின் கிராமப்புறங்களில்

தண்ணீரை சேமிப்பதன் மூலமும் பல்வேறு நீர் ஆதாரங்களை காப்பதன் மூலமும் இந்தியாவில் நிலையான விவசாயத்தை உக்குவிக்கும் திட்டத்திற்கு $2 மில்லியன் ப்ரோக்ராம் அஃப் ஸ்கேல்ஸ் மானியத்தை TRF அறங்காவலர் தலைவர் பேரி ரசின் அறிவித்து சிங்கப்பூரிலும் அதற்கு அப்பால் இருக்கும் ஒவ்வொரு இந்திய ரோட்டேரியரின் மனதையும் நெகிழசெய்தார்.

பலவிதமான ஸ்டால்களை சுற்றி ஆராய்வது, புதிய இணைப்புகளை உருவாக்குவது மற்றும் உலகத்தை சிறந்த இடமாக மாற்ற உதவுவதாக உறுதியளிப்பது என பார்வையாளர்களால் நட்பு மாளிகை பரபரப்பாக இருந்தது. பாலஸ்தீனம் மற்றும் உக்ரைனில் வன்முறையின் இருண்ட நிழல்கள் சூழ்ந்திருக்க, பல பேச்சாளர்கள் அமைதிக்காகப் பணியாற்றுவது முன்னெப்போதையும் விட இப்போது எவ்வளவு முக்கியமானது என்று அதன் அவசரத் தேவையை வலியுறுத்தினர்.

பெரிய திட்டங்கள் பற்றி விவாதிக்கப்பட்டு, பெரிய கனவுகள் காணப்பட்டாலும், இந்த மெகா நிகழ்வின் திட்டமிடலில் கவனம் செலுத்தப்பட்ட சிறிய விவரங்கள் இதயத்தைத் தொட்டன. உதாரணமாக, பிரதான ஆடிட்டோரியத்தில் இந்த அறிவிப்பை எடுத்துக் கொள்ளுங்கள்: பார்வையாளர் கவனத்திற்கு, இந்த பொது அமர்வின் போது விளக்குகள் போட்டோ சென்சிடிவ் எபிலெப்சி உள்ளவர்களுக்கு வலிப்புத்தாக்கங்களைத் தூண்டலாம்.''

பொது அமர்வு ஒன்றில் உரையாற்றிய பொதுச் செயலாளர் ஜான் ஹியூகோ, எந்தவொரு பெரிய பிரச்சனையையும் தீர்க்க தொலைநோக்கு பார்வை இருக்க வேண்டும் என்று ஆல்பர்ட் ஐன்ஸ்டீன் கூறியதை மேற்கோள் காட்டினார், ''நாம் நமது சிந்தனை, செயல்களில் புரட்சியை ஏற்படுத்த வேண்டும், மேலும் உலக நாடுகளுக்கு இடையிலான உறவில் புரட்சியை ஏற்படுத்த தைரியம் வேண்டும், என்றார்.''


பார்வையாளர்களை வரவேற்கும் போது, அவர்கள்



*சிங்கப்பூரின் பாரம்பரிய சிங்க நடனம்.*




RIDN K P *நாகேஷ், உமா,* PDG *மாதவ் சந்திரன், சுஜாதா, ரோட்டராக்டர்களுடன்.*








PRIP நாக் மற்றும் சூசேன்.



TRF அறங்காவலர் அஜீஸ் மேமன் மற்றும் சமினா.



RIPN மரியோ டி கமார்கோ மற்றும் டெனீஸ் உடன் PRIP ஜெனிஃபர் ஜோன்ஸ் (நடுவில்).




இந்திய கொடியுடன் ஒரு ரோட்டராக்டர்.



RI இயக்குனர் முஹம்மது ஃபைஸ் கித்வாய் மற்றும் உஸ்மா.



PRID A S வெங்கடேஷ் மற்றும் வினிதாவுடன் PRIP ரவீந்திரன் (நடுவில்).



RIPN டி கமார்கோ மற்றும் டெனிஸ்.



ஜூலியட் மற்றும் PRIP ரைஸ்லியுடன் PRIP பானர்ஜி.



வானதி ரவீந்திரன், வினிதா வெங்கடேஷ் மற்றும் RI இயக்குநர் G B ச்யு மனைவி ஃபிலிஸ்.



மார்கரெட் ஹியூகோ



*RI தலைவர் மெக்கினல்லி மற்றும் அறங்காவலர் தலைவர் ரசின் ஆகியோர் RID 3300 PDG பிண்டி ராஜசேகரனுக்கு Rotary People of Action விருது வழங்குகிறார்கள். RI பொதுச் செயலாளர் ஹியூகோ இடதுபுறம் உள்ளார்.*




*ஹவுஸ் ஆஃப் ஃப்ரெண்ட்ஷிப்-ல் நேபாள ரோட்டேரியர்கள்.*






**இடது:** *ஹவுஸ் ஆஃப் ஃப்ரெண்ட்ஷிப்-ல் ஒரு LGBT+ ரோட்டரி பெல்லோஷிப் ஸ்டால்.*

உலகளாவிய பார்வையாளர்கள் என்பதால், அவர் பேசுவதை விட பல மொழிகளைப் பேச விரும்புவதாக ஹியூகோ கூறினார். ஆனால் ஒரு நிமிடம் பொறுங்கள் தன்னால் அதைச் செய்ய முடியும் என்று அவர் கூற, திரையில் அவரது படம் ஒளிர, இந்தியில்: சிங்கப்பூர் மே ஆப் கே சாத் ஹோனா ஏக் ஆனந்த் ஹே (உங்களுடன் சிங்கப்பூரில் இருப்பதில் நான் மகிழ்ச்சி யடைகிறேன்) என்று கூறினார். அந்த காணொளி பிரெஞ்சு, கொரியன் மற்றும் சீன மொழிகளிலும் அதையே கூறியது. இதற்கு ஒரு AI கருவி பயன்படுத்தப்பட்டது!

படங்கள்: ரஷிதா பகத்
மற்றும்
ரோட்டரி இன்டர்நேஷனல்.



*ஒரு ரோட்டேரியன் தன் குழந்தையுடன்.*




*ஹவுஸ் ஆஃப் ஃப்ரெண்ட்ஷிப்-ல் ஒரு நகைக்கடை.*

# உலகளாவிய மானியங்கள் உலகை எவ்வாறு பாதிக்கின்றன

ரஷீதா பகத்

2022–23 ரோட்டரி ஆண்டில் TRF 1,098 உலகளாவிய மானியங்களை வழங்கியதாக ரோட்டரி அறக்கட்டளை அறங்காவலர் தலைவர் *பேரி ரசின்* சிங்கப்பூர் மாநாட்டில் அறிவித்தார். இந்தியாவில் நிலையான விவசாயத் திற்காக $2 மில்லியன் ப்ரோக்ராம் அஃப் ஸ்கேல்ஸ் மானியத்தின் நான்காவது திட்டத்தை அறிவித்த ரசின், சுற்றுச்சூழலைப் பாதுகாப்பதும் நிலையான வாழ்வாதாரத்தை ஆதரிப்பதும் ரோட்டரியின் முன்னுரிமையாக உள்ளது என்றார். உலகின் பல்வேறு பகுதிகளில் உள்ள சதுப்புநிலங்களை மீட்டெடுப்பது TRF மானியத்துடன் மேற்கொள்ளப்பட்டுள்ளது. பிலிப்பைன்ஸில், ரோட்டரி சங்கங்கள் அதன் திட்ட பசுமை சுற்றுச்சூழல் முன்முயற்சியின் ஒரு பகுதியாக கரையோரங்களில் உள்ள சதுப்புநிலங்களைப் பாதுகாக்கவும் மீட்டெடுக்கவும் பெரிய அளவிலான நடவுகளில் பங்கேற்றன.

“அதனால்தான் TRF-ன் லட்சியமான நிதி திரட்டும் இலக்குகளை சந்திப்பது முக்கிய மானது. நாம் எவ்வளவு அதிகமாகச் செய்கிறோமோ, அவ்வளவு அதிகமாக நோய், வறுமை மற்றும் போரின் தாக்கத்தைப் போக்க உதவமுடியும். பெரிய பிரச்சனைகளுக்கு பெரிய தீர்வுகள் தேவை. இதற்கு போலியோவை விட சிறந்த உதாரணம் இருக்க முடியாது. பாகிஸ்தான் மற்றும் ஆப்கானிஸ்தானில் உள்ள சுகாதாரப் பணியாளர்கள் ஒவ்வொரு நாளும் தங்கள் உயிரை பணயம் வைக்கிறார்கள், அவர்களுக்கு நம் தொடர்ச்சியான ஆதரவு தேவை.”

ரோட்டேரியர்கள் இந்த தொழிலாளர்களுக்கு பல வழிகளில் உதவ முடியும்; போலியோ பிளஸ் சொசைட்டியில் சேருவதன் மூலமும் அல்லது அவர்களின் சங்கங்களில் அல்லது மாவட்டங்களில் மற்ற உறுப்பினர்களை இந்த பணியில் ஈடுபடுத்துவதன் மூலமும் செய்யலாம், “நாம் போலியோவை முடிவுக்கு கொண்டு வருவதற்கு மிக நெருக்கமாக இருக்கிறோம். ஒவ்வொரு டாலருக்கும் 2-க்கு 1 வீதமாக போலியோ ஒழிப்புக்கான ரோட்டரியின் நன்கொடைகளை கேட்ஸ் அறக்கட்டளை தொடர்ந்து விரிவுபடுத்தி வருகிறது என்பதை மறந்து விடாதீர்கள்” என்று அவர் மீண்டும் வலியுறுத்தினார்.

போலியோவை ஒழிப்பது ரோட்டரியின் முதன்மை

**இடமிருந்து:** PRID A S *வெங்கடேஷ்,* TRF *அறங்காவலர் பரத் பாண்டியா மற்றும்* TRF *தலைவர் பேரி ரசின்.*



நோக்கமாக இருக்கிறது; இந்த இலக்கை நோக்கி அது வேலை செய்து TRF-க்காக 2025-க்குள் $2.025 பில்லியன் திரட்டத் திட்ட மிட்டுள்ளது.

இந்த ஆண்டு, TRF $500 மில்லியன் என்ற உயரிய நிதி திரட்டும் இலக்கை நிர்ணயித்துள்ளது, "உங்கள் ஆதரவுடன் மட்டுமே நாங்கள் அதை அடைய முடியும். இதுவரை பங்களிக்காத ரோட்டரி மற்றும் ரோட்டராக்ட் உறுப்பினர்கள் உங்களின் முதல் நன்கொடையை வழங்குவீர்கள் என்று நான் குறிப்பாக நம்புகிறேன், ஏனெனில் இது ஒரு மாற்றத்தை ஏற்படுத்தும்."

### ரோட்ராக்டர்களை சேர்த்தல்

ரோட்டேரியர்கள் மற்றும் ரோட்டராக்டர்கள் ஒரு மாற்றத்தை ஏற்படுத்தக்கூடிய உலகளாவிய மானியத் திட்டங்களைத் தேடுமாறு ராசின் வலியுறுத்தினார். "உங்களின் மிகப்பெரிய மில்லியன் டாலர் டின்னர் நிதி திரட்டல் அல்லது என்ட் போலியோ நவ் நிகழ்வை நடத்த திட்டமிடுங்கள். நம் அறக் கட்டளையை ஆதரிக்க பல வகையான வழிகளும் உள்ளன, ஆனால் சிறியதாகத் தொடங்கி பெரியதாக கனவு காண உங்களை ஊக்குவிக்கிறேன்." மாவட்ட மானியங்களில் ரோட்ராக்ட் செயல் பாடுகள் மற்றும் திட்டங்களைச் சேர்ப்பதற்கான ஒரு வழக்கையும் அவர் முன்வைத்தார்.

25 ஆண்டுகளுக்கு முன்பு சிங்கப்பூர் மாநாட்டில் ரோட்டரி தனது முதல் அமைதி மையத்திற்கான திட்டங்களை அறிவித்ததை TRF அறங் காவலர் தலைவர் நினைவு கூர்ந்தார். இப்போது, 25 ஆண்டு களுக்குப் பிறகு, ஓட்டோ மற்றும் ஃபிரான் வால்டர் அறக்கட்டளையின் மிகவும் தாராளமாக $15.5 மில்லியன் நன்கொடை மூலம், ரோட்டரி தனது புதிய அமைதி மையத்தை துருக்கியின் இஸ்தான்புல்லில் உள்ள பக்சேசீர் பல்கலைக்கழகத்தில் அமைக்கிறது. அதன் திறப்பு அடுத்த ஆண்டு இஸ்தான்புல்லில் தலைமைத்துவ அமைதி மாநாட்டுடன் கொண்டாடப்பட உள்ளது.

அமைதியைக் கட்டியெழுப்பு வதற்கு ரோட்டரியின் முறையான அணுகுமுறை முன்னெப்போதையும் விட இன்றைக்கு தேவைப்படுகிறது என்று ராசின் ஒரு வருத்தமான குறிப்பைத் தெரிவித்தார். "இன்று உலகம் முழுவதும் அதற்கான ஆதாரத்தை நாம் காண்கிறோம். என்னைப் பொறுத்தவரை, ஹைட்டியில் நடந்த மோதல் குறிப்பாக மனவேதனையை ஏற்படுத்தியது. ஹைட்டியின் பாதி மக்கள் சுத்தமான குடிநீருக்கான அடிப்படை உரிமையை இழந்துள்ளனர். ஆனால் வன்முறை மற்றும் குழப்பங்களுக்கு மத்தியில், ரோட்டரி உறுப்பினர்கள் ஹைட்டியர்களின் வாழ்க்கையை மேம்படுத்த உழைத்து வருகின்றனர்."

### சுற்றுச்சூழலில் ஐ.நா வுடன் கூட்டு


ரோட்டரி இப்போது ஐக்கிய நாடுகளின் சுற்றுச்சூழல் திட்டத்துடன் ஒரு மூலோபாய கூட்டுறவை மேற்கொண்டுள்ளதாக ராசின் வெளிப்படுத்தினார். "இது நம் சமூகங்களில் நன்னீர் சுற்றுச்சூழல் அமைப்புகளைப் பாதுகாக்கவும், மீட்டெடுக்கவும் மற்றும் நிலைநிறுத்தவும் ஒரு பெரிய திறனைக் கொடுக்கும்."

மலேரியா இல்லாத ஜாம்பியாவிற்கான ப்ரோக்ராம் அஃப் ஸ்கேல் மானியம் குறித்து கூறுகையில் ஜாம்பியா திட்டம் அந்த நாட்டில் ரோட்டரியின் பொது உருவத்தை அதிகரித்தது மட்டுமல்லாமல், மூன்று புதிய சங்கங்களை உருவாக்கத் தூண்டியது, மேலும் இது உகாண்டாவில் மலேரியாவை நிவர்த்தி செய்ய இதேபோன்ற திட்டங்களை ஊக்கப்படுத்தியுள்ளது என்றார்.

TRF கவனம் செலுத்திய மற்றொரு முக்கியமான பகுதி, "இயற்கை பேரழிவுகளின் போது சமூகங்களில் குறுகிய கால முன்னுரிமைகளை சுறுசுறுப்பாக நிவர்த்தி செய்வது. கடந்த ஐந்து ஆண்டுகளில், TRF 8 மில்லியன் டாலர் மதிப்பிலான 274 பேரிடர் மீட்பு மானியங்களை வழங்கியுள்ளது, இது இயற்கை பேரழி வுகளால் பாதிக்கப்பட்ட சமூகங்களின் அவசரமான தேவைகளை பூர்த்தி செய்ய உறுப்பினர்களுக்கு உதவியது. ஆனால் இந்த மானியத்திற்கும் ரோட்டேரியர்களின் தாராள ஆதரவு தேவை என்று அவர் மேலும் கூறினார்.

TRF-க்காக ரோட்டேரியர்கள் திரட்டிய பணம் போலியோவை ஒழிப்பதற்கான முயற்சிகளை ஆதரித்தது மட்டுமல்லாமல், உலகெங்கிலும் உள்ள மக்களை பாதிக்கும் உலகளாவிய மானியங் களையும் விளைவித்துள்ளது. "இதற்கு ஒரு சிறந்த உதாரணம், ரோட்டரி உலகளாவிய மானியங்கள் பலவற்றின் மூலம் 4,200 குழந்தைகளுக்கான இதய அறுவை சிகிச்சைகளை டாக்டர்கள் செய்திருந்ததை சில மாதங்களுக்கு முன்பு இந்தியாவில் உள்ள ஒரு மருத்துவமனைக்கு நான் சென்றபோது கண்டேன் என்றார்."

நாளின் முடிவில், இது போன்ற வேலைகள் வாழ்க்கையை மாற்றி, உலகம் முழுவதும் நம்பிக்கையை உருவாக்குகின்றன என்றார். ■




# தொடர்ச்சி மற்றும் உறுப்பினர் சேர்க்கையில் டீ கமார்கோவின் கவனம்!

ரஷீதா பகத்

‘‘மின்னசோட்டாவில், ஒயிட் பியர் லேக்கில், உறைபனி குளிரில், அன்பான மனிதர்களுடன் ஒருவருடத்தை கழித்த நிலையில், 1974–75-ல் நடைபெற்ற ரோட்டரி இளைஞர் பரிமாற்றத் திட்டம் (Youth Exchange Programme - YEP) என் வாழ்க்கை கண்ணோட்டத்தை மாற்றியமைத்தது. அந்த அனுபவம் YEP தர வரிசையில் இருந்து பதவிக்கு வரும் முதல் ரோட்டரி இன்டர்நேஷனல் தலைவராக எனக்கு வழிவகுத்தது.’’ என்று சிங்கப்பூர் மாநாட்டின் நிறைவு அமர்வில் உணர்ச்சி மிகு உரையாற்றிய, RIPN மாரியோ டீ கமார்கோ கூறினார்.

பலத்த கரவொலிக்கு இடையே, தமது துணைவியார் டெனிஸ் உடன் நின்றிருந்த நிலையில், ரோட்டரியின் மதிப்பை உயர்த்து வதிலும், அதன் குறிக்கோள்களை முன்னெடுத்துச் செல்வதிலும் கவனம் செலுத்தப் போவதாகவும், குறிப்பாக தொடர்ச்சி என்னும் மந்திரத்தை பின்பற்றப் போவதாகவும் டீ கமார்கோ உறுதியளித்தார். ரோட்டரியில் ‘‘நான்’’ என்பதற்கே இடமில்லை. ‘‘நாம்’’ என்பது தான் சரியானது. நான் என்று கர்வத்துடன் சொல்லுவதுதான் பல பிரச்னைகளுக்கு காரணமாகிறது என்றார். நான் எனக்காக தலைமைப் பதவியை ஏற்கவில்லை, துணைவியார் டெனிஸ் மற்றும் மகன் ஆந்த்ரேவுக்காகவும் இதை ஏற்றுக்கொள்கிறேன். சிறுவயதிலேயே தன்னை ரோட்டரிக்கு பெற்றோர் அறிமுகப்படுத்தியதாக குறிப்பிட்ட அவர், லத்தீன் அமெரிக்காவைச் சேர்ந்த முன்னாள் தலைவர்களான பிரேசில் நாட்டின் பாவ்லோ கோஸ்டா (1990–91), அர்ஜென்டினாவின் லூயி கியா (1995–96) மற்றும் மெக்ஸிகோவின் பிராங் டெவ்லின் (2000–01) ஆகியோரின் கடுமையான உழைப்பையும் அங்கீகரித்தார். தொடர்ச்சியை பற்றி குறிப்பிட்ட முதல் தலைவர் இத்தாலியைச் சேர்ந்த கார்லோ ரவிஸ்ஸா (1999–2000). அவர் அப்போது DG ஆக இருந்தார்.

‘‘கூட்டாண்மை மனநிலையை ஏற்படுத்த உதவிய போலியோவின் வெற்றிகரமான படிப்பினைகளை மனதில்கொண்டுள்ளதாக கூறிய டீ கமார்கோ, ‘‘ரோட்டரியால் தனித்து நின்று செயல்பட்டு அற்புதங்களை நிகழ்த்த முடியும். ஆனால், உலகை மாற்றியமைக்க வேண்டுமானால்



RIPN மாரியோ டி கமார்கோ.

நமக்கு கூட்டண்மை தேவை'' என்றார். ஆப்பிரிக்காவில் ஒரு பழமொழி உண்டு. ''நீங்கள் வேகமாகச் செல்ல வேண்டுமானால், தனியாக நடந்து செல்லுங்கள். நீண்டதூரம் செல்ல விரும்பினால் சேர்ந்து நடந்து செல்லுங்கள்'' என்பதுதான் அது.

### உறுப்பினர் சேர்க்கையை அதிகரிப்பதில் புதுமை

புதிய வடிவங்களில் புதிய சங்கங்களை உருவாக்குவதில் புதுமையைக் கையாள வேண்டும் என அவர் வலியுறுத்தினார். மாறிவரும் உலகில், நவீன காலத்துக்கு ஏற்றவாறு நாம் நம்மை மாற்றிக்கொள்ள வேண்டும். அப்போதுதான் நாம் தொடர்ந்து இருக்க முடியும் என்றார். தொடர்ச்சியின் அவசியத்தை நாம் ஏற்றுக்கொண்டு செயல்பட வேண்டும். நாம் பங்கேற்பது சாதாரண ஓட்டப்பந்தயம் அல்ல, ரிலே ரேஸ். தொடர் ஓட்டப்பந்தயம், எனவே நாம் தனிப்பட்ட ஈகோவை விட்டுவிட்டு நீண்டநாள் குறிக்கோளை எட்டுவதற்கு முயற்சிக்க வேண்டும். கோர்டன் மெக்கினலி மற்றும் ஸ்டெஃப்னி அர்ச்சிக் பின்பற்றிய வழிகளைத் தொடர வேண்டும். அப்போதுதான் நாம் தொடர்ந்து முன்னேற முடியும் என்றார்.

உறுப்பினர் எண்ணிக்கையை அதிகரிக்கவும் வருவாயை பெருக்கவும் நாம் தொழில் முனைவோர், வர்த்தகர்கள், மருத்துவர்கள், தொழிலதிபர்கள், வழக்கறிஞர்கள், விற்பனையாளர்கள் (அவர் ஒரு வழக்கறிஞர் மட்டுமல்ல, விற்பனையாளரும் கூட) ஆகியோருடன் தொடர்புகொள்வது முக்கியமானது. ''ரோட்டரி பற்றி மக்களிடம் இருக்கும் நன்மதிப்பை நாம் புதுப்பிக்க வேண்டும். புதிய நடைமுறைகளைப் பின்பற்ற வேண்டும். ரோட்டரியின் திட்டத்தை வெற்றிகரமாகச் செயல்படுத்த உத்தரவாதம் அளிக்குமாறு இளம் தலைமுறையினருக்கு வேண்டுகோள் விடுக்க வேண்டும். அதாவது நாம் எடுக்கும் முடிவுகளில் அவர்களுக்கும் பங்கு இருக்கவேண்டும். அவர்களை எடுபிடிகளாக பயன்படுத்தாமல் முக்கிய முடிவுகளின்போது அவர்களின் எண்ணத்தையும் பிரதிபலிக்க வேண்டும்'' என்றார்.


மனைவி டெனிஸுடன் RIPN டி கமார்கோ.

ரோட்டரியின் 25 ஆண்டுக்கால தேக்கநிலை வளர்ச்சிக்கு பிறகும் உறுப்பினர் எண்ணிக்கையை அதிகரிப்பதுதான் எங்களின் மிகப் பெரிய முன்னுரிமை, சொத்து மற்றும் சவாலாகும் என்று அவர் வலியுறுத்தினார்.

ஒரு தன்னார்வ தொண்டு நிறுவனமாக ஒரு சிறந்த வரலாற்றைக் கொண்ட நாங்கள் அதிக உறுப்பினர்களைச் சேர்க்கும் போராட்டத்தில் நிச்சயம் வெற்றிபெறுவோம். உலகிற்கு நன்மை செய்வதால் நாங்கள் நிச்சயம் எங்கள் நிலையை தக்கவைத்துக் கொள்வோம். 40 ஆண்டுக்கால போராட்டத்துக்குப் பிறகு நாங்கள் போலியோவை முற்றிலுமாக ஒழிப்பதில் ஈடுபட்டு வருகிறோம்.

எனது ரோட்டரி பயணம் எப்போதும் டெனிஸை உள்ளடக்கியது என்று அவர் கூறினார். நான் அவளை திருமணம் செய்வதற்கு 6 மாதங்களுக்கு முன்னர் ரோட்டரியில் சேர்ந்தேன். நான் ரோட்டரிக்கு முதலிடம் கொடுத்ததால் அவள் என் மீது பொறாமையுடன் இருந்தாள். மேடையில் அவருக்கு பக்கத்தில் இருந்த டெனிஸ், ''நீங்கள் சேர விரும்புகிறீர்களா என்று கேட்டனர். ஆனால், நான் ரோட்டரிக்கு எனது வழியில் சேவை செய்ய விரும்புகிறேன். எனவே நான் ஒரு சாட்டிலைட் சங்கம் அமைக்க உதவினேன்'' என்றார்.

இறுதியில் டீ கமார்கோ கூறுகையில், ''ரோட்டரியை வழிநடத்திச் செல்வது சவாலான பணியாக இருக்கும். யாராவது ஒருவர் அதைச் செய்துதானே ஆக வேண்டும். எனவே நாங்கள் அந்த சவாலை (தலைமைப் பொறுப்பை) ஏற்றுக்கொண்டோம். அசாதாரண திறமையுடன் இணைந்து பணியாற்றுவதற்கும், உலகிற்கு நன்மை செய்வதற்கும் நாங்கள் தயாராக இருக்கிறோம்'' என்றார்.■

# RYLA-ல் வேடிக்கை, விளையாட்டு மகிழ்ச்சி, துள்ளல் இன்னும் பல

V முத்துகுமரன்

பவன் வித்யாலயாவைச் சேர்ந்த அக்ஷிதா, செயின்ட் ஜான்ஸ் உயர்நிலைப் பள்ளியைச் சேர்ந்த பவராஜ் மற்றும் சண்டீகரில், பாபுதாம் சேரி குடியிருப்பில் உள்ள ரோட்டரி வித்யா சதனைச் சேர்ந்த ராகினி யாதவ் ஆகிய மூன்று இளம் பருவத்தினர் RYLA-முகாமில் தங்களது மகிழ்ச்சியான அனுபவத்தை குடும்பத்தினருக்கும், வகுப்பு தோழர்களுக்கும் விவரித்தனர்.

இமாசலப் பிரதேசத்தின், நஹன் மாவட்டத்தில், இமயமலையின் இயற்கை எழில் சூழ்ந்த பின்னணியில் அமைந்துள்ள பக்தன் கிராமத்தில் உள்ள உயரடுக்கு குடியிருப்பு நிறுவனமான ''தி பிளீனம்'' பள்ளியில் RID 3080-க்கு உட்பட்ட சண்டீகர் ரோட்டரி சங்கம், தலைமைத்துவத்துக்கான பயிற்சிப் பட்டறைக்கு ஏற்பாடு செய்திருந்தது. சண்டீகர், பஞ்ச்குலா மற்றும் மொஹாலி நகரங்களில் உள்ள 9 பள்ளிகளைச் சேர்ந்த 82 மாணவர்கள் இதில் பங்கேற்றனர். வாழ்க்கையில் ஏற்படும் சவால்கள், அவற்றை எதிர்கொண்டு சமாளிப்பது எப்படி என்பது குறித்து விளக்கப்பட்டது. ''எல்லாவற்றுக்கும் மேலாக தலைமைத்துவ பண்பு களை வளர்த்துக் கொள்வது, மற்றவர்களுடன் தங்களை இணைத்துக் கொள்வது எப்படி, வெற்றிகரமான வாழ்க்கையை மேற்கொள்வது எப்படி என்பது குறித்து மாணவர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டது'' என்று சங்கத்தின் தலைவர் அனில் சத்தா தெரிவித்தார்.

''RYLA-ரோட்டரியில் எனது முதல் அனுபவம். எனது வாழ்க்கையையும், வாழ்க்கை நடைமுறைகளையும் மாற்றியமைக்கும் பல புதிய விஷயங்களை நான் கற்றுக்கொண்டேன்'' என்றார் அக்ஷிதா. ரோட்டரி பள்ளியில்



*மலை ஏறும் RYLA பங்கேற்பாளர்கள்.*



*அருண் அகர்வால், சங்கத் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்ட ஜதிந்தர் கபூர், DGN ரவி பிரகாஷ், RYLA கன்வீனர் சர்தாஜ் லம்பா மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களுடன்.*

படித்து வரும் ராகினி கூறுகையில், ‘‘RYLA-பயிற்சிப்பட்டறை, எனக்கு புதிய நண்பர்களுடன் தொடர்பு கொள்ள உதவியது. சமூக விஷயங்களை முன்னெடுத்துச் செல்வது குறித்த விவாதம் பயனுள்ளதாக இருந்தது’’ என்றார். வாழ்க்கையின் முன்னேற்றத்துக் கான வழிகளை ரோட்டரி திறந்து விட்டதுள்ளதாக பவராஜ் மகிழ்ச்சியுடன் தெரிவித்தார்.

ஏழை மாணவர்களுக்காக நடத்தப்பட்டு வரும் ‘‘வித்யா சதன்’’ பள்ளியைச் சேர்ந்த 8 முதல் 12 வது வரை படிக்கும் 12 மாணவர்களின் செலவை ரோட்டரி சங்கம் ஏற்றது. உரையாடல், வெளிப்புற நடவடிக்கை கள் மற்றும் குழுவை கட்டமைத்தல் உள்ளிட்ட அமர்வுகளில் இந்த மாணவர்கள் பங்கேற்றனர் என்றார் அனில் சத்தா.



முதல் நாள் பயிற்சி முகாமில் கடற்படை அதிகாரியாக இருந்து வானியல் ஆய்வாளராக மாறிய ஓய்வுபெற்ற கேப்டன் அனில்குமார் சிங்ரு, அண்டத்தின் அதிசயங்கள், பிரபஞ்சத்தின் மர்மங்கள் குறித்தும் மனித குலம் இன்னும் பல வெளிவராத உண்மைகளை கண்டறிய முற்பட்டு வருவது குறித்தும் மாணவர்களிடம் விவரித்தார்.

இரண்டாம்நாள் முகாமில், அவர்கள் இயற்கை பாதையில், சாகசப் பயணத்தில் இருந்தனர். ஒவ்வொருவரும் இறுதி இலக்கை அடைய மற்றவர்கள் உதவினார்கள். மாவட்ட RYLA தலைவர் மற்றும் DGND ரீட்டா கல்ரா, மாணவர்களிடம் உரையாற்றுகையில் RYLA என்பது இளைஞர்களுக்கான வெறும் கருத்தரங்கு மட்டுமல்ல, நீங்கள் தேர்ந்தெடுக்கும் எந்த துறை யானாலும் அதில் தலைமைத்துவப் பதவிக்கு வருவதற்கான தொடக்க களமாகும், என்று கூறினார்.

DGN ரவி பிரகாஷ் பேசுகையில், ‘‘மாணவர்கள் தங்கள் சமூகங்களிடம் வலுவான பிணைப்பை வளர்த்துக் கொள்ள வேண்டும். பல்வேறு பின்னணியிலிருந்து வந்து இந்த முகாமில் பங்கேற்றுள்ள மாணவர்கள் நட்புறவை வளர்த்துக் கொள்ள வேண்டும் என்றார். PDG மதுகர் மல்ஹோத்ரா, நேர்மறையான மற்றும் சுயசார்புத்தன்மையை ஊக்குவிக்கும் வகையில் பேசினார். வேடிக்கை நிறைந்த விளையாட்டுகளும் நிகழ்வுகளும் முகாமில் நடை பெற்றது. திரைப்படத் தயாரிப்புடன் தொடர்புடைய 24 கலைகளின் ஒருபகுதியான எடிட்டிங், இயக்கம், திரைக்கதை வசனம், இசை உள்ளிட்ட



திரைத்துறையின் நுணுக்கங்களை திரைப்பட தயாரிப்பாளர் ஓஜஸ்வி சர்மா விவரித்தார்.

RYLA அமைப்பாளர், சங்கத்தின் தொழில் சேவை இயக்குநர் சர்தாஜ் லம்பா, நிகழ்வை வெற்றிகரமாக செயல்படுத்தியதற்காக தனது குழு உறுப்பினர்களான அருண் அகர்வால், ஹரிஷ் வலேசா, ரோஸி கட்யால் மற்றும் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள ஜதிந்தர் கபூர் ஆகியோருக்கு நன்றி தெரிவித்துக் கொண்டார். ‘‘இளம் மாணவர்களுக்கு வலுவான எதிர்காலத்தை உருவாக்குவதற்கான திட்டங்களை செயல்படுத் தியதில் நாங்கள் பெருமை கொள்கிறோம். மாணவர்களுடன் கலந்துரையாடுவது, குழுவைக் கட்டமைத்தல், திறன் வளர்ப்பு உள்ளிட்ட பல்வேறு விஷயங்களில் கவனம் செலுத்தப் பட்டது என்று மகிழ்ச்சியுடன் அவர் தெரிவித்தார். எங்கள் சங்கம் 1958-ல் நிறுவப்பட்டது. அப்போது முதல் இன்று வரை நூற்றுக்கணக்கான RYLA முகாம்கள் நடைபெற்றுள்ளன. இதில் பங்கேற்று ஆயிரத்துக்கும் மேலான இன்டராக்டர்கள், ரோட்ராக்டர்கள் மற்றும் பள்ளி, கல்லூரி மாணவர்கள் பலன்பெற்றுள்ளனர். கடந்த 65 ஆண்டுகளுக்கு மேலாக சமூகத்தின் நன்மைக்காக நாங்கள் செயல்பட்டு வருகிறோம்’’ என்று அனில் சத்தா மேலும் கூறினார்.■

# டயாலிசிஸை எல்லாருக்கும் கிடைக்கச் செய்யும் ரோட்டரி

ரோட்டரி செய்திக்குழு

கர்நாடகத்தில் பெங்களூரு-க்கு அருகிலுள்ள ஹசனில் இருக்கும் சஞ்சீவனி கூட்டுறவு மருத்துவ மனையில், பன்னாட்டு நல்கையின் வழியாக மூன்று இயந்திரங்களுடன் ஒரு ஹீமோடயாலிசிஸ் மையத்தை அமைத்துள்ளது ஹசன் ஹொய்சாளா ரோட்டரி சங்கம், RID 3182. இந்தத் திட்டத்தின் வழியாக இந்த மையத்துக்குப் பாதுகாப்பான நீர் வழங்கல் அமைப்பும் UPS ஒன்றும் வழங்கப்பட்டன. இந்த மருத்துவமனையின் நிறுவனர் Dr குருராஜ் ஹெப்பார் இந்தச் சங்கத்தின் பதிவுத் தலைவர் ஆவார். இந்தத் திட்டத்துக்கான பன்னாட்டுக் கூட்டாளர், RC ஹொல்லிஸ் புரூக்லைன், RID 7870, USA.

பெங்களூர் சிறுநீரக அறக்கட்டளையின் உதவியுடன் மேலும் மூன்று இயந்திரங்களை வழங்கியதன்மூலம் இந்தச் சங்கம் இந்த மையத்தின் டயாலிசிஸ் சிகிச்சை வழங்கும் திறனை மேலும் பெருக்கியுள்ளது. இந்த மையத்தின் தொடக்க விழாவில் DG B C கீதா, திட்ட ஒருங்கிணைப்பாளர் பிரீத்தி மோகன், DRFC P நாராயண் பங்கேற்றனர்.■




DG B C *கீதா, திட்ட ஒருங்கிணைப்பாளர் ப்ரீத்தி மோகன், சங்கத்தலைவர்* M D *குமார்.* அமர்ந்திருப்பவர்கள், வலமிருந்து: DRFC P *நாராயண், PDG வேணு ராவ் மற்றும்* DRFC *சுரேஷ் அம்பிலி.*

# From RI South Asia

**Rotary Year 2024–25 Rotary Foundation zonal teams for Zones 4, 5, 6 & 7**

| Zone | Designation | Name | E-Mail address |
|---|---|---|---|
| 4 & 7 | RI Director | T N Subramanian | rtn.subramanian@gmail.com |
| 5 & 6 | RI Director | Anirudha Roychowdhury | anirudh.roychowdhury@gmail.com |
| 4, 5, 6 & 7 | TRF Trustee | Dr Bharat Pandya | drbspandya@gmail.com |
| 4 | E/MGA | Ashish Ramesh Ajmera | ashishajmera27@hotmail.com |
| | EPNC | Dr Ashes Ganguly | ashesganguly@yahoo.com |
| | RRFC | Dr N Subramanian | drnsubra@yahoo.co.in |
| 5 | E/MGA | R Madhav Chandran | madhav.chandran@ymail.com |
| | EPNC | Dr Chinnadurai Abdullah | chinnaduraiabdullah@yahoo.com |
| | RRFC | Gowri Rajan | rotary.gowri@gmail.com |
| 6 | E/MGA | Rajiv Sharma | rtn.rajiv.3030@gmail.com |
| | EPNC | Uttam Ganguli | uttamganguli57@gmail.com |
| | RRFC | Debashish Das | debashishdg32401920@gmail.com |
| 7 | E/MGA | Sam Rao Movva | sammovva@yahoo.com |
| | EPNC | Dr Girish Govind Gune | drgirish3131@gmail.com |
| | RRFC | Manjunath Shetty | manjunathshettym@gmail.com |

**TRF-Area of Focus: Major Gift Initiative Committee members from South Asia**

| Name | Area of Focus |
|---|---|
| PDG Deepak Gupta | Supporting Environment |
| PDG Suresh Hari | Economic and Community Development |

## RI வாரியத்தின் முடிவுகள்

RI இயக்குநர்கள் குழு ஏப்ரல் 8 முதல்10, 2024 அன்று அமெரிக்காவின் இல்லினாய், எவன்ஸ்டனில் உள்ள ரோட்டரி தலைமையகத்தில் கூடியது. பின்வரும் வாரிய முடிவுகள் ரோட்டரி சங்கங்களின் செயல்பாட்டிற்கு பொருத்தமானவை:

சங்கங்கள் தங்கள் இலக்குகளை அடைய உதவும் வகையில் மூன்றாண்டு தொடர் இலக்குகளையும் மற்றும் மூன்று வருட தொடர் பிராந்திய திட்டங்களை உருவாக்க மண்டலங்கள் அமைக்க சங்கங்களை வாரியம் வலுவாக ஊக்குவிக்கிறது. இந்த மூன்றாண்டு பிராந்திய திட்டங்களை ஆதரிக்க மாவட்டங்கள் மற்றும் மண்டலங்களை மேலும் ஊக்குவிக்கிறது.

2024–25-ம் ஆண்டில் இரண்டு புதிய மூலோபாய முன்முயற்சிகளுக்கு வாரியம் ஒப்புதல் அளித்துள்ளது: சங்க அனுபவம், சங்க செயல்பாடுகளை மேம்படுத்துதல் மற்றும் உறுப்பினர் தேவைகளை சிறப்பாகப் பூர்த்தி செய்ய மேம்பட்ட தயாரிப்புகள் மற்றும் கருவிகளைக் கொண்டு நிலையான, உறுப்பினர் திருப்தியை அதிகரிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

அமைதியைக் கட்டியெழுப்புவதில் ரோட்டரியின் பங்களிப்பைக் கொண்டாடுவதற்கு பிப்ரவரி 20–22, 2025 இல் துருக்கியின் இஸ்தான்புல்லில் தலைமைத்துவ அமைதி மாநாடு நடத்தப்பட உள்ளது. திட்டமிடப்பட்ட முழுமையான தலைப்புகளில் பின்வருவன அடங்கும்: இரண்டாக்கப்பட்டுள்ள உலகில் அமைதி; அமைதியை நிலைக்கச் செய்தல்; தொழில்நுட்பம், ஊடகம் மற்றும் அமைதியை கட்டியெழுப்புதல்; மற்றும் அமைதியைக் கட்டியெழுப்புவதில் சுற்றுச்சூழல் பிரச்சினைகள். ■



IPDG மஞ்சு ஃபட்கே (இடமிருந்து 3வது, இரண்டாவது வரிசை), RC புனே பிரைட் தலைவர் சுதிர் பாபட் மற்றும் அவினாஷ் ஜாக் ப்ராஜெக்ட் நவ்னி 2.0-ன் தொடக்கத்தில் பெண் தொழில்முனைவோருடன்.

# பெண் தொழில்முனைவோரை மேம்படுத்துதல்

ஜெய்ஸ்ரீ



பங்கேற்பாளர் பக்தி தியோதர் ஒரு அமர்வில்.

RC புனே பிரைட், RID 3131-ன் வழிகாட்டுதல் திட்டமான ப்ராஜெக்ட் நவ்னி (NAWNI) மூலம் கற்றுக்கொண்ட சில முக்கிய மேலாண்மை மற்றும் சந்தைப்படுத்தல் உத்திகளைச் செயல்படுத்திய பிறகு, வளரும் தொழில் முனைவோரான பக்தி தியோதரின் ரெசின் மற்றும் மெழுகினால் செய்யப் பட்ட கைவினைப் பொருட்கள் கிடுகிடுவென விற்பனையானது.

ப்ராஜெக்ட் நவ்னி (NAWNI) — புதிய முன்முயற்சிகளுடன் சுயமாக இருக்கும் பெண்களை மேம்படுத்துதல்) 10 மாத திட்டமாக 2021-ல் தொடங்கப்பட்டது, இது தொழில்முனைவு உள்ளுணர்வு கொண்ட ஒன்பது பெண்களுக்கு அவர்களின் வணிகத்தில் வெற்றிபெற வழிகாட்டியது. “பொறியியல், அழகு சாதனப் பொருட்கள், கார்ப்பரேட் கிஃப்டிங், துரித மற்றும் புதிய உணவுப் பிரிவு, ஃபேஷன் மற்றும் இன்டீரியர் டிசைனிங் ஆகிய தொழில்களில் மிகுந்த ஆர்வமுள்ள மற்றும் அர்ப்பணிப்புள்ள பெண் தொழில்முனைவோரைத் தேர்ந்தெடுத்தோம், மேலும் ஒவ்வொரு பெண்ணுக்கும் வணிக வளர்ச்சி மற்றும் வெற்றியை எளிதாக்கும் முறைகளை கற்பிக்கும் பொருத்தமான வழிகாட்டி களுடன் அவர்களைப் இணைத்தோம்” என அவினாஷ் ஜோக் தலைமையிலான திட்டக்குழுவைச் சேர்ந்த அனுஜா

கோல்ஹட்கர் கூறுகிறார். வழி காட்டிகள், சங்க உறுப்பினர்கள், ஆன்ஸ் அல்லது பரந்த அறிவு மற்றும் அனுபவமுள்ள பிற வெற்றிகரமான தொழில் வல்லுநர்கள் ஆவர்.

ஒரு வருட இடைநிறுத்தத்திற்குப் பிறகு, கடந்த ஆண்டு (2023–24) சங்கத்தலைவர் சுதிர் பாபட் தலைமையில் திட்டம் புதுப்பிக்கப் பட்டது. இம்முறை இத்திட்டத்தில் 32 பெண்கள் பங்கேற்றனர். “சமூக ஊடகங்கள் மற்றும் டிஜிட்டல் மார்க்கெட்டிங், சட்ட அம்சங்கள், அரசு திட்டங்கள், ஒத்துழைப்பு, சந்தைப்படுத்தல் மற்றும் விலை நிர்ணயம் போன்ற தலைப்புகளை செப்டம்பர் 2023 முதல் 10 மாதங் களுக்கு ஒவ்வொரு மாதமும் நேரடி அமர்வு மூலம் கற்பித்தோம்” என்கிறார் திட்டத் தலைவர் ஜோக்.

இந்தத் திட்டம் அவர்கள் அனை வருக்கும் தங்கள் வணிகத்தை அதிகரித்து, அதிக லாபம் ஈட்டவும், உற்பத்தி செய்யவும் உதவியது. “என்னிடம் படைப்புத் திறன்கள் இருந்த போதிலும், என்னைச் சுற்றியுள்ளவர்கள் எனது தயாரிப்புகளைப் பாராட்டினாலும், அதை எப்படி அடுத்த கட்டத்திற்கு எடுத்துச் செல்வது என்று எனக்குத் தெரியவில்லை” என பக்தி கூறினார். சங்க உறுப்பினர் உஜ்வல் குண்டேவின் மனைவியும் அவரது வழிகாட்டியுமான சம்பதா, மொத்த ஆர்டர்களைப் பெறுவது மற்றும் செயலாக்குவது, சந்தையைப் புரிந்துகொள்வது, கார்ப்பரேட் கிஃப்டிங்கிற்கு தனது தயாரிப்புகளை நிலைநிறுத்துவது மற்றும் வங்கிக் கடன்களுக்கு விண்ணப்பிப்பது போன்றவற்றை அவருக்குக் கற்றுக் கொடுத்தார். நவ்னி அவரை RC புனே பிரைட்டின் ரோட்டேரியர் ஆக ஊக்கப்படுத்தியது

இதன் தேர்வு செயல்முறை விரிவானதாக இருந்தது, முதலில் விண்ணப்பங்கள் ஆய்வு செய்யப் பட்டு, பின்னர் நேர்காணல் மற்றும் சைக்கோமெட்ரிக் மதிப்பீடு மேற் கொள்ளப்பட்டது. “எங்களுக்கு 75 விண்ணப்பங்கள் வந்தன, அதில் 32 விண்ணப்பங்கள் தேர்வு செய்யப் பட்டன. ஆர்வமுடன் மற்றும் வளர்ச்சியில் ஈடுபாட்டுடன், தனித்துவ மான மற்றும் நெறிமுறையான வணிகங்களை நடத்துதல் ஆகியவை தேர்வுக்கான முக்கிய அளவுகோல்கள்.

வணிகத்தின் நான்கு தூண்களான நிதி, சந்தைப்படுத்தல், செயல்பாடுகள் மற்றும் சட்டம் ஆகிய வற்றின் அடிப்படையிலான கூடுதல் வணிக தொகுதிகள் மற்றும் யோசனைகளுடன் மூன்றாவது பதிப்பை ஆகஸ்ட் மாதத்தில் தொடங்க சங்கம் உத்தேசித்துள்ளது.

“இந்த ஆண்டின் இளைய விண்ணப்பதாரர் 25 வயதான மருத்துவர் ஆவார், அவர் தனது மருத்துவ நடைமுறையுடன் கூடுதலாக காப்புரிமை பெற்ற ஆய்வக சோதனை தயாரிப்பு களுக்கான சந்தையை நிறுவ விரும்பு கிறார். குழந்தை பராமரிப்பு மற்றும் முதியோர் பராமரிப்பு ஆகியவற்றில் ஆர்வமுள்ள இரண்டு பெண்களும் விண்ணப்பித்துள்ளனர். ஒருவருக்கு வெற்றி பெறுவதற்கான புத்தி சாலித்தனமும் ஆர்வமும் இருந்தால், ஒருவர் செய்வதற்கு பல்வேறு வகையான வணிகங்கள் உள்ளன” என்று புன்னகைக்கிறார் அனுஜா.■

# மீரட்டில் ரோட்டரியன்களுக்குப் பாராட்டு

### ரோட்டரி செய்திக்குழு




இடமிருந்து: RIPR *பிரேம் அகர்வால் மற்றும் அவரது மனைவி ரேணுகா ஆகியோர் மாவட்ட மாநாட்டில் கௌரவிக்கப்படுகின்றனர். மேலும்* (இடமிருந்து) *சுனில் அகர்வால், கபில் அகர்வால்,* PDG *ராஜீவ் சிங்கல்,* DG *அசோக் குப்தா, சஞ்சீவ் கார்க், விவேக் கார்க் ஆகியோரும் உள்ளனர்.*

உத்திரப் பிரதேசத்தின் மீரட்-டில் நடைபெற்ற இரண்டு நாள் RID 3100 மாவட்டக் கருத்தரங்கில், சமூகத்துக்குத் தன்னலமற்ற பங்களிப்புகளை வழங்கிய ஐந்து பேருக்குத் தொழில் சார்ந்த உன்னத விருதுகளை வழங்கினார் கேரள ஆளுநர் அரிஃப் முகம்மது கான். குடிமக்கள் “நாட்டின், சமூகத்தின் முன்னேற்றத்துக்குத் தனிப்பட்டமுறையில் பொறுப் பேற்கவேண்டும்” என்று அவர் தன் உரையில் கேட்டுக்கொண்டார்.

தொடக்க நிகழ்வின்போது, உச்சநீதிமன்ற நீதிபதி பங்கஜ் மிட்டல் உலகெங்கும் ரோட்டரி செய்துவரும் பணியைப் பாராட்டினார், PDG ஆஷிஷ் தேசாய் ரோட்டரியின் பன்முகத்தன்மைப் பணியைப்பற்றிப் பேசிப் புதிய பார்வையை வழங்கினார்.

DG அசோக் குப்தா RID 3100-ஐ சேர்ந்த அனைத்து PDG-க்களையும் பெருமைப்படுத்தினார். RID 3090ஐச் சேர்ந்த RIPR பிரேம் அகர்வால் பேசுகையில், ரோட்டரியின் பணியைச் சுட்டிக் காட்டினார், RID 3100ல் உள்ள சங்கங்களின் பலவிதமான முன்னெடுப்புகளைக் குறிப்பிட்டுப் பாராட்டினார்.■




சந்தியா ராவ்

# சீறு, கடிக்காதே

பாம்புகள், முதலைகள் மற்றும் தவறாகப் புரிந்து கொள்ளப்பட்ட பிற உயிரினங்களைப் பற்றி அன்புடன் கூறப்படும் கதைகள்.

அச்சமில்லாத நபர்கள், ஆபத்தானதாகக் கருதப்படும் விலங்குகளான ஓய்வெடுக்கும் மலைப்பாம்பு, அடை காக்கும் முதலை போன்றவற்றின் தனிப்பட்ட வாழ்க்கையை ஆராய்கின்ற நிகழ்ச்சிகளை நாம் அனைவரும் நன்கு அறிந்திருப்போம். பெரும்பாலும் தங்கள் சொந்த காரியங்களை பார்த்துக்கொண்டிருக்கும் அந்த உயிரினங்கள் இந்த இடையூறு பற்றி எப்படி உணரக்கூடும் என்று நான் ஆச்சரியப்பட்டிருக்கிறேன். இந்த மாத கட்டுரையின் தலைப்பு, அன்புடன் மட்டுமே கருதப்பட விரும்பி ஆனால் மனிதர்களால் கொடுமைப்படுத்தப்பட்டு மிருகத் தனமாக நடத்தப்பட்ட ஒரு பாம்பைப் பற்றிய நாட்டுப்புறக் கதையிலிருந்து கடன் வாங்கப்பட்டது. தலைப்பில் உள்ள மந்திரத்தைக் கொடுத்த ஒரு துறவியின் புத்திசாலித்தனமான ஆலோசனையால் அந்த பாம்பு காப்பாற்றப்பட்டது.

ஜாய் விட்டேக்கரின் ஸ்கேலிங் அப், பாம்புமனிதன் ரோமுலஸ் விட்டேக்கரின் அற்புதமான கதையைச் சொல்லி, மனிதர்களுக்கும் ஊர்வனவற்றுக்கும் இடையிலான தொடர்புகளின் பல நிகழ்வுகளை விவரிக்கிறது. ஸ்னேக்மேனின் (1989-ல் வெளியிடப்பட்டது) திருத்தப்பட்ட மற்றும் விரிவாக்கப் பட்ட பதிப்பான இந்தப் புத்தகம், சமீபத்தில் சென்னையில், ஏராளமான பார்வையாளர்களின் முன்னிலையில் வெளியிடப்பட்டது. புதிய தலைப்பு ஒரு உரையாடலால் ஈர்க்கப்பட்டது. ஜாய்யின் வார்த்தைகளில்: எனக்கு திருமணம் ஆன சில நாட்களுக்கு பிறகு சென்னை வந்த சலீம் மாமு, என்னிடம் எப்படி இருக்கிறாய் என்று கேட்டார். அப்போது நடந்த உரையாடலிலிருந்து புத்தகத்தின் தலைப்பு வந்தது. இந்த புறக் கணிக்கப்பட்ட விலங்குகளின் கூட்டத்திற்கு வேலை செய்வது எவ்வளவு திருப்தி அளிக்கிறது என்று நான் அவருக்கு பதிலளித்தேன். ''பறவைகள் மற்றும் பாலூட்டிகள் எல்லா கவனத்தையும் ஈர்க்கின்றன, ஆனால் ஊர்வனங் களுக்கும் சமமான முக்கியத்துவம் அளிக்க வேண்டும்'' என்று நான் சொன்னேன், ''அவர் சற்று பின்வாங்கி, ''ஓ, நீ அவற்றை உயர்த்து கிறாயா?'' என்றார்.




அந்த சலீம் மாமு இந்தியாவின் பறவை மனிதர் என்று அழைக்கப்பட்ட சலீம் அலி தான், ஜாய்யின் தாய் லயீக்கின் மாமா. அவரது தந்தை ஜாபரின் தாத்தா நன்கு அறியப்பட்ட சுதந்திரப் போராட்ட வீரர் பத்ருதீன் தியாப்ஜி ஆவார். ஜாய்யின் தாய் லயீக் தாவரங்கள் மற்றும் தோட்டக்கலை மீது தீவிர ஆர்வம் கொண்ட ஒரு எழுத்தாளர்; பல ஆண்டுகளாக குவெஸ்ட் இதழின் இலக்கிய ஆசிரியராக இருந்தார். ஜாஃபர் ஒரு இயற்கை ஆர்வலர் மற்றும் பாதுகாவலர், பறவைகள் மீது மிகுந்த ஆர்வம் கொண்டவர், மேலும் 45 ஆண்டுகளாக பறவைக் கண்காணிப்பாளர்களுக்கான செய்திமடலை வெளியிட்டவர், இது இந்தியா முழுவதும் உள்ள பறவை ஆர்வலர்களின் பசிக்கு தீனி போட்டது; அவர் WWF-ன் இந்தியா அத்தியாயத்தைத் தொடங்கினார்.

''ஸ்கேலிங் அப்'' புத்திசாலித்தனத் துடனும் பாசத்துடனும் எழுதப் பட்டது, பாம்புகளைக் குறிப் பிட்டாலே பயப்படுபவர்களுக்கு கூட அவற்றை பற்றிய வாசிப்பை வேடிக்கையாக ஆக்குகிறது! அவரது குடும்ப பின்னணியும், பல வருடங்களாக ரோமுடனான திருமண வாழ்க்கையும், இயற்கையின் உலகில் அற்புதமான, புதிய அனுபவங்களைப் பெறுவதோடு மட்டு மல்லாமல், இந்தியாவில் ஊர்வன ஆய்வுகளின் தொடக்கத்தை உன்னிப்பாகக் கவனிப்பதற்கும் ஜாயை சிறந்த நிலையில் வைத்தது. மேலும் அவரது குறிப்பிடத்தக்க எழுத்துத் திறமையால், குழந்தைகள் மற்றும் பெரியவர்களை உள்ளடக்கிய ஒரு பெரிய வாசிப்பாளர் கூட்டத்தின் கற்பனையை ஜாய்யால் தூண்ட முடிந்தது. அவர்களின் பணி, தமிழ்நாட்டின் பாம்பு பிடிக்கும் சமூகமான இருளர்களுடன் ரோம் மற்றும் ஜாய் ஆகியோரை நெருக்கமாக்கியது. அதைத் தவிர, இந்த மக்களுடனான அவர்களின் உணர்ச்சி பூர்வமான இணைப்பு பல தளங்கள் மூலம் தெளிவாகத் தெரிகிறது. அவற்றில் ஒன்று இருளர் பாம்பு பிடிப்பவர்களின் தொழில்துறை கூட்டுறவு சங்கம் (ISCICS), இது பாம்பு விஷத்தின் மாற்று மருந்து உற்பத்திக்கு பாம்புகளை வழங்குகிறது. பெண்களின் பொருளாதார மற்றும் சமூக மேம்பாட்டிற்காக உழைத்து வரும் இருளர் மகளிர் சங்கத்திலும் ஜாய்க்கு ஆழ்ந்த ஈடுபாடு உள்ளது. பாம்புகள் மற்றும் முதலைகளுடன் ரோம் செய்த அற்புதமான பணியைப் பற்றி ஜாய் கதையுடன் இணைத்து கூறுகிறார், அந்த பணி முதலில் சென்னையில் பாம்பு பூங்காவையும் பின்னர், சென்னைக்கு வெளியே முதலை பண்ணையையும் அமைக்க வழிவகுத்தது. மலைத்தொடர்கள் மற்றும் அந்தமான் நிக்கோபார் தீவுகள், பப்புவா நியூ கினியா, ஸ்னேக் பார்க், க்ரோக் பேங்க், கொடை



இன்டர்நேஷனல் ஸ்கூல் மற்றும் அவர் கற்பித்த பிற இடங்கள் என ஆரம்பித்து தற்போது அவர் மெட்ராஸ் க்ரோக்கடைல் பேங்க் டிரஸ்ட் மற்றும் ஹெர்பெட்டாலஜி மையத்தின் அறங்காவலராக இருக்கும் வரை ஜாயின் பயணத்தை நாம் தொடர்கிறோம். ஸ்கேலிங் அப், ரோமுலஸ் விட்டேக்கரின் முக்கியப் பணிகளில் கவனம் செலுத்தினாலும், தேசிய மற்றும் சர்வதேச அளவில் வனவிலங்கு பாதுகாப்புப் பணிகளில் ஈடுபட்டுள்ள பலரையும் அங்கீகரிக்கிறது. முதலைப் பண்ணையில் தன்னார்வத் தொண்டு செய்யத் தொடங்கி, இப்போது வனவிலங்குப் பாதுகாப்பில் மையமாகிவிட்ட பல நபர்களின் பணியையும் இது அங்கீகரிக்கிறது.

இது எல்லாம் இனிமையாக இருந்ததில்லை என ஜாய் கூறுகிறார். ஆனால் இறுதியில், இது பெரும் முரண்பாடுகளுக்கு எதிராக அமைக்கப்பட்ட ஒரு எழுச்சியூட்டும் கதை. உதாரணமாக பாம்புக்கடியை மட்டும் எடுத்துக் கொள்ளுங்கள். ஒரு வருடத்திற்கு 50,000-க்கும் மேற்பட்ட இறப்புகள் மற்றும் பாம்புக்கடியைத் தொடர்ந்து மூட்டு இழப்பு, சிறுநீரக செயலிழப்பு அல்லது PTSD போன்ற நோய்களின் எண்ணிக்கை குறைந்தபட்சம் மூன்று மடங்காக உயர்ந்துள்ளது, இந்த பட்டியலில் இந்தியா முதலிடத்தில் உள்ளது என்று அவர் எழுதுகிறார். பாதிக்கப்பட்ட வர்களில் பெரும்பாலோர் ஏழை விவசாயிகள் அல்லது விவசாயத் தொழிலாளர்கள், பெரும்பாலும் அவர் குடும்பங்களில் வருமானம் ஈட்டும் ஒரே உறுப்பினர்கள். இது இருளரின் வேலையை மிகவும் மதிப்புமிக்கதாக ஆக்குகிறது: "ஏழை ஆதிவாசி குழுக்களில் ஒன்றான இருளர், நாட்டின் விலையுயர்ந்த தயாரிப்புகளில் ஒன்றை உற்பத்தி செய்கிறார்கள் என்பது எங்களுக்கு மகிழ்ச்சியளித்தது. அப்போது, ஒரு கிராம் கட்டு விரியன் பாம்பின் விஷம் மூவாயிரம் ரூபாய், தங்கத்தின் விலையை விட பத்து மடங்கு அதிகம். ஒரு கிராம் தயாரிக்க சுமார் ஐம்பது கட்டுவிரியன் பாம்புகள் தேவைப்படும்."


ஜாய் விட்டேக்கர்

1970களின் முற்பகுதியில் தாம்பரம் சேலையூருக்கு நாங்கள் குடும்பமாக உல்லாசப் பயணமாகச் சென்றபோது நான் ஒரு இளம் பெண்ணாக இருந்தேன், அங்கு ஒரு பாம்பு பூங்கா திறக்கப்பட்டிருந்தது. ஒரு பொன்னிறமான, நீண்ட கூந்தல் கொண்ட மனிதர் ஒரு பெரிய குழிக்குள் அமர்ந்து ஒரு கையில் ஒரு முதலைக்கு பாலூட்டிக் கொண்டிருந்தார். முதலை குட்டி தன்னை கடித்ததாகவும், அதனுடன் நட்பு கொள்ள முயற்சிப்பதாகவும் அவர் கூறினார். என் அத்தை பாம்புகளை நோக்கிச் சென்றபோது, நான் பின் தொடர்ந்தேன். ஒரு இளைஞர் ஒரு பெரிய மலைப்பாம்பை நீட்டி "பிடிக்க விரும்புகிறீர்களா?" என்று கேட்டார். "இப்போது தான் சாப்பிட்டது, உண்ட மயக்கத்தில் இருக்கிறது" என்றார். அது என் கையைச் சுற்றிக்கொண்டபோது, அதன் அடிப்பகுதி மென்மையாகவும், வறண்டதாகவும் இருந்தது எனக்கு ஆச்சரியமளித்தது.

பூமிக்கு நாம் என்ன செய்கிறோம் என்பதைப் பற்றி சிந்திக்க வைக்கும் மனித-விலங்கு மோதலின் பல அம்சங்களை புத்தகம் எடுத்துக்காட்டுகிறது. தானும் தனது சகோதரி ஷாமாவும் பறவைகளால் ஈர்க்கப்பட்டதாக ஜாய் நினைவுகூர்ந்தார், குறிப்பாக நாற்பதிற்கும் மேற்பட்ட ஃபேர்ட்ஸ் அஃப் பரடைஸ் பறவையினங்களில் ஒன்றான ராகியானாவால் ஈர்க்கப் பட்டனர். பத்தொன்பதாம் நூற்றாண்டு ஐரோப்பாவில் பெண்களின் தொப்பிகளில் பளபளப்பான பறவை இறகுகள் நாகரீகமான அலங்காரமாக மாறியது, மேலும் தொப்பி தயாரிப்பவர்கள்



இந்தோனேசியா, நியூ கினியா மற்றும் ஆஸ்திரேலியாவின் சில பகுதிகளிலிருந்து ஃபேர்ட்ஸ் அஃப் பரடைஸ்-ஐ இறக்குமதி செய்யத் தொடங்க,பறவையின் கால்கள் வெட்டப்பட்டு பிறகு தோல்கள் ஏற்றுமதி செய்யப்பட்டன. அந்த பளபளப்பான நாகரீக கோமாளிகள், இவை சொர்க்கத்தில் இருந்து இறங்கிய கால்களற்ற பறவைகள் என்று நம்பினர்' என அவர் தொடர்ந்து எழுதுகிறார்.

ஆனால் எல்லாம் மோசமாக மட்டுமே இருக்கவில்லை. முதலை பண்ணையின் பணி மற்றும் ஊர்வனவற்றைப் பற்றிய நுண்ணறிவு இதற்கான சிறந்த எடுத்துக்காட்டுகள். அமெரிக்க ஆமை நிபுணர் மைக் எவெர்ட், "இந்திய ஃபிளாப்ஷெல் ஆமைகளின் முட்டைகள் கிட்டத் தட்ட முழு-கால கருக்களாக உருவாகி, குஞ்சு பொரிப்பதற்கு முன் ஆறு மாதங்கள் காத்திருப்பதற்கு" அவை வாழ குளங்களும் ஓடைகளும் தேவைப்படுவதே காரணம் என்று விளக்குகிறார். எனவே, மழையின் ஓசையால் தூண்டப்படும்போது அவை குஞ்சு பொரிக்கின்றன. "சூடான பருவத்தில் அவை குஞ்சு பொரித்தால், அவை இரண்டு நாட்களுக்கு மேல் உயிர்வாழாது" என்று ஜாய் எழுதுகிறார்.

இது வனவிலங்கு உலகிற்கும் இலக்கிய உலகிற்கும் முக்கியமான புத்தகம். எழுத்து சாமர்த்தியமாகவும், இலகுவாகவும், விரிவாகவும், எப்போதும் மென்மையான நகைச்சுவை கூடியதாகவும் உள்ளது.

கட்டுரையாளர் குழந்தைகள் எழுத்தாளர் மற்றும் மூத்த பத்திரிகையாளர்.



## RC சிதம்பரம் மிட்-டவுன் — RID 2981

கடலூர் அரசு மருத்துவமனையின் பக்கவாத ஃபிசியோதெரபி மருந்தகத்துக்கு ரூ.50,000 செலவில் குளிர்பதனக் கருவி, மேசைகள், நாற்காலிகள் கொடையளிக்கப்பட்டன.





## RC டெல்லி மயூர் விகார் — RID 3012

ஃபரீதாபாதில் ஆதரவற்ற பெண்கள் சிறப்பு இல்லமான ஆர்ய கன்யா சதனுக்கு அறைக்கலன்கள், புதிய ஆடைகள், படுக்கைகள், மெத்தைகள், அலமாரி கொடையளிக்கப்பட்டன.

## RC சோப்டா — RID 3030

ரோட்டரி பவனில் ஒரு வாரம் நடைபெற்ற சிரோப்ராக்டிக் முகாமில் 750 நோயாளிகள் நாள்பட்ட வலிக்குத் தீர்வு பெற்றார்கள்.





## RC காந்திதாம் — RID 3055

இனாலி அறக்கட்டளை, RC பூனா டௌன்-டவுன், RID 3131 ஆதரவுடன் ரோட்டரி பவனில் நடைபெற்ற செயற்கைக் கை முகாமில், கை நீக்கப்பட்ட 125 பேருக்கு மின் கைகள் பொருத்தப்பட்டன.

செய்திகள்

## RC ஸ்ரீ மாதோபூர் சன்ரைஸ் — RID 3056

ஆறு நாள் கண் சிகிச்சை முகாமில் சுமார் 130 பேர் பரிசோதிக்கப் பட்டார்கள், 49 பேர் ஜெய்ப்பூர் மருத்துவமனை ஒன்றில் கண் புரை அறுவைச் சிகிச்சை பெறத் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள்.






## RC ஜலந்தர் சவுத் — RID 3070

RC செமியாஹ்மூ, கனடா உடன் இணைந்து, சுஹெகி கிராமத்தில் பயிற்சி பெற்ற 10 பேருக்குத் தையல் இயந்திரங்கள் கொடையளிக்கப்பட்டன.

## RC ஸ்ரீ கங்காநகர் கிரேஸ் — RID 3090

சங்கத் தலைவர் சோனியா சௌஹானுடைய முன்னெடுப்பின்கீழ், BSF வளாகத்தில் 250 பெரு மரக் கன்றுகளுடன் மியாவாகிக் காட்டைத் தொடங்கிவைத்தார் DG கண்ஷ்யாம் கன்சால்.






## RC முஜாஃப்ஃபர் நகர் மிட்-டவுன் — RID 3100

ஒரு GG திட்டத்தின்கீழ், பாக்பட்-டில் உள்ள சரூர்பூர் கலான் கிராமத்தின் மாயாதேவி தொண்டு மருத்துவமனையில் கணினி ஆய்வகம் (15 இயந்திரங்கள்), நூலகத்தைத் தொடங்கிவைத்தார் DG அசோக் குப்தா.

# விவசாயிகளின் வாழ்க்கைகளை மாற்றியமைக்கும் ரோட்டரி

கிரண் ஜெஹரா

குஜராத்தில் உள்ள வல்சாதிலிருந்து 28 கிமீ தொலைவில் உள்ள சிக்லி என்ற கிராமத்தில், காந்திலால் என்ற ஏழை விவசாயி மூன்று ஏக்கர் நிலம் வைத்துள்ளார். ஏனெனில், இவரிடம் போதுமான நிதி வளங்கள் இல்லாததால் இவர் தன் வயலைக் குறைந்த அளவுக்குதான் உழுகிறார். அதனால் விவசாயச் செயல்திறனும் விளைச்சலும் குறைகின்றன.

ஆனால் இப்போது, RC சிக்லி ரிவர் ஃப்ரன்ட், RID 3060, வழங்கும் கிசான் திட்டத்தின் மூலம் காந்திலாலின் எதிர்காலம் மாறத் தொடங்கியிருக்கிறது.

இந்தச் சங்கத்தின் நிரந்தரச் சேவை முன்னெடுப்பான கிசான் திட்டம் நவம்பர் 2021ல் ரூ.7 லட்சம் மதிப்பில் ஒரு டிராக்டரை வாங்குவதன் மூலம் தொடங்கப்பட்டது. இதற்கான தொகை சங்க உறுப்பினர்களிடமிருந்து திரட்டப்பட்டது என்றார் சங்கத் தலைவர் மெஹுல் படேல். சங்கச் செயலாளர் நிகுஞ்ச் படேல் தலைமையிலான 5 உறுப்பினர் குழு இந்த டிராக்டரை ஏழை விவசாயிகளுக்குக் கடன் கொடுக்கும் செயல்பாடுகளைக் கவனிக்கிறது. “3 ஏக்கருக்குக் குறைவாக நிலம் வைத்துள்ள விவசாயிகள் ஓர் எளிய படிவத்தை நிரப்பி டிராக்டர் சேவையைப் பெறலாம். டிராக்டர் சங்கத்துக்குச் சொந்தமானது. ஆனால், விவசாயிகள் தலா ஒரு நாள் அதைப் பயன்படுத்திக் கொள்ளலாம்” என்று இவர் தொடர்ந்து கூறுகிறார்.

இப்போது இந்தத் திட்டத்தின் மூலம் காந்திலாலைப் போன்ற சுமார் 200 விவசாயிகள் டிராக்டரை இலவசமாகப் பயன்படுத்திக் கொள்கிறார்கள். உழுதல், ரோட்டரிங் உள்ளிட்ட சேவைகள் சிறிய மற்றும் ஏழை விவசாயிகளுக்கு வழங்கப்படுகின்றன. இந்தச் சேவையின் அன்றாடச் சராசரிச் செலவு ரூ.4,200 ஆகும். சங்க உறுப்பினர்கள், அவர்களுடைய உறவினர்கள், நண்பர்கள் உள்ளிட்ட 20 கொடையாளர்கள் சுழற்சி முறையில் இந்தத் தொகையை வழங்கி ஆதரிக்கிறார்கள்.

கிசான் திட்டம் அறிமுகமாவதற்கு முன்னால் “என்னால் ஓரளவுக்குதான் உழுவதற்கு இயன்றது, அது என் பயிர் விளைச்சலைப் பாதித்தது. இப்போது, இந்த இலவச டிராக்டர் சேவையின்மூலம் என் விளைச்சல் மேம்பட்டுள்ளது, நிலத்தில் நல்ல காற்றோட்டம் உள்ளது, அது

*டிராக்டர் சேவையின் தொடக்க விழாவில் DG நிஹிர் தவேயுடன் சங்க உறுப்பினர்கள்.*



நடுவதற்கு ஆயத்தமாக இருக்கிறது'' என்கிறார் காந்திலால். இவர் சமீபத்தில் உழுத தன்னுடைய நிலத்தில் நிலக்கடலை, பச்சைப் பட்டாணி, பீன்ஸ் பயிரிட்டுள்ளார். "டிராக்டர் சேவைகள் மண்ணை உடைக்கவும், இயற்கைப் பொருட்களைக் கலக்கவும், பொருத்தமான விதைப்படுக்கையை உருவாக்கவும், அதன்மூலம் மண் கட்டமைப்பு மற்றும் விளைச்சல் தன்மையை மேம்படுத்தவும் உதவுகின்றன. இதனால், நிலங்கள் விதைப்பதற்கு இன்னும் தயாராக உள்ளன, விதை பயிராகும் விகிதம் கூடுகிறது, பயிர் விளைச்சல் மேம்படுகிறது'' என்று தொடர்ந்து கூறுகிறார் படேல்.■



*டிராக்டருடன் ஒரு விவசாயி மற்றும் அவரது குடும்பம்.*

# UNESCO ரோட்டரி நாளில் பங்கேற்ற தில்லி ரோட்டரியன்

ரோட்டரி செய்திக்குழு

RC தில்லி சிட்டி, RID 3012, இணைச் செயலாளரும் தில்லியில் மீரா பாக் பகுதியிலுள்ள புனித மார்க்ஸ் உயர்நிலைப் பள்ளியின் முதல்வருமான ரித்திகா ஆனந்த் பாரிசில் உள்ள UNESCO இல்லத்தில் நடைபெற்ற UNESCO-ல் ரோட்டரி நாள் நிகழ்வில் "கல்வியில் தொழில்நுட்பத்தின் பங்களிப்பு'' என்ற உரையை வழங்கினார். இந்த ஆண்டின் நிகழ்வு (2023–24) கல்வி மற்றும் அமைதியில் கவனம் செலுத்தியது. இந்நிகழ்ச்சிக்கு RI தலைவர் கார்டன் மெகினல்லி தலைமை தாங்கினார்.

அடிப்படைக் கல்வி மற்றும் எழுத்தறிவுக்கான TRF-ன் தொழில் நுட்ப ஆலோசகர்களுடைய குழு உறுப்பினரான ரித்திகா, குழந்தைகளில் மதிப்பு மற்றும் நெறிமுறைகளைக் கட்டமைப்பதில் ஆசிரியர்களுடைய மதிப்பு மிக்க பங்களிப்பையும், GoI-ன் பிரசாந்த் செயலி குழந்தைகளில் 21 ஊனங்களை மதிப்பிடுவதற்கு எப்படி உதவுகிறது என்பதையும் சுட்டிக்காட்டியதாகச் சொன்னார். "கல்வியில் தொழில்நுட்பத்தின் வாய்ப்புகள் மற்றும் சவால்களைப் பற்றியும், ஆசிரியர்கள் பல்வேறு முன்னேற்றங்களைப்பற்றித் தொடர்ந்து தெரிந்துகொள்ளவேண்டியது ஏன் முக்கியம் என்பதுபற்றியும் நாங்கள் அறிவார்ந்த உரையாடல்களில் ஈடுபட்டோம்.''



*TRF கேடர் துணைத் தலைவர் கரோலின் ஜான்சன்; அன்னா கிறிஸ்டினா டி அடியோ, தலைவர், கருப்பொருள் பிரிவு, யுனெஸ்கோவின் உலகளாவிய கல்வி; மற்றும் ரித்திகா ஆனந்த், RC தில்லி சிட்டி இணைச் செயலாளர் மற்றும் TRF கேடர் உறுப்பினர் ஒரு அமர்வில்.*

ஆப்பிரிக்காவில் திறன் வளர்க்கும் UNESCO-ன் பன்னாட்டுக் கல்வி அமைப்பின் இயக்குநரான குவென்டின் வூடொன் மற்றும் பன்னாட்டுக் கல்விக் கருப்பொருள் பிரிவின் தலைவரான அன்னா கிரிஸ்டினா டிஅட்டியோ ஆகியோரும் இந்த நிகழ்வில் பங்கேற்றார்கள். இதை TRF குழுத் துணைத் தலைவர் கரோலின் ஜான்சன் நெறிப்படுத்தினார்.■




**New members from different groups in our communities bring fresh perspectives and ideas to our clubs and expand Rotary's presence. Invite prospective members from all backgrounds to experience Rotary.**

**REFER A NEW MEMBER**
my.rotary.org/member-center

Rotary

## Advertise in Rotary News




**Tariff**

| | |
|---|---|
| Back cover | ₹1,00,000 |
| Inner front cover | ₹60,000 |
| Inner back cover | ₹60,000 |
| Inside fullpage | ₹30,000 |

**Specification**

17 x 23 cm — Full page

**Advertisements in colour only.**

**Rotary News Trust**
**044-42145666**
**rotarynews@rosaonline.org**
**rotarynewsmagazine@gmail.com**

# District Wise TRF Contribution as on May 2024

(in US Dollars)

| District Number | Annual Fund | PolioPlus Fund | Endowment Fund | Other Funds | Total Contribution |
|---|---|---|---|---|---|
| **India** | | | | | |
| 2981 | 57,976 | 1,573 | 1,000 | 250 | 60,799 |
| 2982 | 48,666 | 1,482 | 24,085 | 58,552 | 132,786 |
| 3000 | 105,317 | 29,390 | 37,598 | 475,510 | 647,815 |
| 3011 | 223,399 | 28,216 | 52,080 | 1,346,052 | 1,649,747 |
| 3012 | 28,783 | 150 | 0 | 444,544 | 473,478 |
| 3020 | 133,262 | 102,633 | 75,246 | 60,163 | 371,304 |
| 3030 | 98,710 | 27,901 | 13,609 | 234,537 | 374,756 |
| 3040 | 9,297 | 688 | 0 | 44,505 | 54,489 |
| 3053 | 46,096 | 1,300 | 10,000 | 66,313 | 123,709 |
| 3055 | 117,661 | 3,883 | 30 | 9,728 | 131,303 |
| 3056 | 40,479 | 553 | 25,000 | 8,400 | 74,433 |
| 3060 | 172,767 | 10,140 | 18,205 | 468,204 | 669,316 |
| 3070 | 16,645 | 573 | 0 | 24 | 17,242 |
| 3080 | 103,519 | 24,966 | 10,004 | 75,127 | 213,616 |
| 3090 | 67,976 | 2,528 | 25,602 | 130,050 | 226,156 |
| 3100 | 118,194 | 4,912 | 25,301 | 60,825 | 209,233 |
| 3110 | 18,809 | 30 | 0 | 109,179 | 128,018 |
| 3120 | 44,909 | 631 | 0 | 10,221 | 55,761 |
| 3131 | 560,172 | 17,961 | 175,688 | 1,562,951 | 2,316,772 |
| 3132 | 117,203 | 5,071 | 10,000 | 91,016 | 223,290 |
| 3141 | 530,670 | 63,095 | 106,085 | 2,269,233 | 2,969,082 |
| 3142 | 351,998 | 117,763 | 14,741 | 134,258 | 618,760 |
| 3150 | 71,339 | 32,505 | 160,423 | 155,871 | 420,138 |
| 3160 | 27,047 | 1,372 | 0 | 3,432 | 31,851 |
| 3170 | 157,706 | 36,271 | 16,902 | 140,890 | 351,769 |
| 3181 | 162,021 | 3,517 | 1,000 | 1,581 | 168,120 |
| 3182 | 78,212 | 5,235 | 25,624 | 0 | 109,070 |
| 3191 | 92,645 | 14,277 | 60,976 | 621,153 | 789,050 |
| 3192 | 147,483 | 18,382 | 0 | 209,796 | 375,661 |
| 3201 | 247,734 | 66,732 | 46,784 | 1,403,083 | 1,764,334 |
| 3203 | 33,998 | 28,207 | 11,220 | 15,576 | 89,000 |
| 3204 | 33,587 | 3,104 | 0 | 27,424 | 64,116 |
| 3211 | 119,967 | 4,261 | 27,325 | 132,393 | 283,947 |
| 3212 | 100,007 | 42,778 | 2,000 | 128,900 | 273,685 |
| 3231 | 5,625 | 6,269 | 314 | 10,285 | 22,493 |
| 3232 | 85,057 | 26,727 | 39,973 | 1,815,510 | 1,967,267 |
| 3240 | 135,459 | 15,706 | 34,000 | 105,711 | 290,876 |
| 3250 | 64,002 | 5,698 | 26 | 41,467 | 111,192 |
| 3261 | 46,560 | 4,952 | 15,181 | 66,079 | 132,772 |
| 3262 | 65,732 | 6,284 | 1,000 | 15,440 | 88,456 |
| 3291 | 218,962 | 5,434 | 147,311 | 6,939 | 378,646 |
| 3220 **Sri Lanka** | 93,738 | 13,926 | 0 | 7,513 | 115,177 |
| 3271 **Pakistan** | 15,750 | 87,578 | 0 | 93,141 | 196,469 |
| *3272 **Pakistan** | 4,342 | 385 | 0 | 25 | 4,752 |
| *3281 **Bangladesh** | 80,569 | 2,105 | 3,000 | 264,728 | 350,403 |
| *3282 **Bangladesh** | 90,726 | 4,982 | 1,000 | 9,116 | 105,824 |
| 3292 **Nepal** | 169,219 | 25,488 | 19,999 | 404,750 | 619,455 |
| 63 **(former 3272)** | 11,899 | 425 | 0 | 0 | 12,324 |
| 64 **(former 3281)** | 28,615 | 1,559 | 1,000 | 0 | 31,174 |
| 65 **(former 3282)** | 4,346 | 221 | 0 | 9,000 | 13,567 |

* Undistricted

Annual Fund (AF) includes SHARE, AoF and World Fund.
PolioPlus excludes Bill and Melinda Gates Foundation. **Source:** RISAO

# ரோட்டரியின் மக்கள் நல திட்டங்கள்

ரோட்டரி செய்திக்குழு

## நவி மும்பையில் ரோட்டரி மைல்கல்

**இடமிருந்து:** DGE *ஹர்ஷ் மகோல்,* DG *தினஷே் மேத்தா,* IPDG *மிலிந்த் குல்கர்னி,* TRF *அறங்காவலர் பரத் பாண்டியா மற்றும்* PDG *மோகன் சந்தாவர்கர் ரோட்டரி நினைவுக் கட்டிடம் முன்.*




TRF அறங்காவலர் பரத் பாண்டியா நவி மும்பையில் RID 3142-ல் நிறுவப்பட்ட ரோட்டரி நினைவுச்சின்னத்தை திறந்து வைத்தார். மும்பையின் இருபது ரோட்டரி சங்கங்கள் திட்டத்தில் பங்கேற்றன.

## கணினிப் பயிற்சி மையம் தொடக்கம்



*சங்க உறுப்பினர்களிடமிருந்து காசோலையை ராஷி சிங் பெறுகிறார்.*

ஏழைக் குழந்தைகளுக்கென வாரம் 5 நாட்கள் காலையிலும் மாலையிலும் இயங்கும் கணினிப் பயிற்சி மையம் ஒன்றை அமைத்துள்ளது RC தில்லி சஃப்தர்ஜங், RID 3011. இவர்கள் ராசி சிங் என்ற 7-ம் வகுப்பு மாணவருக்கு ஓராண்டுக்கான கல்வி உதவியாக ரூ.30,000 வழங்கினார்கள்.

## அங்கன்வாடிக்கு உதவி




*அங்கன்வாடியில் குழந்தைகளுடன் ரோட்டரியன்கள்.*

RC பெங்களூர் புவனேஸ்வரி நகர், RID 3192, பெங்களூரில் இரண்டு அங்கன்வாடிகளைத் தத்தெடுத்து கொண்டது. இவர்கள் அம்ருத்நகரா-வில் 65 குழந்தைகளுக்குச் சீருடைகளை வழங்கினார்கள், தூய நீர் மையம் நிறுவினார்கள். கெம்பபுரா-வில் 35 குழந்தைகளுக்குச் சீருடைகளை வழங்கி, அங்கன்வாடிக்கு ஒரு சமையலறைச் சேமிப்பக நிலையத்தை வழங்கினார்கள்.

## மின்-குப்பை நீக்கம்



*சேகரிக்கப்பட்ட மின்னணு கழிவுகளுடன் சங்க உறுப்பினர்கள்.*

RC சிலிகுரி, RID 3240, கொல்கத்தாவில் உள்ள JS பிக்மென்ட்ஸ் என்ற உற்பத்தி நிறுவனத்தின் உதவியுடன் வடக்கு வங்காளத்திலிருந்து 1,750 கிலோ மின்-குப்பையைத் திரட்டி, நீக்கியது. இந்த நீக்குதல் அரசு ஒழுங்குமுறைகள் அனைத்துக்கும் இணங்கியது, பசுமைச் சுற்றுச்சூழல் சான்றிதழைப் பெற்றது. ■

# உங்கள் செல்லப்பிராணிகளை மாசுபாட்டிலிருந்து பாதுகாக்கவும்

ப்ரீத்தி மெஹ்ரா



இந்த கட்டுரை நம்மிடையே உள்ள விலங்கு பிரியர்களுக்கானது, மனிதர்கள் மட்டுமல்லாமல், அனைத்து விலங்குகள், செல்லப்பிராணிகள் மீது மாசுபாட்டின் தாக்கத்தைப் பற்றி கவலைப்படுபவர்களுக்கானது.

நம் வீடுகளில் வாழும் செல்லப்பிராணிகளும் மனிதர்களைப் போலவே அதன் எதிர்மறையான தாக்கத்தால் பாதிக்கப்படக்கூடியவை. காற்றின் தரக்குறியீடு (AQI) பெரும்பாலான நகரங்களில் அபாயகரமான நிலைகளைத் தொடுவதால், குறிப்பாக ஆண்டின் சில மாதங்களில், நம் செல்லப் பிராணிகளுக்கு சிறப்பு கவனிப்பும் தேவை.

நகரங்களில், பெட்ரோல் மற்றும் டீசலைப் பயன்படுத்தும் கார்கள் மற்றும் கனரக வாகனங்களால் ஏற்படும் மாசு, வளிமண்டலத்தை மாசுபடுத்துவதில் பெரிய அளவில் பங்களிக்கிறது. ஒரு வீட்டில் ஏன் ஒன்றுக்கு மேற்பட்ட வாகனங்கள் இருக்க வேண்டும் என்பது எனக்கு புரியாத புதிராகவே உள்ளது. இளைஞர்கள் மற்றும் திடமானவர்களுக்காக பொதுப் போக்குவரத்தை ஆதரிப்பதை நாம் ஏன் வெறுக்கிறோம் என்பது மற்றொரு புதிர்.

வாகன மாசுபாட்டைத் தவிர, நிலக்கரியை எரித்தல், தொழில்துறை உமிழ்வுகள், பயிர்களை எரித்தல், கட்டுமானம் மற்றும் குப்பைகளை

எரிப்பதன் மூலமும் நகர்ப்புற காற்று அனுமதிக்கப்பட்ட வரம்புகளுக்கு அப்பால் மாசுப்படுத்தப்படுகிறது. இது தவிர ஒவ்வொரு நகரத்தின் புறநகர்ப் பகுதிகளிலும் உள்ள குப்பைக் கிடங்குகளில் இருந்து எழும் மீத்தேன் புகையைப் பற்றி சொல்லவே வேண்டாம்.
சிகரெட் புகை, சுற்றுச்சூழலுக்கு எதிரான அடுப்புகளில் சமைத்தல், அரிக்கும் இரசாயன கிளீனர்களைப் பயன்படுத்துதல் அல்லது குளிர் காலத்தில் குளிர்காய நிலக்கரியைப் பயன்படுத்துதல் ஆகியவற்றை வீட்டினுள் ஏற்படும் மாசுப்பட்டுடன் சேர்த்துக்கொள்ளுங்கள். இவைகளால் AQI அளவுகள் சில படிகள் அதிகமாகும்.

மாசுபாட்டின் தாக்கம் அப்பட்ட மாக உள்ளது. பெட்ஸ்வேர்ல்ட் (செல்லப்பிராணி தயாரிப்பு களுக்கான ஆன்லைன் ஸ்டோர்) வலைத்தளத்தின் வலைப்பதிவின் படி, அதிக மாசுபட்ட நகரங்களில் வாழும் நாய்களின் மூளைகள் அதிகரித்த வீக்கம் மற்றும் நரம்பியல் மாற்றங்களைக் காட்டுகின்றன, அவை மனிதர்களில் அல்சைமர் நோய்க்கு காரணமாகின்றன. உட்புற மாசுபாடு செல்லப்பிராணிகளுக்கு கடுமையாக இருக்கிறது மற்றும் “பக், பெக்கிங்கீஸ், பாக்ஸர் மற்றும் ஷிஹ்-ட்ஸு போன்ற பிராச்சி செபாலிக்(சிறிய தலை கொண்ட) நாய் இனங்கள் விஷயத்தில் சிறப்பு கவனம் எடுக்கப்பட வேண்டும்” என்றும் அது சுட்டிக்காட்டுகிறது. இந்த இணையதளம் 2011-ம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட ஆய்வை மேற்கோள் காட்டுகிறது, அதில் காற்றில் பரவும் நச்சுகள் விலங்குகள் மீதும், குறிப்பாக தெருக்களில் வாழும் தெருநாய்கள் மீதும் மிகவும் எதிர்மறையான தாக்கத்தை ஏற்படுத்து வதாகக் கண்டறிப்பட்டுள்ளது. மேலும் பூனைகள், நாய்கள் மற்றும் பிற செல்லப்பிராணிகளுக்கு ஆஸ்துமா, மூக்கு மற்றும் தொண்டை நோய்கள் மற்றும் மூச்சுக்குழாய் அழற்சி ஆகியவை ஆண்டு முழுவதும் காற்று மாசுபாட்டிற்கு வெளிப்படுத்தும் போது உருவாகின்றன. சிகரெட் புகையை சுவாசிப்பது பூனைகளின் நுரையீரல் திறனைக் குறைப்பதாகவும் ஆய்வில் கண்டறியப்பட்டுள்ளது.

மாசுபாட்டிற்கான நகர்ப்புறங்களின் சமீபத்திய தீர்வு, வீடுகளில் காற்று சுத்திகரிப்பான்களைப் பயன்படுத்து வதாகும். இது நச்சுகள், தூசி துகள்கள், பாக்டீரியா மற்றும் நாற்றங்களை குறைக்க உதவி, காற்றை சிறந்த தாகவும், ஆரோக்கியமானதாகவும் மாற்றி சுவாசிக்க உதவுகிறது. ஆனால் உட்புற தாவரங்களால் வழங்கப்படும் பிற தீர்வுகளும் உள்ளன. அந்தூரியம் காற்றிலிருந்து அம்மோனியாவை சுத்தம் செய்கிறது, சாங் ஆஃப் இந்தியா சைலீன் போன்ற நச்சுக்களை உறிஞ்சுகிறது, பார்லர் பாம் மற்றும் ஃபாலெனோப்சிஸ் ஆர்க்கிட்களும் காற்றைச் சுத்தப்படுத்துவதில் பயனுள்ளதாக இருக்கின்றன.

பெட்ஸ்வேர்ல்ட் இணையதளம் ஒருவரின் அன்றாட வாழ்வில் இணைக்கப்படக்கூடிய சில தீர்வு களையும் வழங்குகிறது. அதில் மிக முக்கியமானது காற்றோட்டம் - வீட்டில் சிறந்த காற்றோட்டம் இருந்தால் நம் செல்லப்பிராணிகளின் பிரச்சனைகள் குறையும். காற்றைச் சுத்திகரிப்பதில் பயனுள்ளதாக இருக்கும் மற்ற உட்புற தாவரங்களை வளர்க்கவும் இது பரிந்துரைக்கிறது. பிலோடென்ட்ரான்கள் மற்றும் மசாங்கேனா கரும்புகள் காற்றில் இருந்து ஃபார்மால்டிஹைடை உறிஞ்சு கின்றன, பொத்தோஸ் காற்றிலிருந்து கார்பன் மோனாக்சைடு மற்றும் ஃபார்மால்டிஹைட்டை நீக்குகிறது.

விலங்குகளை நச்சுப் பொருட் களிலிருந்து பாதுகாப்பாக வைத் திருக்க, இரசாயன கரைப்பான் களுக்குப் பதிலாக வெள்ளை வினிகர் மற்றும் பேக்கிங் சோடா போன்ற இயற்கையான துப்புரவு பொருட்களைப் பயன்படுத்துமாறு இணையதளம் பரிந்துரைக்கிறது. சுவர்களுக்கு, லோ வாலடைல் ஆர்கானிக் காம்பவுண்ட் பெயிண்ட் டையும், இயற்கையான பூனை மற்றும் நாய் படுக்கைகள் உட்பட சுற்றுச் சூழலுக்கு உகந்த தளபாடங்களையும் பரிந்துரைக்கிறது. காலர்கள், லீஷ்கள், ஸ்வெட்ஷர்ட்கள் போன்ற செல்லப் பிராணிகளுக்கான அணிகலன்களும் இயற்கையான பொருட்களாக இருக்க வேண்டும்.

நாம் நாய்களை நடத்திச் செல்லும் போது, அதிகப் போக்கு வரத்து உள்ள இடங்கள் அல்லது கட்டுமானப்பணிகள் நடைபெறும் இடங்கள் ஆகியவற்றை தவிர்க்க வேண்டும். எமிலி ஃபோக், இகாலஜிஸ்ட் இன் இணையதள ஆசிரியர் பசுமையாக மாறுவதற்கு இன்னும் சில குறிப்புகளை வழங்குகிறார். செல்லப்பிராணி பிரியர்களை வழக்கமான அசைவ உணவுக்கு பதிலாக நிலையான செல்லப்பிராணி உணவு விருப்பங்களை முயற்சிக்குமாறு அவர் கேட்டுக்கொள்கிறார். நடமாடும் போது நாய்களின் கழிவுகளை சேகரிக்க ஒருமுறை பயன்படுத்தும் பிளாஸ்டிக் பைகளுக்கு பதிலாக மக்கும் குப்பை பைகளை எடுத்துச் செல்லவும் அவர் பரிந்துரைக்கிறார். “நம் செல்லப்பிராணிகள் நம் குழந்தைகளைப் போன்றவை, நாம் எப்போதும் அவர்களுக்கு சிறந்ததைச் செய்ய விரும்புகிறோம். ஆனால் பல ஆண்டுகள் மனிதர்கள் மற்றும் செல்லப்பிராணிகள் செழிக்கக்கூடிய ஒரு உலகத்தை உருவாக்க நமது பூமியை நாம் கவனித்துக் கொள்ள வேண்டும்” என்று அவர் கட்டுரையில் சரியாக குறிப்பிடுகிறார்.

செல்லப்பிராணிகளுக்கு வளர்ப்போரின் இதயத்தில் ஒரு தனிஇடம் உண்டு. தங்கள் செல்லப்பிராணிகளில் ஒன்று இறந்தபோது பலர் மனம் உடைந்துள்ளனர். அவர்கள் புகைப் படங்கள் மற்றும் வீடியோக்கள் மூலம் தங்கள் செல்லப்பிராணிகளை நினைவு கூறுகின்றனர். ஆனால் நினைவுகளை உயிருடன் வைத் திருக்க மற்ற சுற்றுசூழல் நட்பு வழிகளும் உள்ளன. ஒருவேளை, உங்கள் செல்லப்பிராணிகளின் வாழ்க்கையை கொண்டாடும் வகையில் ஒரு மரத்தை நடுவது ஒரு நினைவுச்சின்னம் போன்று இருக்கும். அந்த மரம் எதிர்காலத்தில் காற்றை ஊட்டமளித்து மற்றும் சுற்றுப்புறத் தில் பசுமையை சேர்க்க அதன் சிறிய வழியில் உதவும்.

எழுத்தாளர் மூத்த இதழாளர் சுற்றுச்சூழல் பிரச்சனைகளைப்பற்றி எழுதிவருகிறார்.

## RI மாவட்டம் 3110

பேடி சிக்ஷித் மாதா வந்தித் திட்டத்தின்கீழ், அரசுப்பள்ளி மாணவிகளுக்குக் (8 முதல் 12ம் வகுப்பு) கல்வி, தூய்மைப் பொதிகள் வழங்கப்பட்டன, அவர்களுடைய தாய்மார்கள் கௌரவிக்கப் பட்டார்கள்.





## RC புனே ஸ்போர்ட்ஸ் சிட்டி — RID 3131

பப்மேடிக் இந்தியாவின் CSR நிதியின் மூலம், ஃபனஸ்ராய் வாடி என்ற தொலைதூரக் கிராமத்தில் 15 வசிப்பிடங்களில் சூரிய சக்தி விளக்குகள், தெருவிளக்குகள் நிறுவப்பட்டன.

## RC அகமத்நகர் பிரியதர்சினி — RID 3132

சீதாராம் சர்தா வித்யாலயா-வுக்கு ஒரு பொது அறிவிப்பு அமைப்பு, UPS அமைப்பு (மொத்த விலை ரூ.1.38 லட்சம்) கொடையளிக்கப்பட்டது. இதற்கு இந்தச் சங்கமும் ஸ்ரீகோபால் ராம்நாத் தூத் அறக்கட்டளையும் பகுதியளவு நிதியளித்தன.






## RC ஹிந்துப்பூர் — RID 3160

RC பிளைன்ஸ்போரோ, வடக்கு மற்றும் தெற்கு புருன்ஸ்விக், US, உடன் இணைந்து, ஹிந்துப்பூர் APSRTC பேருந்து நிலையத்தில் RO நீர் அமைப்பு (ரூ.1.8 லட்சம்) அமைக்கப்பட்டது.

செய்திகள்

## RC பர்டேஜ் கோஸ்டல் — RID 3170

பொர்வொரிம்-இல் உள்ள வித்யா பிரபோதினி கல்லூரியில் வளாகப் பணி வாய்ப்பு நேர்காணலுக்கு ஏற்பாடு செய்யப்பட்டது. இதன்மூலம் 32 இறுதி ஆண்டு மாணவர்கள் பலன் பெற்றார்கள்.






## RC சுல்லியா சிட்டி — RID 3181

சுல்லியா வட்டத்தில் அலெட்டி கிராமத்தில் உள்ள அரசு உயர்நிலைத் தொடக்கப் பள்ளியில் மாணவர்களுக்கு கழிப்பறைத் தொகுதி கட்டப்பட்டது.

## RC எடப்பல் — RID 3204

கேரளத்தில் உள்ள எடப்பலில் புற்றுநோயாளி ஒருவருக்குப் புதிய 800 சதுர அடி வீட்டை வழங்கினார் DG சேது சிவ் சங்கர். சங்கத் தலைவர் திலீப்குமார் இவ்விழாவில் பங்கேற்றார்.






## RC பேளூர் — RID 3291

கொல்கொத்தா வுட்லாண்ட்ஸ் மருத்துவமனையில், கடந்த 17 ஆண்டுகளாகச் சமூகத்துக்குச் சேவையாற்றிவரும் மூத்த செவிலியர் கீதா டே அவர்களின் அர்ப்பணிப்பைப் பாராட்டும்வகையில் அவருக்குச் சாதனையாளர் விருது வழங்கப்பட்டது.

ஒருங்கிணைப்பு: V முத்துகுமரன்

# தசைகளை காப்பாற்ற பலப்படுத்தும் உடற்பயிற்சி

பரத் — ஷலன் சவூர்

உலக சுகாதார அமைப்பு (WHO) ஆரோக்கியமான உடலை முழுமையான உடல் மற்றும் மன நலன் கொண்ட ஒன்று என வரையறுக்கிறது... நாங்கள் ஆரோக்கியம் என்று கூறுவது, நீங்கள் நேசிக்கும் மனிதர்கள் மற்றும் நீங்கள் விரும்பும் விஷயங்களுடன் முழுமையான வாழ்க்கையை வாழும் சக்திவாய்ந்த ஆற்றலை குறிப்பிடு கிறோம். உங்களால் செய்யக்கூடிய அனைத்தையும் நீங்கள் உணர வேண்டும்.

பலப்படுத்தும் உடற்பயிற்சி (ஸ்ட்ரெந்த் ட்ரைனிங்) தசை குறைவதைத் தடுக்க அல்லது தள்ளிப்போட ஒரு பாதுகாப்பு வடிவமாக செயல்படுகிறது. நம்முடைய உடல் எடையை மொத்த நேரமும் தாங்கும் கால்கள் தான் முதலில் தசை குறைவதை உணரக்கூடியதாக இருக்கும். இருப்பினும், கால்கள் தான் நம்முடைய உடல் நலத்தின் மிகச் சிறந்த குறிகாட்டிகள் ஆகும்.



ஆனால் எச்சரிக்கையான உடலுக்கு இன்னும் முன்பே தோன்றும் அறிகுறிகளும் உள்ளது: வலி – உள் பலவீனத்தின் ஒரு உறுதியான அறிகுறி. திசுப்படலம், தோலுக்குக் கீழே இருக்கும் திசுக்களின் தாள்கள், பெரும்பாலும் இந்த சவாலை முதன்மையாக எதிர்கொள்கிறது. ஆஸ்திரியாவின் விளையாட்டு அறிவியல் பேராசிரியரான ஜான் வில்கே, திசுப்படலத்தின் பங்கை சுட்டிக் காட்டுகிறார். மேலும், “ஒரு மாறுதலான வார்ம்-அப், திசுவை உடற்பயிற்சிக்கு மேலும் நெகிழ்ச்சி யடையச் செய்யும்’ என்று பரிந்துரைக்கிறார்.

பலப்படுத்தும் உடற்பயிற்சி என்பது உடற்கட்டமைப்பது மட்டுமல்ல. உகந்த நிலையில் வாழ்வது மற்றும் வயது தொடர்பான இழப்பை சமநிலைப்படுத்துவது ஆகியவை பலப்படுத்தும் உடற் பயிற்சியை தேர்வு செய்வதற்கான முக்கிய காரணங்கள்.

நீங்கள் தசையை பயன்படுத்தா விட்டால், அதன் அளவையும் வலிமையையும் நீங்கள் உறுதியாக இழப்பீர்கள். செயலற்ற தன்மை சர்கோபீனியாவை உண்டாக்குகிறது, இது சமநிலை இன்மை, கார்டியோ-வாஸ்குலர் நோய்கள் மற்றும் மெட்டாபாலிச நோய்கள் என பல ஆரோக்கியப் பிரச்சனைகளின் பொதுவான நிலையாகும். ஆனால் தசையை அதிகமாக பயன்படுத்து வதாலோ அல்லது தவறாக

பயன்படுத்துவதாலோ உருவாகும் ஆர்த்ரிடிஸ், சர்கோபீனியாவின் மறுமுனை. உண்மையில், வாழ்க்கை சமநிலையைப் பராமரிக்க வேண்டிய ஒரு செயலும் கலையும் ஆகும்.

எனவே, பலப்படுத்தும் உடற் பயிற்சிகளை சீக்கிரம் சேர்ப்பது புத்தி சாலித்தனம். தசை வலிமை குறைதல், தசை அளவு குறைவதை விட மிகவும் வேகமாக நிகழ்கிறது. இந்த குறைதல் பொதுவாக 60 வயதிற்குப் பின்பே தெரிய வரும், ஆனால் அது 40 வயதிற்கும் முன்னரே கூட தென்படலாம். பெண்கள் குறிப்பாக முன்கூட்டிய/வழக்கமான/மாதவிடாய் நிறுத்தத்திற்குப் பிந்தைய மாறுபாடு களால் பாதிக்கப்படுகின்றனர். ஒரு பொருத்தமான பலப்படுத்தும் உடற்பயிற்சி நடைமுறை உங்கள் உடல் வடிவத்தை மேலும் வரையறுத்து, சிற்பமாக்கும். உங்கள் பலப்படுத்தும் உடற்பயிற்சி நடைமுறையை உங்கள் மருத்துவருடன் பரிசீலிக்கவும்.

### உங்கள் தசைகளை பலப்படுத்துங்கள்

உங்களை பலப்படுத்துவதற்கான சரியான உடற்பயிற்சி முறையைத் தேர்ந்தெடுப்பதில் உங்களுக்கு நிறைய தேர்வுகள் உள்ளன – ஃப்ரி ஹான்ட், ஃப்ரி வெயிட்ஸ், வேலை நிலைய பயிற்சிகள், யோகா, பிலாட்டே, நீச்சல் போன்றவை உள்ளன. இதனுடன், நாம் பிறகு பார்க்க உள்ள டோனோமாட்டிக்கையும் இதில் சேர்க்கவும். உங்களால் முடிந்தால், விளையாட்டு மருத்துவத்தில் நிபுணத்துவம் பெற்ற மருத்துவர் அல்லது விளையாட்டுத் துறையைச் சேர்ந்த எலும்பு சிகிச்சை மருத்துவரிடம் உங்கள் உடற்பயிற்சி முறையைச் சரிபார்த்து தேர்வு செய்யவும். இன்று பல உடற்பயிற்சி மையங்கள் மற்றும் ஆரோக்கியக் கழகங்கள் விரைவாக வளர்ந்து வரும் விளையாட்டு துறையின் பகுதியாக உள்ளன மற்றும் அவர்கள் தங்களது செலவுகளை ஈடுசெய்யும் பொருட்டு உங்களை விலையுயர்ந்த உடற் பயிற்சி உபகரணங்களைப் பயன்படுத்த வற்புறுத்தலாம். அதோடு, பயிற்சியாளர்கள் என்று சிலரும் இருக்கிறார்கள். மேலே கூறப்பட்ட காரணத்திற்காக அவர்களும் அதே உபகரணங்களை பரிந்துரைக்கலாம். உண்மையில் உங்களுக்கு தேவையானது மிதமான கார்டியோ-வாஸ்குலர் உடற்பயிற்சி மற்றும் தேர்ந்தெடுக்கப்பட்ட எடை பயிற்சிகள் மட்டுமே.

உடற்கட்டமைப்பது, உங்கள் கார்டியோ-வாஸ்குலர் நிலையை உயர்த்துவது, பலப்படுத்தும் உடற்பயிற்சி செய்வது மற்றும் உங்கள் முழுமையான வாழ்க்கையை மேம்படுத்துவதற்கு இணையானதல்ல என்பதை நினைவில் கொள்ளவும். எனவே, இந்தத் தேவைகளை மேம்படுத்தும் பயிற்சிகளையும் மற்றும் உங்கள் மொத்த வாழ்வை மேம்படுத்தும் பயிற்சிகளையும் செய்யவும். கவனமாக உங்கள் தேவைகள் மற்றும் உங்களின் நிலையை பூர்த்தி செய்யும் ஒரு திட்டத்தில் சேருங்கள்.

நேஷனல் ஸ்ட்ரெங்த் அண்ட் கண்டிஷனிங் அசோசியேஷன், USA, ஒவ்வொரு பெரிய தசைக் குழுவிலும் பல தசை மூட்டு களையும் ஈடுபடுத்தும் பயிற்சி களை பரிந்துரைக்கிறது. 60 வயதுக்கு மேற்பட்டவர்கள் இந்த பயிற்சிகளை வாரத்திற்கு இரண்டு முதல் மூன்று முறை செய்ய அறிவுறுத்தப்படுகிறார்கள், ஓய்வு மற்றும் மீட்புக்காக அமர்வுகளுக்கு இடையில் 28 முதல் 48 மணிநேர இடைவெளியுடன் அவர்கள் அதை செய்யவேண்டும். ஒவ்வொரு உடற்பயிற்சியும், நீங்கள் முதன் முறையாக செய்யும் திறனின் (ஒரு முறை செய்யக்கூடிய மிக அதிக எடையின்) 50 முதல் 85 சதவீத எடையில் செய்யப்பட வேண்டும். ஒவ்வொரு செட்டிலும் 6 முதல் 12 முறை செய்ய வேண்டும். அது மிக சிரமமாக இருந்தால், ஒவ்வொரு செட்டிற்கும் இரண்டு முதல் ஐந்து நிமிட இடைவெளி எடுத்துக்கொள்ளலாம். அவ்வாறான கணக்கீடுகள் உங்களுக்கு சிக்கலாக இருந்தால் அல்லது குழப்பமாக தோன்றினால், புஷ்அப்ஸ் போன்ற உங்களுடைய உடல் எடையை மட்டுமே பயன்படுத்தி செய்யக்கூடிய உடற்பயிற்சிகளைச் செய்யவும்.

எங்களுடைய பிட்நெஸ் ஃபார் லைப் திட்டத்தில் இதற்காக சரியான உடற்பயிற்சி உபகரணங்கள் உள்ளன. இது உங்கள் உடல் எடையையே பயன்படுத்துகிறது. டானோமாட்டிக் உடற்பயிற்சி சாதனத்தை (அமேசானில் சுமார் ரூ.800க்கு கிடைக்கிறது) முதலில் எனது “வால் எலும்பை” வலுப் படுத்த எனது பிசியோதெரபிஸ்ட் பரிந்துரைத்தார். அது அந்தப் பணி மட்டுமல்லாது மேலும் பலவற்றையும் செய்தது. இது முழு உடலுக்கான உடற்பயிற்சி சாதனமாக செயல் படுகிறது. இது உடல் முழுவதையும் பல உடற்பயிற்சிகளில் ஈடுபடுத்து கிறது. எங்களுக்கு உடற் பயிற்சி செய்ய நேரம் குறைவாக இருக்கும் போது இதை நாங்கள் பயன் படுத்துவோம்.

### வலி இருக்கும்போது, கஷ்டப்பட வேண்டாம்

திசுக்களின் சேதம் வலியை ஏற்படுத்துகிறது. மருந்து முதல் மசாஜ் வரை பலவிதமான நிவாரணங்கள் அதற்கு உள்ளன. சேதமடைந்த திசுக்களை நிவர்த்திப்பதற்கும், சீரமைப்பதற்கும் இடையே உள்ள வேறுபாட்டை புரிந்து கொள்வது மிக முக்கியம். வலி நிவாரணி வலியை சில நிமிடங்களில் குறைத்து விடலாம். அதனால் வலி நிவாரணி எடுத்துக் கொண்ட பிறகு உடனே உடற்பயிற்சி செய்யவேண்டாம். அதன் தாக்கத்தை நீங்கள் உடனே உணராமல் இருக்கலாம். ஆனால் அது மேலும் சிக்கல்களை மற்றும் காயத்தை ஏற்படுத்தலாம். ஓய்வெடுப்பதே சிறந்தது. நிதானமாக இருங்கள். வலி நிவாரணியை நிறுத்தி 24 மணி நேரம் ஆன பிறகு மட்டுமே உங்கள் நடைமுறைக்கு திரும்ப வேண்டும். வலி நிவாரணி எடுத்துக் கொள்ளும் போது உடலுக்குள் கூடுதல் கலோரிகள் மற்றும் புரத உணவும் எடுத்துக்கொள்ளுங்கள். போதிய உறக்கமும் பெறுங்கள்.

கட்டுரை ஆசிரியர்கள் இருவரும் Fitness for Life மற்றும் Simply Spritiual — You Are Naturally Divine என்ற ஆங்கில நூல்களின் எழுத்தாளர்கள்.

# சூரத்தில் பார்கின்சன் சிகிச்சை மையம்

கிரண் ஜெஹரா

பார்கின்சன் நோயுடன் போராடு பவர்களுக்கு ஆதரவாக, RC சூரத் ஈஸ்ட், RID 3060, BK பரேக் பார்கின்சன் நோய் மற்றும் இயக்கக் கோளாறுகள் சங்கத்துடன் இணைந்து, கடந்த ஆண்டு சூரத்தில் உள்ள யூனிட்டி மருத்துவமனையில் ஒரு சிகிச்சை மையத்தைத் திறந்து வைத்தது. இந்த பார்கின்சன் நோய் சிகிச்சை மையம் ஏற்கனவே வாழ்க்கைகளை மாற்றத் தொடங்கி யுள்ளது. பயனாளிகளில் ஒருவரான மகேந்திர ஷா, 57 வயதான முன்னாள் ஜவுளி விற்பனையாளர், உடல் இயக்கத்தை பாதிக்கும் நரம்பு மண்டலக் கோளாறால் பாதிக்கப்பட்டார்.

ஒரு காலத்தில் "வண்ணங்கள், துணிகள் மற்றும் வாடிக்கையாளர் களுடன் தொடர்பு கொள்ளுதல் ஆகிய திறனுக்கான" அறியப்பட்ட ஷா சில ஆண்டுகளுக்கு முன்பு தனது உடலில் நுட்பமான மாற்றங்களைக் கவனித்தார். "வலது கையில் ஒரு சிறிய நடுக்கம் மற்றும் அசைவுகளில் ஒரு விறைப்பு என் வேலையில் தலையிட ஆரம்பித்தது. ஆரம்பத்தில், இந்த மாற்றங்கள் சோர்வு காரணமாக இருப்பதாக நான் நினைத்தேன், ஆனால் அறிகுறிகள் தொடர்ந்தபோது மருத்துவரை அணுகினேன்" என்று அவர் நினைவு கூர்ந்தார். "எனது எதிர்காலத்தைப் பற்றி நான் கவலைப்பட்டேன். துணி விற்பது மட்டுமே எனக்குத் தெரிந்த வேலை. நான் எப்படி என் குடும்பத்தை ஆதரிப்பேன்?" ஆரம்பத்தில் அதிர்ச்சி இருந்தபோதிலும், பார்கின்சன் தனது வாழ்க்கையை கட்டுப்படுத்தக் கூடாது என்று அவர் தீர்மானித்தார். வழக்கமான சிகிச்சைகள் அவரது அறிகுறிகளை நிர்வகிக்க உதவினாலும், அதிக செலவுகள் தவிர, தலைவலி மற்றும் வாந்தி போன்ற பக்கவிளைவுகளும் இருந்தன.

அதிர்ஷ்டவசமாக அவர் ஒரு உள்ளூர் செய்தித்தாளில் ஏழைகளுக்கு இலவச சிகிச்சை அளிக்கும் பார்கின்சன் நோய் சிகிச்சை மையம் பற்றிய விளம்பரத்தைப் பார்த்தார். "நான் சிகிச்சைக்காக பதிவு செய்தேன். ஆதரவு மற்றும் சிகிச்சைகள் எனது வாழ்க்கைத் தரத்தை கணிசமாக மேம்படுத்தி யுள்ளன" என்று அவர் கூறுகிறார். RC சூரத் ஈஸ்டின் முன்னாள் தலைவர் ஜகதீஷ் வகாசியா கூறுகையில், "இந்த மையம் சங்கத்தின் முழு நிதியுதவியுடன் ரூ.50,000 செலவில் அமைக்கப் பட்டது. யூனிட்டி மருத்துவமனையின் உள்ளே மையம் அமைந்திருப்பதால்



பார்கின்சன் நோய் சிகிச்சை மையத்தில் ஒரு பிசியோதெரபி அமர்வு.

நாங்கள் அதற்கான இடத்தைத் தேடவில்லை.”

ஆரம்பத்தில் இருந்து, சிகிச்சை மையம் நரம்பியல் அறுவை சிகிச்சை நிபுணர்களுடன் மாதாந்திர ஆலோசனைகள், பிசியோதெரபி, பேச்சு, இசை, அறிவாற்றல் மற்றும் தொழில் சார் சிகிச்சைகள் மற்றும் உளவியல் ஆலோசனைகள் உள்ளிட்ட பல்வேறு சிகிச்சைகள் மூலம் 100க்கும் மேற்பட்ட நோயாளிகளுக்கு சிகிச்சை அளித்து வருகிறது.



மாரத்தானில் பங்கேற்பாளர்கள்.

**ரோட்ராக்ட் உடன் கூட்டு**

சங்கம் மற்றும் அதன் ரோட்ராக்ட் சங்கமான சூரத் ஈஸ்ட், பெண்கள் அதிகாரம் மற்றும் கர்ப்பப்பை வாய்ப் புற்றுநோய் விழிப்புணர்வை ஊக்குவிக்கும் வகையில் ரோட்டரி சஞ்சீவனி என்ற மாரத்தான் ஓட்டத்தை ஏற்பாடு செய்தது. 2,100-க்கும் மேற்பட்டோர் பங்கேற்ற மாரத்தான் 10 கிமீ, 5 கிமீ மற்றும் 2 கிமீ ஓட்டங்களைக் கொண்டிருந்தது. DG நிஹிர் டேவ் ஓட்டங்களைக் கொடியசைத்து துவக்கி வைத்தார். அதே நேரத்தில், சங்கங்கள் சுற்றுச்சூழல் பாதுகாப்பை ஊக்குவிக்கும் ஒரு சைக்கிள் பேரணியான சைக்கிளோஃபன்-ஐ நடத்தியது. இந்நிகழ்ச்சியில் 400க்கும் மேற்பட்டோர் 5, 10 மற்றும் 15 கிமீ சைக்கிள் ஓட்டிச் சென்றனர்.

சூரத்தில் உள்ள மன அழுத்த நிவாரண மையங்கள், கல்லூரி மற்றும் பள்ளி மாணவர்களுக்கான போதை ஒழிப்புத் திட்டங்கள், ஊனமுற்றோருக்கான இலவச மருத்துவச் சேவைகள் மற்றும் பார்கின்சன் சிகிச்சை மையத்திற்கு நிதியளித்தல் உள்ளிட்ட பிற முயற்சிகளுக்கு நிதி திரட்டும் திட்டமாக ரோட்டரி சஞ்சீவனி இருந்தது.■

# இந்தியாவின் மாதவிடாய் பாடல்

ரோட்டரி செய்திக்குழு



இடதிலிருந்து: *சுனிதி சவுகான்; மாதவிடாய் பற்றி இந்தியில் ஒரு போஸ்டர்; ஸ்ரேயா கோஷல்*

ப்ராக்டர் கேம்பிள் நிறுவனத்தின் பெண்பால்-பராமரிப்பு பிராண்டான விஸ்பர் வெளியிட, ஸ்ரேயா கோஷல் மற்றும் சுனிதி சௌஹான் பாடிய பீரியட் கா மதலப் ஹெல்தி ஹை ஆப் (மாதவிடாய் என்றால் நீங்கள் ஆரோக்கியமாக இருக்கிறீர்கள்) என்ற பாடல் மாதவிடாயைச் சுற்றியுள்ள களங்கத்தை உடைப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது. உலக மாதவிடாய் சுகாதார தினத்தன்று வெளியிடப்பட்ட இந்தப் பாடலில் பள்ளிக் குழந்தைகள் சேர்ந்து, பாடி, நடனமாடுவது போல் காட்சிபபடுத்தப்பட்டுள்ளது.

சுனிதி சௌஹான் தனது உற்சாகத்தை வெளிப் படுத்தி, “இந்தியாவின் ஒவ்வொரு குடிமகனிடமும் இந்த பாடல் கொண்டு சேர்த்து, அவர்கள் இளம் பெண்களை பயமின்றி தன்னம்பிக்கையுடன் வாழ அதிகாரம் அளிக்கும் என்று நம்புகிறேன்” என்றார். பெண்களுக்குக் கல்வி கற்பிக்க வேண்டியதன் அவசியத்தை அவர் எடுத்து ரைத்தார், ஏனெனில் சிலருக்கு 8 வயதிலேயே மாதவிடாய் ஏற்படுவதால், சமூகத் தடைகள் காரணமாக பள்ளி இடைநிற்றலுக்கு அது வழிவகுக்கிறது.

“சிறு குழந்தைகளை மாதவிடாய்க்கு தயார்படுத்து வதற்கும், அதன்மேல் உள்ள பயத்தைப் போக்குவதற்கும் அவர்களுக்குக் கற்றுக் கொடுப்பதன்” முக்கியத்துவத்தை ஸ்ரேயா கோஷல் வலியுறுத்தினார். இப்பாடலின் கோரஸை அவர் எட்டு மொழிகளில் பாடியுள்ளார். இசை யமைப்பாளர் அமன் பந்த் இந்த பாடலுக்கு இசையமைத்து இயக்கியுள்ளார்.

https://youtu.be/nASJy3iX7uI-ல் சுனிதி சவுகானின் பதிப்பையும், https://youtu.be/1en0mKIiC8A-ல் ஸ்ரேயா கோஷலின் பதிப்பையும் பார்க்கவும்.■

# RI இயக்குநர்கள் குழு 2024–25


*ரோட்டரி இன்டர்நேஷனல் இயக்குநர்கள் குழு ரோட்டரியின் சர்வதேச விவகாரங்கள், நிதி விவகாரங்களை RI அமைப்பின் சட்ட விதிகளின்படி நிர்வகித்து வருகிறது. மண்டலங்களால் பரிந்துரைக்கப்பட்டு இரண்டு வருடகாலத்திற்கு இயக்குநர்கள் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். 8 புதிய இயக்குநர்கள் மற்றும் RIPE ஜூலை 1-ம் தேதி வாரியத்தில் இணைகிறார்கள்.*



**ஸ்டெஃப்னி அர்ச்சிக்,** தலைவர்

RC மெக்முர்ரே, பென்சில்வேனியா

ஸ்டெஃப்னி அர்ச்சிக் RI இயக்குநராகவும் TRF அறங்காவலராகவும் பணியாற்றியுள்ளார். மேலும் பயிற்சித் தலைவர், ரோட்டரி அறக் கட்டளையின் பிராந்திய ஒருங்கிணைப் பாளர் (RRFC), RI தலைவரின் பிரதிநிதி (RIPR) என பல்வேறு பதவிகளையும் வகித்துள்ளார். மேலும் அவர் சட்டத்திற்கான கவுன்சிலின் (CoL) மூன்று அமர்வுகளில் பிரதிநிதி மற்றும் உறுப்பினராக இருந்துள்ளார். ரோட்டரியின் திட்டமிடல் குழுவின் தலைவர் மற்றும் TRF நூற்றாண்டு விழாக்குழுவின் தலைவர் மற்றும் தேர்தல் மறுஆய்வு குழு மற்றும் செயல்பாட்டு மறு ஆய்வுக்குழு உள்ளிட்ட பல்வேறு குழுக்களில் உறுப்பினராகவும் பணியாற்றியுள்ளார். 1991-ம் ஆண்டு முதல் ரோட்டரி உறுப்பினரான ஸ்டெஃப்னி, இந்தியா மற்றும் நைஜீரியாவில் தேசிய நோய்த் தடுப்பு நாட்கள் உள்ளிட்ட பல்வேறு சர்வதேச சேவைத் திட்டங்களில் பங்கேற்றுள்ளார். வியத்நாமில் ஒரு ஆரம்பப் பள்ளியை நிறுவுவதற்காக பல்வேறு சங்கங்களுடன் இணைந்து பணியாற்றியுள்ளார். மேலும் நீர் வடிகட்டிகளை நிறுவ டொமினிகன் குடியரசுக்கும் சென்றுவந்துள்ளார்.




**மரியோ டீ கமார்கோ**

RIPE

RC சான்டோ ஆந்த்ரே, பிரேசில்

டீ கமார்கோ அச்சுத்துறையின் வர்த்தக ஆலோசகர் மற்றும் தமது தந்தையாரால் நிறுவப்பட்ட கிராபிகா பண்டேரான்டஸ், அச்சுத்தொழில் நிறுவனத்தின் முன்னாள் இயக்குநர். 1980-ம் ஆண்டில், தமது 23-ம் வயதில் ரோட்டரியில் இணைந்தார். கடந்த காலங்களில் இயக்குநராகவும், அறங்காவலராகவும் பணியாற்றியவர். பிரேசில் நாட்டிலிருந்து தேர்ந்தெடுக்கப் படும் நான்காவது RI தலைவர் இவர். ரோட்டரி இன்டர்நேஷனலின் கற்றல் குழு மற்றும் பார்வை இழப்பை தடுக்கும் பணிக்குழு மண்டல ஒருங்கிணைப்பாளராகவும் இவர் பணியாற்றியுள்ளார். TRF-ன் சிறப்புமிக்க சேவைக்கான விருதையும் டீ காமர்கோ பெற்றுள்ளார். அவரும் அவரது மனைவி டெனிஸுயும் பெருநன்கொடையாளர் மற்றும் TRF பயனாளர்கள்.



**ஹான்ஸ்-ஹெர்மன் காஸ்டன்**

துணைத் தலைவர்

RC ஆசென்- பிராங்கென்பர்க், ஜெர்மனி

ஹான்ஸ்-ஹெர்மன் காஸ்டன் ஒரு வழக்குரைஞர் மற்றும் தொழிலதிபர். 2003-ம் ஆண்டு ரோட்டரியில் சேர்ந்தார்.

2023-ல் காஸ்டன் RI இயக்குநர்கள் குழுவில் இணைந்தார். ஜெர்மன், சுவிட்சர்லாந்து மற்றும் ஆஸ்திரியாவில் ஜெர்மன் மொழி பேசும் மாவட்டங்களில் பயிற்சி மற்றும் முன்மொழிவு களை ஒருங்கிணைத்து, RI கற்றல் வசதியாளராகவும் இருமுறை CoL பிரதிநிதியாகவும் பணியாற்றியுள்ளார்.

காஸ்டன் மற்றும் அவரது துணைவியார் நட்ஜா பிகார்டு, பால் ஹாரிஸ் கூட்டாளிகள் மற்றும் பெரு நன்கொடையாளர்கள். சேவை விருதையும் அவர் பெற்றுள்ளார்.



**ரோண்டா "பெத்" ஸ்டப்ஸ்**

பொருளாளர்

RC மேரிவில்லி, டென்னஸ்ஸி

பெத் ஸ்டப்ஸ் பிளைமௌத் ஸ்டேட் கல்லூரியில் படித்து பட்டம் பெற்ற சான்றிதழ் அளிக்கப்பட்ட பொது கணக்காளர். மேரிவில்லியில் ஒரு நிறுவனத்தில் CPA-யாக பணியாற்றிய பின் 1994 முதல் தனியாக நிறுவனம் நடத்தி வருகிறார். அவர் அமெரிக்க சான்றளிக்கப்பட்ட பொது கணக்காளர் கழகம் மற்றும் டென்னஸ்ஸி பொது கணக்கு சங்கம் ஆகியவற்றின் உறுப்பினராகவும் இருந்து வருகிறார்.

8 வயதில் தமது தந்தையுடன் அடிக்கடி ரோட்டரி சங்க கூட்டத்திற்கு சென்றுவரத் தொடங்கிய பெத், 1991 ஆம் ஆண்டு மேரிவில்லி ரோட்டரி சங்கத்தில் உறுப்பினராகச் சேர்ந்தார். 22 RI மாநாடுகளில் கலந்து கொண்டுள்ளார். ஐக்கிய நாடுகள் சபையில் ரோட்டரி தினம் கொண்டாடப்பட்டபோது நியூயார்க் நகரம் சென்றுவந்துள்ளார். இந்தியாவில் NID-க்கு உதவினார். சங்கத்தின் கூட்டாண்மை திட்டங்களுக்காக மெக்ஸிகோ சென்றுவந்தார். நாடு முழுவதும் பல்வேறு மண்டலக் கூட்டங்களில் கலந்துகொண்டுள்ளார். அவர் நிர்வாகம், CoL, ஆலோசனை மற்றும் கூட்டுத் தணிக்கை குழு கூட்டங்களிலும் பணியாற்றியிருக்கிறார்.

அவரும் அவரது கணவர் டோனியும் AKS உறுப்பினர்கள்.



**கிம் போக் ச்யூ**
இயக்குநர் 2023–25
RC புகிஸ் ஜங்ஷன், சிங்கப்பூர்

கிம் போக் ச்யூ சிங்கப்பூரில் ரியல் எஸ்டேட் தொழில் செய்வதுடன், ரியல் எஸ்டேட் நிறுவனங்களையும் நடத்தி வருகிறார். நிதிநிர்வாக நிறுவனத்தையும் நடத்தி வருகிறார். 1996 ஆம் ஆண்டு அவர் ரோட்டரியில் சேர்ந்தார்.

உலகளாவிய அளவில் போலியோ ஒழிப்பு முயற்சியைப் பற்றிய செய்திகளைப் படித்த பிறகு புகிஸ் ஜங்ஷன் ரோட்டரி சங்கத்தில் சேர முடிவு செய்தார் ச்யூ. தன்னலமற்ற சேவைக்கான விருதுபெற்றவர். அவரும் அவரது மனைவி ஃபிலி இருவரும் ஏகேஎஸ் உறுப்பினர்கள்.



**ஈவ் கான்வே-காஜி,** இயக்குநர் 2023–25
RC ரெட்பிரிட்ஜ், இங்கிலாந்து


ஈவ் கான்வே-காஜி ஒரு மல்டிமீடியா பத்திரிகையாளர். 2007-ல் பிபிசி செய்தி நிறுவனத்துடன் இணைந்து ரோட்டரி இளம் குடிமகன் விருதை தொடங்கிய பெருமை இவருக்கு உண்டு. இளைஞர்களைப் பற்றிய நேரமறையான கருத்துக்களை ஊக்குவிப்பதில் கவனம் செலுத்தி வந்தார். ரோட்டரி மூலம் ராபர்ட் ஹூஸைன் காஜி என்பவரை சந்தித்து அவரையே திருமணம் செய்து கொண்டார். ஆனால், அவரது கணவர் கடந்த 2023 டிசம்பரில் காலமாகிவிட்டார். பெக்வெஸ்ட் சங்கத்தின் உறுப்பினரான அவர், பெருநன்கொடையாளர் என்ற முறையில் TRF-ஐ ஆதரிக்கிறார்.



**பேட்ரிக் ஈக்ஸ்,** இயக்குநர் 2024–26
RC கிரசன்ட் (கிரீன்ஸ்போரோ), வட கரோலினா

பேட்ரிக் ஈக்ஸ் தொழில்முறையில் ஒரு பொறியாளர். சி.பி. ஈக்ஸ் நிறுவனத்தின் உரிமையாளர். கட்டுமானத்தொழிலுக்குத் தேவையான மெட்டல் பிரேம்களை தயாரித்து விநியோகம் செய்து வருகிறார்.

1998-ம் ஆண்டு ரோட்டரியின் பிறந்த நாளான பிப்ரவரி 23-ம் தேதி ஈக்ஸ் ரோட்டரியில் சேர்ந்தார். ரோட்டரியின் சர்வதேச அசெம்பிளியில் கற்பித்தல் பணியில் சேவையாற்றியுள்ளார். RC, ARRFC, கருத்தரங்கு தலைவர், புதுமையான சங்கத்தின் ஆதரவாளர் மற்றும் கரோலினாவில் தலைவரைத் தேர்ந்தெடுக்கும் பயிற்சி கருத்தரங்கின் துணைத் தலைவராகப் பணியாற்றியுள்ளார். ரோட்டரி இன்டர்நேஷனலின் தன்னலமில்லாத சேவைக்கான விருதுபெற்றவர் மற்றும் உறுப்பினர் சங்கத்தைச் சேர்ந்தவர். மேலும் TRF இன் சிறப்புமிக்க சேவைக்கான விருது மற்றும் சிறந்த சேவைக்கான சான்றையும் பெற்றுள்ளார். அவரும் அவருடைய மனைவி கிறிஸ்டனும் பெருநன்கொடையாளர்கள். பெக்வெஸ்ட் மற்றும் பால் ஹாரிஸ் சங்கங்களின் உறுப்பினர்கள்.



**கிறிஸ்டின் எட்டியென்**
இயக்குநர் 2024–26
RC பெடோஸ்கி, மிச்சிகன் கிறிஸ் எட்டியென்

ஹார்பர் சௌத்பே இன்டர்நேஷனல் ரியால்டியுடன் தொடர்புடைய தரகர் மற்றும் பே ஹார்பர் கிராமத்தின் குத்தகைக்கான இயக்குநர். 1990-ம் ஆண்டில் ரோட்டரியில் சேர்ந்தார். இந்தியா மற்றும் நைஜீரியாவில் நடைபெற்ற NID நிகழ்வுகளில் சேவையாற்றியவர். எட்டியென் TRF-ன் சிறப்பான சேவைக்கான சான்றிதழை பெற்றுள்ளார். அவரும் அவரது கணவரும் பெருநன்கொடையாளர்கள்.



**டேனியல் ஹிமெல்ஸ்பாச்**
இயக்குநர் 2023–25
RC டென்வர் மைல் ஹை, கொலராடோ

ஹிமெல்ஸ்பாச் 1993-ல் ரோட்டரியில் சேர்ந்தார். போலியோவை இப்போதே ஒழிப்போம் இயக்க ஒருங்கிணைப்பாளர் மற்றும் RRRFC மற்றும் பல்வேறு மாவட்ட மற்றும் மண்டல தலைமைப் பதவிகளை வகித்துள்ளார். 2016 CoL கூட்டத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்டு 16–21 சட்டமாக மாறிய சங்கத்தின் நெகிழ்வுத்தன்மையை முன்மொழிவதில் அவர் முக்கிய பங்கு வகித்தார். 2017 முதல் 2020 வரை CoL பிரதிநிதியாகவும் பணியாற்றினார். நேபாளத்தில் உள்ள மலைவாழ் மக்கள் சமூகத்தினருக்கு குடிநீர் மற்றும் இதர சேவைகள் வழங்குவதற்காக காத்மாண்டுவில் உள்ள ரோட்டரி சங்கங்களுடன் நீண்டகால கூட்டாண்மை உள்பட பல்வேறு உள்ளூர் மற்றும் சர்வதேச சேவைத் திட்டங்களில் அவர் ஈடுபட்டுள்ளார்.

அவரும் அவரது மனைவி லெஸ்லியும் பால்ஹாரிஸ் மற்றும் பெக்வெஸ்ட் சங்கங்களின் உறுப்பினர்கள். பெருநன்கொடையாளர்கள். ரோட்டரியில் சிறந்த சேவைக்காக TRF-ன் சிறந்த சேவைக்கான பாராட்டு உள்பட பல்வேறு விருதுகளைப் பெற்றுள்ளார்.



**நாவ்மி லுவான்-ஃபோங் லின்**
இயக்குநர் 2024–26
RC தைபே லிலி, தாய்வான்

நாவ்மி லுவான்-ஃபோங் லின் 2004-ல் தைபே லிலி ரோட்டரி சங்கத்தின் பட்டயத் தலைவராக ரோட்டரியில் சேர்ந்தார். ரோட்டரியில் சர்வதேச அளவில் RIPR, ARRFC, ARC, அமைதிக்கான முக்கிய பரிசுகள் முன்முயற்சி குழு உறுப்பினர், அறக்கட்டளை மற்றும் பரிசுகள் குழுவின் ஆலோசகர் மற்றும் ரோட்டரி கழகத்தின் துணைத்தலைவர், அமைப்பாளர் என பல்வேறு நிலைகளில் பணியாற்றியுள்ளார்.

தன்னலமற்ற சேவைக்கான விருதையும் லின் பெற்றுள்ளார். அவரும் அவருடைய கணவர் PDG லூயிஸ் ஹஸு குன்-பை இருவரும் ஏகேஎஸ் உறுப்பினர்கள் மற்றும் பெருநன்கொடையாளர்கள்.




**ஐசாவ் மிக் மிஸுனோ**

**இயக்குநர் 2024–26**

**RC டோக்கியோ டோபிஹினோ, ஜப்பான்**

ஐசாவ் மிக் மிஸுனோ 1989-ம் ஆண்டில் ரோட்டரியில் அவரது சங்கத்தில் பட்டய உறுப்பினராகச் சேர்ந்தார். இது அவரது தந்தையின் சங்கத்தால் வழங்கப்பட்டது. ARC, RC, பயிற்சித் தலைவர், பிராந்திய உறுப்பினர், திட்டத் தலைவர் மற்றும் RIPR என பல்வேறு பதவிகளை வகித்துள்ளார். அவர் பெரு நன்கொடையாளர் மற்றும் பால் ஹாரிஸ் சங்க உறுப்பினர்.




**சால்வடார் ரிஸ்ஸோ டவாரெஸ்**

**இயக்குநர் 2024–26**

**RC மான்டெர்ரி கார்லோஸ் கான்செகோ, மெக்ஸிகோ**

சால்வடார் ரிஸ்ஸோ டவாரெஸ் தமது 27 வது வயதில், 1989-ம் ஆண்டில் ரிஸ்ஸோ, ரோட்டரியில் சேர்ந்தார். ஆரம்பத்தில் அவர், தனது வழிகாட்டியான PRIP கார்லோஸ் கான்செகோவின் உதவியாளராக இருந்து வந்தார். மெக்ஸிகோ மற்றும் இதர நகரங்களுக்குப் பயணம் செல்லும்போது அவர், ரிஸ்ஸோவுக்கு ரோட்டரியின் செயல்பாடுகள் பற்றி விரிவாக சொல்லிக் கொடுத்தார்.

அவரும் அவரது துணைவியார் எஸ்மரால்டா சிமல் நவரெட்டே இருவரும் ரெய்னோஸா எம்பிரேசாரியல் ரோட்டரி சங்கத்தின் உறுப்பினர்கள். ரோட்டரி அறக்கட்டளையின் பெரு நன்கொடையாளர்கள், பயனாளர்கள். பால் ஹாரிஸ் மற்றும் பெக்வெஸ்ட் சங்கங்களின் உறுப்பினர்கள்.




**அனிருத்தா ராய்சௌத்ரி**

**இயக்குநர் 2023–25**

**RC கொல்கத்தா மெகா சிட்டி, இந்தியா**

அனிருத்தா ராய்சௌத்ரி ஒரு மின் பொறியாளர். முதல் தலைமுறையைச் சேர்ந்த தொழில்முனைவர். அவர் "ஜூம்" என்னும் நிறுவனத்தை உருவாக்கினார். அதில் 250-க்கும் மேலானவர்கள் பணிபுரிகின்றனர். டிஜிட்டல் இமேஜிங், மருத்துவப் பயன்பாடுகளுக்கான 3டி பிரின்டிங் மற்றும் பெரிய அளவிலான வடிவமைப்பு, பிரின்டிங்கில் இவரது நிறுவனம் ஈடுபட்டுள்ளது.

1995-ம் ஆண்டு தனது சொந்த சங்கத்தில் பட்டய உறுப்பினராகச் சேர்ந்தார். ரோட்டரி இன்டர்நேஷனலில் RPIC, ARC, ARRFC மற்றும் RIPR ஆக 8 முறை பணியாற்றியுள்ளார். TRF-ன் தொழில்நுட்ப ஆலோசகர் குழு உறுப்பினராகவும் பணியாற்றியுள்ளார். தன்னலமற்ற சேவைக்கான விருதையும், சிறப்புமிக்க சேவைக்கான TRF-ன் பாராட்டுச் சான்றிதழ் மற்றும் இதர விருது களையும் பெற்றுள்ளார். அவரும் அவரது மனைவி ஷிப்ரா இருவரும் 3-ம் நிலையிலான பெரு நன்கொடையாளர்கள் மற்றும் பெக்வெஸ்ட் சங்கத்தின் உறுப்பினர்கள்.



**சூசன் ஸ்டென்பர்க்**

**இயக்குநர் 2024–26**

**RC ஆஸ்டர்சண்ட் ஆரே, ஸ்வீடன்**

சூசன் ஸ்டென்பர்க் பல்கலைக்கழக மாணவர்களுக்கான வர்த்தக மேம்பாடு மற்றும் நிர்வாக ஆலோசனை வழங்கும் நிறுவனத்தை நடத்தி வருகிறார்.

அவர், கான்ஸாஸ் மாநிலம், மன்ஹட்டனில் ரோட்டரி இளைஞர் பரிமாற்றத் திட்டத்தின் முன்னாள் மாணவியாக இருந்தவர். 2009 முதல் ரோட்டேரியன். CoL பிரதிநிதி, மாவட்ட பயிற்சியாளர், RRFC மற்றும் RC என ரோட்டரியில் பல்வேறு நிலைகளில் பணியாற்றியுள்ளார்.

அவரும், அவரது கணவர் கோரன் ஸ்டென்பர்க் TRF ஆதரவாளர்கள், பெருநன்கொடையாளர்கள். பால் ஹாரிஸ், மாவட்டம் 2230-ன் போலியோ பிளஸ் மற்றும் பெக்வெஸ்ட் சங்கங்களின் உறுப்பினர்கள்.




**TN ராஜு சுப்ரமணியன்**

**இயக்குநர் 2023–25**

**RC தேவ்நர், இந்தியா**

ராஜு சுப்ரமணியன் ஒரு மூத்த வழக்குரைஞர். இந்தியாவின் உயர்நீதிமன்ற மற்றும் உச்சநீதிமன்ற அமைப்புகளில் பணிபுரிகிறார். மும்பை பல்கலைக்கழகத்தில் பொருளாதாரம் மற்றும் சட்டம் பயின்று பட்டம் பெற்றவர். 1987-ம் ஆண்டு தனது ரோட்டரி சங்கத்தில் பட்டய உறுப்பினராகச் சேர்ந்தார். தேர்தல் மறு ஆய்வு, சட்ட விதிகள், CoL அமைப்புக் குழுக்களில் பணியாற்றியுள்ளார். சுப்ரமணியன் ரோட்டரி கழகத் தலைவர், பயிற்சித் தலைவர் மற்றும் பயிற்சித் தலைவர் ஆதரவாளர், RRFC மற்றும் PDG-களுக்கான ரோட்டரி கூட்டாண்மை இயக்குநர் என பல்வேறு பதவிகளை வகித்துள்ளார். பயிற்சித் தலைவர் மற்றும் 2022-ல் Col துணைத் தலைவராக இருந்தபோது கோவிட் தொற்றால் பாதிக்கப்பட்ட அவர், சவாலான நேரங்களில் கூட்டத்தை வழிநடத்தியுள்ளார்.

சுப்பிரமணியன் மற்றும் அவரது மனைவி வித்யா இருவரும் TRF ஆதரவாளர்கள். பால் ஹாரிஸ் சங்கம் மற்றும் AKS உறுப்பினர்கள் மற்றும் பயனாளிகள். தன்னலமற்ற சேவைக்கான விருது பெற்றவர் மற்றும் TRF-ன் சிறந்த சேவைக்கான பாராட்டு பெற்றவர்.



**டேனியல் தனசே**

**இயக்குநர் 2024–26**

**RC சுசீவா புகோவினா, ருமேனியா**

டேனியல் தனசே 2002-ம் ஆண்டில் ரோட்டரியில், சேர்ந்தார். ARC, RC, புகாரெஸ்ட் ரோட்டரி கழகத்தின் தலைவர் என பல பதவிகளை வகித்துள்ளார். RIPR-ஆக 6 முறை பணியாற்றியுள்ளார். ரோட்டரியின் பன்முகத்தன்மை, சமநிலை மற்றும் உள்ளடக்கம் ஆலோசனைக்குழு

உறுப்பினராகவும் பங்கேற்பாளர் அனுபவக் குழுவின் உறுப்பினராகவும் உள்ளார். தன்னலமில்லாத சேவைக்கான விருது பெற்றவர் தனசே. அவரும் அவரது மனைவி மர்லேனா இருவரும் பெருநன்கொடையாளர்கள்.



**அலைன் வான் டீ போயல்**
**இயக்குநர் 2024–26**
**RC வீசெம்பீக்-கிராய்னெம், பெல்ஜியம்**

அலைன் வான் டீ போயல் கோகூன்போயல் எஸ்ஆர்எல் என்ற நிறுவனத்தின் உரிமையாளர். குளியலறை பொருள்கள் மற்றும் சாதனங்களின் விநியோகஸ்தர். 1992-ல் இவர் தாம் உறுப்பினராக இருக்கும் சங்கத்தை பட்டயப்படுத்தினார்.

அவர் மாவட்ட உறுப்பினர் மற்றும் ரோட்டரி அறக்கட்டளை குழுவுக்கு தலைமைவகித்தார். பிராந்திய ரோட்டரி குழுக்களில் செயலாற்றி வருபவர். பிரெஞ்சு மொழிபேசும் ஆளுநர்களுக்கான ஒருங்கிணைப்பு மையத்தின் இயக்குநராகவும் பணியாற்றி வருகிறார். ரோட்டரி பெலக்ஸ் சேவைக் குழுவின் கௌரவத் தலைவராகவும் பணியாற்றுகிறார். பெல்ஜியம் மற்றும் லக்ஸம்பர்கிலிருந்து வெளியாகும் ரோட்டரி பிராந்திய "ரோட்டரி கான்டாக்ட்" இதழின் வெளியீட்டாளர். இணிடூ பிரதிநிதி மற்றும் ஐரோப்பாவில் உள்ள ரோட்டரி தலைமைத்துவ கழகத்தின் இணை தலைவராகவும் பணியாற்றியுள்ளார்.

போலியோ இல்லாத உலகத்தை உருவாக்குவதற்கான பிராந்திய சேவை விருது மற்றும் TRF-ன் சிறப்பு மிக்க சேவைக்கான பாராட்டு சான்றிதழையும் அவர் பெற்றுள்ளார். அவர் பால் ஹாரிஸ் கூட்டாளராக அறக்கட்டளையை ஆதரிக்கிறார்.



**ஹென்ரிக் வாஸ்கான்சிலோஸ்,**
**இயக்குநர் 2023–25, RC ஃபோர்டாலீஸா-அலகாடிகோ, பிரேஸில்**

ஹென்ரிக் வாஸ்கான்சிலோஸ் ஃபோர்டாலீஸா பல்கலைக்கழகத்தில் படித்து சிவில் என்ஜினீயரிங் பிரிவில் பட்டம் பெற்றவர். 1969-ம் ஆண்டு பிறந்தவர். அந்த ஆண்டு தான் அவரது ரோட்டரி சங்கம் பட்டயப்படுத்தப்பட்டது. இரண்டு முறை DG-ஆக பணியாற்றிய தந்தையால் ஈர்க்கப்பட்டவர். 1996-ம் ஆண்டு வாஸ்கான்சிலோஸ், தமது தந்தையை அடிக்கடி பார்ப்பதற்கும், ரோட்டரிக்கு திருப்பிக் கொடுக்கும் நல்வாய்ப்பாகவும் கருதி ரோட்டரியில் சேர்ந்தார். 38 வயதில் RID 4490 மாவட்டத்தின் ஆளுநராக பணியாற்றினார். அது முதல் RI-ல் பல்வேறு பதவிகளை வகித்தார். பயிற்சிதலைவர், RC, RRFC, CoL பிரதிநிதி, ரோட்டரி மண்டலக் கழக தலைவர், RIPR, 2020-ம் ஆண்டில் ரோட்டரி சர்வதேச மாநாட்டு மேம்பாட்டுக்குழு உறுப்பினர் உள்பட பல பொறுப்புகளை வகித்துள்ளார். RC மற்றும் என்டௌமென்ட்-பரிசுக்குழுவின் ஆலோசகர் என்ற முறையில் TRF-ஐ ஆதரித்துள்ளார். 2009-ம் ஆண்டு முதல் ரோட்டரி அறக்கட்டளையின் பிரேசிலிய சங்கத்தின் குழு உறுப்பினராக சேவையாற்றி யுள்ளார். 6 ஆண்டுகள் ரோட்டரி பிரேசில் இதழில் கட்டுரையாளராகப் பணியாற்றியுள்ளார்.

பால் ஹாரிஸ் கூட்டாளர் என்ற முறையில் அவரும் அவரது மனைவி ரெனாடா மஸிடோ இருவரும் அறக்கட்டளையின் ஆதரவாளர் மற்றும் பயனாளர்கள். பெக்வெஸ்ட் சங்க உறுப்பினர். பெருநன்கொடையாளர். தன்னலமற்ற சேவைக்கான விருது பெற்றவர் வாஸ்கான்சிலோஸ்.



**யோங் ஹோ யுன்**
**இயக்குநர் 2023–25**
**RC மாஸன் தெற்கு, கொரியா**

யோங் ஹோ யுன், கொரியா சுற்றுலா சங்கத்தின் தலைவர். இது சுற்றுலாத்துறையை பிரதிநிதித்துவப் படுத்தும் நாட்டின் முதன்மையான நிறுவனமாகும். அவர் 1983-ல் ரோட்டரியில் சேர்ந்தார். 2013–14 ஆம் ஆண்டில் DG-ஆக இருந்தபோது இவர் தலைமையிலான குழு எடுத்த முன்முயற்சியின் காரணமாக மாவட்டம் TRF-க்கு முதல்முறையாக 1 மில்லியன் டாலர் பங்களிப்புச் செய்தது.

உதவித்தொகை, பெரும் பரிசுகள் குழு ஆலோசகராக மூன்றாண்டு பதவி வகித்தபோது 51 புதிய ஏகேஎஸ் உறுப்பினர்களைக் கண்டறிய உதவினார். ரோட்டரி இன்டர்நேஷனலில் ARPIC ஆகவும் இரண்டு முறை பயிற்சித் தலைவராகவும் பணியாற்றியுள்ளார். தன்னலமற்ற சேவைக்கான விருதுபெற்றவர் யுன். சிறந்த சேவைக்கான TRF விருதையும் பெற்றுள்ளார். அவரும் அவரது மனைவி ஹே சுக் லீ இருவரும் AKS அறங்காவலர் வட்ட உறுப்பினர்கள்.



**ஜான் ஹ்யூகோ,** பொதுச் செயலாளர்
**RC கீவ், உக்ரைன்**

ஜான் ஹ்யூகோ ரோட்டரி இன்டர்நேஷல் மற்றும் ரோட்டரி அறக்கட்டளையின் பொதுச் செயலாளர் மற்றும் தலைமை நிர்வாக அதிகாரி.

ஹ்யூகோ ஹார்வார்டு பல்கலைக் கழகத்தில் சட்டப்படிப்பில் பட்டம் பெற்றவர். ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழகத்தில் வரலாற்று பாடத்தில் முதுகலை பட்டம் பெற்றவர். நியூயார்க்கில் உள்ள ஹாமில்டன் கல்லூரியில் சோவியத் படிப்பில் இளங்கலை பட்டம் பெற்றவர்.

ஹ்யூகோ இல்லினாய்லில், எவன்ஸ்டனில் உள்ள RI-ன் உலக தலைமையகம் மற்றும் ஆறு சர்வதேச அலுவலகங்களில் உள்ள 800-க்கும் மேலான பலதரப்பட்ட ஊழியர்களை தலைமையேற்று வழிநடத்துகிறார். அவரும் அவரது துணைவியார் மார்கா இருவரும் பெருநன்கொடையாளர்கள்.

TRF அறங்காவலர்கள்...
அடுத்த இதழில்



# Apply yourself

As part of the family of Rotary, members are people of purpose, people of influence and people of action. Each year, committees that support Rotary and The Rotary Foundation focus on putting Rotary's strategic priorities into action, challenging clubs to increase their impact, expand their reach, enhance participant engagement, and increase Rotary's ability to adapt.

**Would you like to contribute to Rotary's success?**

RI and the Foundation are searching for qualified Rotarians and Rotaractors to apply their leadership skills and serve on a committee in the 2025–26 Rotary year. These positions offer an opportunity for you to share your vocational expertise and skill set and help ensure diverse perspectives within each committee. Rotarians and Rotaractors with areas of expertise as detailed on the opposite page are encouraged to apply. The number of openings is limited. If you are not selected this year, you are welcome to apply again next year.

All committees correspond through email and on virtual platforms, typically with one mandatory in-person meeting per year. Rotaractors are encouraged to apply to any area of expertise based on their background and the skills and experience detailed for each area. Dual members of Rotary and Rotaract are especially encouraged to apply.

To be considered for committee membership or to recommend someone for an appointment, visit *on.rotary.org/application2024*. Applicants must be registered on My Rotary at *my.rotary.org* and should make sure their My Rotary profile includes current contact information. Applications are due **August 15.**

| Area of Expertise | Function | Prerequisites | Openings |
|---|---|---|---|
| **Audit** | Advises leadership on audited financial reports, internal and external audits and internal control systems | Independence, appropriate business experience, and demonstrated financial literacy in accounting, auditing, banking, insurance, investment, risk management, executive management, or audit governance | One position with a four-year term |
| **Communications** | Advises leadership on Rotary's overall public image, branding, communications, content strategy and approach | Professional background and experience in internal and external communications, marketing, public image, brand and content strategy | Three positions with three-year terms |
| **Diversity, equity and inclusion** | Advises leadership and assists in the regional implementation of a diversity, equity and inclusion action plan | Professional or educational experience related to diversity, equity and inclusion | Three positions with three-year terms |
| **Finance** | Advises the RI Board on Rotary's finances, including budgets and sustainability measures | Professional background in a finance-related field with nonprofit experience preferred. Candidates should have experience in financial matters at the club and district levels. | Two positions with three-year terms |
| **Fund development** | Provides guidance and advice to The Rotary Foundation Trustees on all aspects of fundraising | Significant professional experience in fund development or fundraising. Committee members actively fundraise and support the Foundation. | Two positions with three-year terms |
| **Investment** | Oversees the management of Rotary's investments and the implementation of investment policies | Experience in investment and/or foundations or endowments with a preference for institutional investment experience | One position with a four-year term |
| **Learning** | Advises leadership on the creation of effective learning opportunities for Rotary leaders and members | Adult learning expertise within or outside Rotary. Experience in the professional learning field including e-learning and/or experience with planning and implementing learning events at the member, club, district, zone and international levels. | Three positions with three-year terms |
| **Operations review** | Advises leadership on the effectiveness of operations, administrative procedures, and standards of conduct. Serves as the advisory compensation committee to the Executive Committee of the RI Board. | Experience in management, leadership development or financial management, and thorough knowledge of Rotary's operations. Appointments are limited to past RI directors and past Foundation trustees. | One position with a six-year term |
| **Strategic planning** | Advises leadership on matters relating to the strategic plan | Significant experience in long-term planning, financial management, and RI and Foundation programme activities | Two positions with four-year terms |
| **Technology** | Advises leadership on enhancing technology practices, products, and strategy to improve the member and participant experience at Rotary | Expertise in technology development, product management, user/participant experience, and security and data privacy. Non-Rotarian technology experts may be appointed. | Two positions with three-year terms |



# எல்லாம் அறிந்த சாரதி!

TCA ஸ்ரீனிவாச ராகவன்

LBW

சமீபத்தில் என் தோழர் ஒருவருக்கு எனது காரில் லிப்ட் கொடுத்தேன். அவர் இறங்கிய பிறகு, என் டிரைவர் என்னிடம் அந்த தோழர் அரசாங்கத்தில் முக்கியமான பதவியில் இருப்பதாக சொன்னார். என் வகுப்புத் தோழரை இதுவரை சந்திக்காத அவருக்கு எப்படி அவரை பற்றித் தெரிந்தது என்பது எனக்கு ஆச்சரியமாக இருந்தது. எனது நண்பரை அவருக்கு எப்படித் தெரியும் என்று நான் அவரிடம் வினவியபோது, எப்போதுமே குறைவாக பேசும் அவர், ''ஓட்டுநர்'' என்று கூறினார். நான் திகைத்துப் போனேன். தனியுரிமைச் சட்டங்களைப் பற்றிய பல ஆரவாரம் இருக்கும்போதிலும், ஆபத்து முன் இருக்கையிலே அமர்ந்துக்கொண்டு, ஸ்டீயரிங் பின்னால் இருந்தது என்று எனக்கு ஒருபோதும் தோன்றவில்லை.

ஆனால் நகைச்சுவைகள் அப்பால், மகாபாரதப் போரின் காலத்திலிருந்து மனித விவகாரங்களில் ஓட்டுநர்கள் எப்போதும் முக்கிய பங்கு வகித்துள்ளனர். அர்ஜுனனின் தேரோட்டி யார் என்பதை நினைவிருக்கிறதா? கிருஷ்ணர். அர்ஜுனன் தனது உறவினர்களுடனான போரில் சந்தேகம் கொண்டிருந்த ஒரு முக்கியமான நேரத்தில் அவர் அர்ஜுனனை வழிநடத்தினார். அந்த வழிகாட்டுதலே நாம் அனைவரும் அறிந்த பகவத் கீதையாக மாறியது.

ஒரு சாரதி நேர்மறையான பாத்திரத்தை வகித்த ஒரே வேளை அதுவாக இருக்கலாம். சமிபத்திய காலத்தில, இந்தப் பத்திரிக்கையின் பழைய வாசகர்கள் சிலருக்கு நீண்ட காலம் அமைச்சராக இருந்த காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த ஒருவரின் வழக்கு நினைவுக்கு வரலாம். ஆனால் அவர் தனது வாழ்க்கையை எவ்வாறு தொடங்கினார் என்று யூகியுங்கள்? அப்போதைய காங்கிரஸ் தலைவரின் ஓட்டுநராக. இரு பிரிவினர் சண்டையிட்டுக் கொண்டதால் கட்சியில் உள்கட்சி பிரச்னை ஏற்பட்டிருந்த காலம் அது. காங்கிரஸ் தலைவரின் ஓட்டுநர் பின் இருக்கையின் உரையாடல்களைக் கேட்டு, அவற்றைப் போட்டிப் பிரிவின் தலைவரிடம் தெரிவித்தார். அந்த பிரிவின் வெற்றியில் அவர் முக்கிய பங்கு வகித்தார்.

எனது உறவினர் ஒருவருக்கு இரண்டு தசாப்தங்களாக அவர்களுடன் ஒரு ஓட்டுநர் இருந்தார். காலப்போக்கில், அவரது குடும்பம் கிட்டத்தட்ட எல்லாவற்றையும் ஓட்டுநரிடம் சொல்ல தொடங்கியது, ஏனெனில் அவர் முற்றிலும் நேர்மையாகவும் விசுவாசமாகவும் இருந்தார். நான் அவர்களுடன் எங்காவது செல்லும் போதெல்லாம், அவர்கள் அவருக்கு கொடுக்கும் சலுகைகளை பார்ப்பது எனக்கு ஆச்சரியமாக இருக்கும். ஒருமுறை அவர்கள் தங்கள் மூன்று வங்கிக் கணக்குகளைப் பற்றி விவாதித்து, எதை மூடுவது என்று யோசித்துக் கொண்டிருந்தார்கள். இயல்பாக ஒவ்வொரு கணக்கிலும் இருக்கும் தொகை வெளிவந்தது. இறுதியில், அவர்களின் கருத்து வேறுபாடுகளால் சோர்வடைந்து, டிரைவர் திரும்பி, வெவ்வேறு கணக்குகளில் எவ்வளவு பணம் உள்ளது என்பதையும், எந்த இரண்டை மூடுவது என்பதையும் அவர்களிடம் கூறினார். அவர்கள் கோபத்தில் வெடிப்பார்கள் என்று நான் முழுமையாக எதிர்பார்த்தேன், ஆனால் அவர்கள் பணிவுடன் ஒப்புக்கொண்டனர். அந்த அளவுக்கு அவர் முக்கியமானவர். ஆனால் அதிர்ஷ்டவசமாக அவர் மிகவும் விவேகமான மனிதர்.


எனது நண்பர் ஒருவர் 30 ஆண்டுகளாக ஒரே டிரைவரை வைத்துள்ளார், தனது மகள் காரில் செல்லும்போது வேறு யாரையும் அவரால் நம்ப முடியாது என்பார். எனது நண்பர் இப்போது பெரிதாக வெளியே செல்வதில்லை, ஆனால் டிரைவர் தினமும் வந்து காரை சுத்தம் செய்கிறார் மற்றும் நாள் முழுவதும் அவரது தொலைபேசியில் திரைப்படங்களைப் பார்க்கிறார். அவரும் முற்றிலும் நேர்மையானவர் மற்றும் உண்மையானவர்.

ஆனால் இந்த எடுத்துக்காட்டுகள் மிகக் குறைவு. நேர்மையின்மை மற்றும் துரோகம் என்பது தான் வழக்கம். சம்பளத்தின் மேல் சிறிய சன்மானமாக பெட்ரோல் திருடினாலும் பரவாயில்லை என்று ஒரு ஓட்டுநர் என்னிடம் சொன்னார். உரிமையாளரின் காரில் இருந்து எடுக்கப்படும் பெட்ரோலை தங்கள் இரு சக்கர வாகனங்களில் நிரப்பும் சிலரையும் நான் அறிவேன்.

ஓட்டுநரின் நடத்தைக்கு மிக மோசமான உதாரணம், அவரது விஐபி முதலாளியின் காதல் சந்திப்புகளை வீடியோ பதிவு செய்த ஓட்டுனரின் நன்கு ஆவணப்படுத்தப்பட்ட வழக்கு. இவருக்கு பல மாதங்களாக சம்பளம் வழங்கப்படவில்லை. அதனால் ஒரு நாள் முதலாளியை அந்த வீடியோவை வைத்து பிளாக்மெயில் செய்தார். இந்த மோசமான அத்தியாயம், இது சம்பந்தப்பட்ட அனைவருக்கும் மோசமாக முடிந்தது.

இதுபோன்ற விஷயங்கள் வெவ்வேறு சூழல்களில் பல முறை நடந்திருக்கும் என்பதில் நான் உறுதியாக உள்ளேன், ஏனென்றால் காரில் நம் உரையாடல்களுக்கு முழு அணுகல் இருப்பதை மறந்து விட்டு நம் டிரைவர்களை நாம் முழுமையாக நம்புகிறோம். அவர்கள் கேட்பதையும் பார்ப்பதையும் வைத்து அவர்கள் என்ன செய்கிறார்கள் என்பதை நாம் கட்டுப்படுத்த முடியாது. எனவே, குறைந்த பட்சம் காதல் விவகாரங்களைப் பொறுத்த வரையில், டாக்ஸியில் செல்வது நல்லது.■

Rotary
Club of
VIRUDHUNAGAR Dist- 3212



THE MAGIC OF ROTARY



PG U.JAYARAMAN
Pilot Faculty



Rtn VNMAK.RAJEEVAN
President



Rtn PAMS.SUSEENTHIRAN
Secretary

RYLA
Be an Entrepreneur

A Comprehensive 3500+ Minutes
**ENTREPRENEURSHIP DEVELOPMENT WORKSHOP**



We are ecstatic to reveal that we have successfully conducted and completed the program RYLA at J Guest, Jaffna, Srilanka.

RYLA- STOP WORRYING ABOUT JOB(S) START PRODUCING JOB(S)

**In JAFFNA**
**14th, 15th, 16th**
**JUNE 2024**

**CHIEF GUEST**
**Rtn AKS V.R.MUTHU PDG, RID 3212**
CEO, IDHAYAM FAMILY

**GUEST OF HONOR**
**Thiru NAVAJEEVAN ANANTHARAJ**
Founder, Puthiya Velicham | Social Entrepreneur

**RESOURCE PERSONS**
**PG JAYARAMAN UMASHANKAR**
Pilot Faculty | Secretary, PUNCH GURUKULAM | Corporate Trainer

**CO-FACULTY**
**PG SRINIVASAN JAYARAMAN**
**PG K.C.GURUSAMY**

31 Srilankan tamils participated in RYLA. 2 Winners have been Selected to Fly to India.

**RYLA - WINNERS**



Nalinashini Ampikaipathan



Vathsan Sharma




PUNCH PG GURUKULAM

Powered by
Puthiya VELICHAM

**TO ATTEND RYLA- JAFFNA 2.0 CONTACT**
Vasee +94 77 378 8795 - Navajeevan +1 416 272 8543

**IDHAYAM**
SAY IDHAYAM • SPELL HEALTH

For Future Participation in RYLA-INDIA Contact: 94431 66650 | 94433 67248

LEKHA ads/July 24/Rotary-2

ADVT.

Registered No. TN/CCN/677/2022-2024 | Total number of pages in this monthly issue, including cover, 84. Price: ₹40
Licensed to post WPP No.TN/PMG(CCR)/WPP-611/2022-24
Regd with RNI TNTAM/2018/76372. Rotary News Tamil Published 1st week of every month. Posted at Egmore RMS Patrika Channel. Date of posting: 9–15 every month.


# IIS (deemed to be UNIVERSITY) JAIPUR

FORMERLY ICG

**ADMISSIONS OPEN 2024-25**

www.iisuniv.ac.in

SCHOLARSHIPS FOR Meritorious and National Level Sports Achievers

Scan me for more Information

Toll Free No. **1800 180 7750**

## UG / PG / Ph.D. & Professional Programmes

3-Level Certificate/Diploma/ Advanced Diploma Value Added COSD Programmes alongwith Degree Programmes



### Undergraduate Programmes
- B.A.
- B.Sc.
- B.Com.
- B.A. / B.Sc. / B.Com. Hons.

### Specialized Programmes
- **B.Com. Hons.** (Proficiency in CA/CS) Specialized programmes and separate academic calendars for aspirants of CA & CS
- **B.Com. Hons.** (Applied Accounting and Finance) Accredited by ACCA UK

### UG-Professional Programmes
- **B.A.** (J.M.C.)
- **B.F.A.**
- **B.C.A.**
- **B.Sc. Hons.** (Data Analytics & AI)
- **B.Sc. Hons.** (Home Science)
- **B.Sc. Hons.** (Multimedia & Animation)
- **B.Sc.** (Fashion Design)
- **B.Sc.** (Jewellery Design & Technology)
- **B.B.A.**
- **B.B.A.** (Aviation & Tourism Management)
- **B.Voc.** - UGC Approved

### Integrated Programmes
- **B.A. B.Ed.**
- **B.Sc. B.Ed.*** - NCTE Approved
- **B.Sc. - M.Sc.** (Nano Science & Technology)

### Post Graduate Programmes
- M.A.
- M.Sc.
- M.Com.
- M.F.A.
- M.S.W.
- M.Sc. Home Sc.
- M.B.A.* (Semester Based)
- M.A/M.Sc Yogic Sciences
- DBT supported M.Sc. Biotechnology program

Professional Diploma in Clinical Psychology (RCI approved)

### Co-Educational Programmes
@ IISU Block, IIIM Campus, Mahaveer Marg, Mansarovar
- **B.C.A.**
- **B.B.A.**
- **B.Lib.I.Sc.**
- **M.A.** (Digital Media & Communication)
- **M.C.A.***
- **M.B.A.*** (Dual Specialization, Trimester based)

*MBA/MCA AICTE Approved

### Short Term Courses
- Cyber Security and Cyber Law (Online)
- Certificate Course in Textile Design

### Research Programmes
- **Ph. D. :** Admission through Research Entrance Test**

**RET Date 22 June 2024** **Exemption for NET-qualified applicants

### Preparatory classes along with UG / PG Programmes
- Civil Services
- NET
- US CMA

### College of Physiotherapy & Allied Health Sciences
(Co-Educational) @ IIS, Sitapura Campus
- B.P.T.
- M.P.T.
- Ph.D.

### DISTINGUISHING FEATURES
- Hostel with Modern Amenities
- Training and Placement Support
- Well Placed Alumnae
- Student Diversity (from India & Abroad)
- International Students Office
- Centrally Located
- Wifi Enabled Campus

FOR COUNSELLING AND ANY QUERIES, CONTACT AT:
ARTS & SOCIAL SCIENCES 93588 19994
SCIENCE 93588 19995
COMMERCE & MANAGEMENT 93588 19996
PHYSIOTHERAPY 89493 22320

Gurukul Marg, SFS, Mansarovar, Jaipur-302 020 Rajasthan (India) +91 141 2400160 / 161, 2397906 / 907 admissions@iisuniv.ac.in

ADVT.